கலாநிதி

கலை- 72 : கதிர்-01

ஜய-கார்த்திகை

2014 – நவம்பர்

புலவர்மணி
ம. பார்வதிநாதசிவம்

புலவர்மணி
ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பண்டித கழகத்தினின்றும்
கலையாக்கங் கருதி வெளிவரும்
மும்மாத வெளியீடு

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்
யாழ்ப்பாணம். இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி

கலை- 72 : கதிர்-01

வெளியீட்டுக் குழு

ஆலோசகர்
கல்விப் பணிப்பாளர், வட மாகாணம்.

வழிப்படுத்துவோர்
சோ. பத்மநாதன்
செ. சோதிப்பெருமாள்
வே. ஞானகாந்தன்
தி. பொன்னம்பலவாணர்

பொறுப்பாசிரியர்
ம.ந. கடம்பேசுவரன்

இதழாசிரியர்கள்
ஜெ. மணிமலர்
கெ. சர்வேஸ்வரன்

கணினி வடிவமைப்பு
ஜெ. மாதங்கன்

தொடர்புகளுக்கு:
ம.ந. கடம்பேசுவரன்
சங்கப் பொதுச் செயலாளர்,
சிந்துபுரம், வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

வெளியீடு:
ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்
பதிவிலக்கம்: HA/04/JA/302

மின்னஞ்சல் :
theorientalstudies@gmail.com

விலை: ரூபா 50/=

ISSN 2362-0579

இதழினுள்ளே...

சான்றோர் வாழ்த்து
சங்கத் தலைவரின் வாழ்த்துரை
பொறுப்பாசிரியரிடமிருந்து
சங்கச் செய்திகள்

முன்பு பதிவான கட்டுரைகள்

தமிழுரைப் பற்றிய ஒரு புதிய ஆராய்ச்சி முடிவு 11
நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

இலக்கிய இன்பம் 16
வித்துவான் பண்டிதர் கா.பொ.இரத்தினம்

வாழ்க்கையெனும் முதலீடு 40
மதுரைப் பண்டிதர் க.சச்சிதானந்தம்

புதிய கட்டுரைகள்

வடமாகாணத் தமிழ்த் தினவிழாவில் பண்டிதரின் வேண்டுகோள் 28
பண்டிதர் ம.ந. கடம்பேசுவரன்

ஆசிரியரும் விழுமியப் பண்புகளும் ... 31
திரு. சு. தியாகலிங்கம்

தாய்மொழி பேணாத தமிழர்கள் 34
கவிஞர் சோ. பத்மநாதன்

ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சி 45
உதயகலா நவதீசன்

கவிதைகள்

பழமையும் புதுமையும 52
ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

சிலந்தி வலையில் குளவி 33
காப்பியதாசன்

புலவர்மணி வரிசையில்...

ம.பார்வதிநாதசிவம் 53
ஜின்னாஹ் ஷரிபுத்தீன் 58
பரீட்சை விதிகள் 63

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017/11/26

"கலாநிதி யேநீ கவின்பெற் றெழீஇ
வானோ ருண்ணாக் கலையுடன் புணருபு
தேயா தென்றும் நிறைவு தலைக்கொண்டு
கறைவிர வாது தடைமரு வாது
தமிழகந் தன்னி லிகழ்விலா திலங்கி
ஆங்குச்
செறிதரூஉம் மக்கட் கறிவு முதிர
உரையாம் அமுதக் கதிரொளி பரப்பித
தயாநிதி யாம்இறை தண்ணரு ளதனால்
என்று நின்று நிலவி
வாழிபல் லூழி வாழிய இனிதே."

- வித்துவான் சி. கணேசஐயர்,
புன்னாலைக்கட்டுவன்

கலைகள் யாவுமுயர் நிலையி லுள்ளன
கருத்தை மாண்பொடு திருத்துமா
கவினு டைப்புலவ னெறியு டைக்கவிஞன்
கழகு தோறுநனி பழகினோன்
உலவிலா தவுள முறுச தாசிவ
னுவந்து பெற்றிடு மடக்கொடி!
ஓதி யோதிமகிழ் கோதி லாதபொருள்
ஒளிகொள் ஞாயிறென வுதவுவாய்!
அலைகொள் வாரியெனஅணிகள் யாவையும்
அணிந்து காட்சிபல அருளுவாய்!
அன்பு மேயமயில் வாக னப்பெயர்கொள்
அறிஞ னைச்செவிலி யென்னவே
நிலையு றப்பெரிது தலைமை வைத்துவளர்
நிதிய மாகிய கலாநிதி!
நெடிது வாழிபுகழ் நிறைய வாழிதமிழ்
நிலைய மென்றுமிக வாழியே.

- முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றோர் வாழ்த்து

"ஏறுபல கலைநிரப்பி யிருமைநல மருளி
எழுமைக்கு மகலாத இருந்துணையா யிருக்கும்
தேறுகலைப் பெருமாட்டி யிருளோட்டு திருத்தாள்
சிந்தைமொழி மெய்களினால் வந்தனைகள் செய்வாம்.

"ஈரெட்டுக் கலைமுற்றி யிறக்குமதி நாண
எண்ணெட்டுக் கலைபரப்பி யேறியெங்கும் பரவிக்
*காருற்ற விருளகற்றிக் "**கலாநிதி**" யாங்குழவி*
கண்ணுமுயிர்க் கவசமுமாய்க் கலந்து சிறந்திடவே"

- நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர்

பூமலி சூதம் பொற்புறு வருக்கை
வான்மலி பூகம் வளந்தரு தென்னை
அணிவரும் ஈழத் தணிபெறு சிரமாய்
இலங்குயாழ் நகரில் இன்புறத் தோன்றி
இருபத் தீரியாண் டெல்லை யதனிடை
ஆரிய மென்னும் பேரிரும் பௌவமும்
முத்தமிழ் அமுதத் தத்துமுந் நீரும்
நிலைகண் டுணர்ந்த கலைவல் லோரையும்
ஈன்று நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த
சான்றோர்க் கோம்படை தந்தினி தருளி
வளரா நின்ற ஆரிய திராவிட
சங்கமா மன்னை தளிர்க்கையிற் பயிலும்
ஓரியாண்டடைந்த ஒண்திருக் குழவீ!
ஒருகா லிருகா லோதியு மமையா
ஆரமு தூட்டும் அரும்பொருள் வைப்பே!
எம்மதி விளங்க மும்மதித் தோன்றிக்
குதலை மொழியிற் குரவனாய்த் தெருட்டும்
நவமதிக் 'கலாநிதி'! நாடொறு மோங்கி
அவனி மாறினும் ஆர்கலி பேரினும்
தவலா உயர்வு தரித்து
மலர்தலை யுலகில் வாழிய பெரிதே.

- சைவப்புலவர் ஸ்ரீ இ. நவரத்தினம், டிக்கோயா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத் தலைவரின் கருத்துரை

எளியநடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளிவுறுத்தும் படங்களோடு சுவடியெலாஞ் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.

– என்பார் பாரதிதாசன்!

சங்கத்தின் சஞ்சிகையான 'கலாநிதி' தெளிவுறுத்தும் படங்களோடு நல்ல சுவடியாக மீண்டும் வலம் வருதல் நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருகின்றது.

1921ஆம் ஆண்டு தோன்றி இன்று வரையும் பண்டிதர்களை, கல்விமான்களைத் தந்துகொண்டிருக்கும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் கல்வி வெளியீடுகளில் 'கலாநிதி'யும் ஒன்றாகும். பல ஆண்டுகளாக வெளிவந்த இம்மும்மாதச் சஞ்சிகை காலத்தின் போக்கில் தடைப்பட்டுப்போனது. எனினும் ஒன்பது தசாப்த காலப் பணிகளையும் உள்வாங்கி மீண்டும் மலரவேண்டும் என்ற எண்ணத்தால் சங்க நிருவாகிகள் மேற்கொண்ட நடவடிக்கையின் பேறே கலாநிதியின் வரவாகும்.

சங்கம் நூற்றாண்டை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதால் அதன் சீர்மை கண்டு கலாநிதி மீண்டும் மலராக எழுகின்றது. இந்நிலை கண்டு யான் இறும்பூதடைகின்றேன். கலாநிதியைப் பெற்று ஆதரவு வழங்குமாறும் அபிமானிகளைக் கல்வியியலாளர்களையெல்லாம் மனதார வேண்டுகின்றோம்.

இம்மலரைத் தொடர்ந்து வெளியிட முன்வந்திருக்கும் உள்ளங்களை வாழ்த்துகின்றேன். செம்மொழியாந் தமிழ் தொன்மை பொதுமை தனித்துவம் முதலாம் பதினொரு தகைமைகளைக் கொண்டதாகும். 6760 மொழிகள் உலகிலே பேசப்பட்டாலும், எட்டுச் செம்மொழிகளில் தமிழும் ஒன்றே. பெருமை மிக்க நம் மொழி தன் தனித்துவத்தைப் பேண இம் மலர் வழி சமைக்கும் - மொழியை வளர்க்கும் என மனதார நம்புகின்றேன்.

வாழ்க நந்தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாசிரியரிடமிருந்து...

1921ஆம் ஆண்டு ஐப்பசிமாதம் 17ம் நாளில் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தை வித்தியாபகுதியினர் ஆரம்பித்து வைத்தனர். மிகவிரைவில் நூற்றாண்டைச் சந்திக்கவுள்ள இவ்வமைப்பின் செயற்பாடுகள்; இலண்டன், நோர்வே ஆகிய நாடுகளுக்கும் விரிவுபடுத்தப்பெற்று வீறுநடை போட்டுக்கொண்டிருக்கும் வேளையில், சங்க இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது. எனினும், முயற்சியைக் கைவிடாது எமது பணியைத் தற்காலிக பணிமனையிலிருந்து தொடருகின்றோம். இன, மத, மொழி என்ற வேறுபாடின்றி பரந்தமுறையில் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், சிங்களம் போன்ற மொழிகளுடன் சைவம், கிறிஸ்தவம், பௌத்தம், இஸ்லாம் ஆகிய சமயங்களையும் உள்ளடக்கிப் பண்டித பாடவிதானத்தை அமைத்து இலங்கையர் என்ற உணர்வுடன் செயற்பட்டு வருகின்றோம்.

இச்சங்கம், 1950 இல், மிகக் காத்திரமான வெள்ளிவிழா மலரை வெளியிட்டது. அதற்குமுன்னர், வித்தியா சமயசமாசாரப் பத்திரிகை; என்ற பெயரில் பல செம்மையான ஆக்கங்களுடன் செய்திகளையும் உள்ளடக்கி மாதாந்த வெளியீடொன்றை சங்கத்தாரின் மேற்பார்வையில் கல்வித்திணைக்களம் வெளியிட்டது. அதில் சங்கத்துச் செய்திகளும் ஆசிரிய நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம் உள்ளிட்ட பலதரப்பட்ட வித்தியாபகுதிச் செய்திகளும் இடம் பெற்றன.

வித்தியா பகுதியினர் கல்விக்காக–ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தையும், கலைகளுக்காக – வடஇலங்கைச் சங்கீத சபையையும் தோற்றுவித்தமையால் பதவிவழித் தலைவராகவும், செயலாளராகவும் கல்வித்திணைக்கள உயரதிகாரிகள் இருவர் பதவிவகித்தனர். வித்தியாபகுதியினரின் அனைத்து வெளியீடுகளுக்கும் சங்கச்சான்றோர் உதவினர். சங்கத்தின் உன்னத நிலைக்குச் சான்றாகப் பல்கலைக்கழகம் தமது பேரவையின் (செனற்) உறுப்பினராகச் சங்க நிர்வாகத்தில் இருந்த இருவரை இணைத்துக் கொண்டதைக் கூறலாம்.

சங்கத்தின் ஒரு முக்கிய வெளியீடாக, 1942ஆம் ஆண்டிலிருந்து 'கலாநிதி' என்ற மும்மாத வெளியீடு வெளிவரத் தொடங்கியது. சங்க நிருவாகம் ஆலோசனைச் சபையாக இருக்க சங்கச் சான்றோர் சேவை அடிப்படையில் பிரதம ஆசிரியராக இருந்துள்ளனர். அக்காலத்தில் 'கலாநிதி' தன் கலைக் கதிர்களைத் தமிழகத்திலும் பரப்பியிருந்தது. அக்காலத்தில் தமிழகத்து அறிஞர் பலர் 'கலாநிதி'யில் எழுதிவந்துள்ளனர்.

இவை யாவற்றையும் கருத்திற்கொண்டு சங்கம் மீண்டும் 'கலாநிதிப் பத்திரிகையை வெளியிடுகின்றது. காலத்திற்கேற்ப மாற்றமுடன் மரபைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளமாகக் கொண்டு பன்முக அம்சங்களுடன் 'கலாநிதி' தொடர்ந்து வெளிவர மரபுசார்ந்த அறிஞரும் ஏனையோரும் உதவுவார்களென நம்புகின்றோம்.

இடப்பெயர்வுகளாலும் வேறு சில காரணங்களாலும் 'கலாநிதி' உட்படச் சங்கத்தின் வெளியீடுகள் பல முழுமையாக எம்மிடம் இல்லை. 'கலாநிதி'யின் பூரண வடிவற்ற பிரதியொன்றைச் சிற்பி அவர்களிடமிருந்து கலாநிதி **க.வைத்தீஸ்வரக்குருக்கள்** பெற்றுத் தந்தார்கள். இணைய வலையமைப்பில் 'கலாநிதி'யைப் பார்த்தோம். சங்க மாணவ உறுப்பினர் மா.கணநாதன ஒரு பிரதியைத் தந்தார். இவ்வாறு சில பிரதிகளையே எம்மால் தேட முடிந்தது. சங்க வெளியீடுகள் பதிப்புக்கள் பல உள்ளன. சங்கத்துச் சான்றோர் பலரால் வெளிப்படுத்தப்பெற்ற ஆக்கங்கள் பல வித்தியா சமாசார பத்திரிக்கை, கலாநிதி, வித்தகம், ஈழகேசரி, கலைப் பூங்கா முதலான வெளியீடுகளாக இடம்பெற்றுள்ளன. அவற்றைக் 'கலாநிதி'யின் மூலம் வெளிக்கொணர்ந்து பின்னர் நூலாக ஆவணப்படுத்தும் எண்ணமும் எமக்குண்டு. ஆகையால், கலாநிதி சஞ்சிகையைப் பெற்று ஆதரவும் தரமான ஆக்கங்களைத் தந்து ஊக்கமும் நல்கவேண்டுமென ஆசிரிய, மாணவ சமூகத்தினரையும், பெரியோர்களையும், ஆர்வலரையும், அனைத்து அன்பு உள்ளங்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

– செந்தமிழும் சீர்மிகு செம்மைக் கலைகளும்
வந்துபரவச் செய்வீர் விரைந்து –

'கலாநிதி' கலைச் செல்வரது ஆதரவை நாடி நிற்கின்றது. அவர் தாம் ஆராய்ந்து கண்ட அருமணிகளைச் சேமித்து வைத்தற்குக் 'கலாநிதி'யினை ஒரு கருவூலமாகக் கொள்வாராக. ஈழநாட்டு அறிஞர், அந்நாட்டில் உதித்த நூல்கள், நூலாசிரியர்கள், அவர்களை ஆதரித்த செல்வப் பிரபுக்கள் எனுமிவரது வரலாற்றினை ஆராய்ந்து வெளியிடுவாராயின் சோழ நாட்டினும், தொண்டை நாட்டினும், பாண்டி நாட்டினும், கொங்கு நாட்டினும் உள்ள தமிழ்ப் புலவர்கள் அவ் வரலாறுகளை உணர்ந்து பயன் துய்த்தல் கூடும். சமய வேறுபாடின்றிக் கலை வளர்க்கும் சங்கமானது அனைவரையும் தழுவி நடந்து வருகிறது. ஆதலின், எப்பாலாரும சங்கத்திற்குரிய கடமைகளை நிறைவேற்ற ஆர்வத்தோடு முன்வருவார்களாக.

"தமிழ் வளம் பொலிக; தமிழ்நாடு வாழ்க"

சுவாமி விபுலாநந்தர் *(வெள்ளி விழா மலரிலிருந்து...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுவழித் தமிழறிஞர் பண்டிதர் சி. அப்புத்துரை

கலாபூஷணம், சைவப்புலவர்
சு. செல்லத்துரை
ஓய்வுநிலை அதிபர்

மரபுவழியில் தமிழையும் சைவத்தையும் கற்றுத் தமிழ் வளர்க்கும் சான்றோனாய் வாழ்ந்தவர் அமரர் பண்டிதர் சிறீரங்கம் அப்புத்துரை அவர்கள். இவர் யாழ். இளவாலையிலுள்ள மயிலங்கூடல் என்னும் சிற்றூரில் பிறந்தவர். நல்லாசிரியராயும், சிறந்த அதிபராயும் கல்விப் பணி செய்தவர்.

தமிழ்மொழி வளர்ச்சியையே இலட்சியமாகக் கொண்ட யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் பண்டிதர் பட்டம் பெற்றவர். மல்லாகம் பண்டித மாணவர் கழகத்தில் சேர்ந்து புகழ்பூத்த அறிஞர்களான இலக்கண வித்தகர் இ. நமசிவாயதேசிகர், இலக்கிய கலாநிதிகளான மாவைப் பண்டிதர் க. சச்சிதானந்தன், ஏழாலைப் பண்டிதர் மு. கந்தையா, பண்டிதர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் க.நாகலிங்கம், பண்டிதர் பொன்னுத்துரை ஆகியோரிடம் முறையாகத் தமிழ் கற்றவர். பண்டித மாணவர் கழகத்தின் 'பண்டிதன்' எனும் சஞ்சிகையின் ஆசிரியராகவும் விளங்கியவர்.

ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தில் சொக்கன் அவர்கள் செயலாளராயிருந்த காலத்தில் பல ஆண்டு காலம் பொருளாளராயிருந்து சங்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவர். மானிப்பாயில் இயங்கிய பண்டிதர் வகுப்புக்குப் பொறுப்பாயிருந்து பல தமிழ் அறிஞர்களை உருவாக்கியவர்.

கல்விச் சேவையில் நல்லாசிரியராயும் புகழ்பெற்ற அதிபராயும் இருந்து கல்விமான்கள் பலரை உருவாக்கியுள்ளார். மயிலிட்டி அ.மி. பாடசாலையை 200 மாணவர்களுடன் பொறுப்பேற்று வளர்த்து 1000 மாணவர் கல்வி பயிலும் மயிலிட்டி வடக்குக் கலைமகள் மகாவித்தியாலயமாக்கிய பெருமைக்குரியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பெற்ற கல்விப் புலமையைச் சமூகத்திற்குப் பயன்படுத்த வேண்டும் எனும் நோக்குடன் 37 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். சிறப்பாக அன்றாட வாழ்வுக்குத் தேவைப்படும் திருமணக் கிரியை விளக்கம், அபரக்கிரியை விளக்கம், மகத்துவ விரதங்கள், தொடக்கு முதலான நூல்களை வெளியிட்டுள்ளார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் கௌரவ ஆட்சிக்குழு அங்கத்தவராயிருந்து பெரும்பணி புரிந்துள்ளார். தமிழ்ச் சங்கத்தில் மாதந்தோறும் நடைபெறும் "அறிவோர் ஒன்றுகூடல்" நிகழ்வில் ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு" பற்றி ஆய்வுரை நடாத்தியுள்ளார். அதன் பேறாக ஈழத்துப் புலவர்கள் 117 பேரின் வரலாறுகளைத் தொகுதது "ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு" எனும் பெயரில் மூன்று பாகங்களாக வெளியிட்டுள்ளார். பிரதேச சாதி, சமய பேதமற்ற முறையில் இவர் வெளியிட்ட இந்நூல்கள் காலத்தால் அழியாத பெருமைக்கு உரியன.

சென்னை சைவசித்தாந்தப் பெருமன்றத் தேர்வில் சித்தியடைந்து சைவப்புலவர் பட்டம் பெற்றுள்ளார். இலங்கை வானொலியில், இலக்கியச் சொற்பொழிவு, சமயச் சொற்பொழிவு, நற்சிந்தனைகள் வழங்கிய இவர் அவற்றையெல்லாம் தொகுத்து நூல்களாகவும் வெளியிட்டுள்ளார்.

இறந்தவர்கள் நினைவாக வெறும் புலம்பல்களுடன் கல்வெட்டு வெளியிடும் முறையை மாற்றி இறந்தவரின் நினைவாகப் பயன்தரும் நூல்களை வெளியிடும் முறையை வழிப்படுத்தி அதற்குத் தானே நூல்களை ஆக்கிக் கொடுத்தும், தொகுத்துக் கொடுத்தும் புதிய மரபினை உருவாக்கியுள்ளார்.

எழுதுவது போலவே இலக்கணப் பிழையற்ற செந்தமிழிற் பேசவும் வேண்டும் எனும் கொள்கையுடைய இவர் தான் அவ்விதம் பேசி வாழ்ந்து காட்டினார். எந்த வேளையிலும் தமிழ்ப் பண்பாட்டுச் சீருடையாகிய வெள்ளை வேட்டி, நஷனல், சால்வையுடனும் நெற்றியில் திருநீறும் சந்தனப் பொட்டும் விளங்க நடமாடினார்.

85 வயது வரை வாழ்வாங்கு வாழ்ந்த இவர் 2012-10-11ந் திகதி அமரத்துவம் அடைந்தார். இவர் நினைவாகச் "சைவ வாழ்வியல் கருமங்கள்" எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடக்கூடிய தாகும். சங்கத்தின் வளவாளரான இவரது பெரும் பிரிவிற்குச் சங்கத்தின் சார்பில் நமது அஞ்சலிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி க. நாகலிங்கம்

பண்டிதர் வரிசையில் பண்டிதமணி க. நாகலிங்கம் அவர்கள் முக்கியமானவர்கள்.

'புரந்தார் கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு

இரந்துகோள் தக்கதுடைத்து"

– என்பதற்கு ஒப்ப இவரது பிரிவினால் தமிழ் உலகு கண்ணீர் வடித்தது. அத்தகைய வாழ்வு இவருடைய வாழ்வு.

மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதராகவும், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பண்டிதராகவும் விளங்கியவர். எமது சங்கத்தால் 'பண்டிதமணி' எனக் கௌரவிக்கப்பட்டவர். சங்கத்தின் தனாதிகாரியாகவும், பிரதம பரீட்சகராகவும் கடமையாற்றியவர்.

பண்டிதர் அவர்கள், ஆசிரியர் பண்டிதமணி க.சுநவகீதகிருஷ்ண பாரதியாரின் பெருவிருப்பத்துக்குரிய மாணவராய் விளங்கியவர். இடையீடில்லா உழைப்பும், முயற்சித்திறனும், சுறுசுறுப்பும், வினைத் திட்பமும், சேவை மனப்பான்மையும் உடைய இவர், பல்துறை அறிவும், பேச்சாற்றலும் மிகுந்தவர்.

ஆசிரிய கலாசாலைப் புதுமுகத் தேர்வுக்குரிய எண்கணிதம், தமிழ், பொதுவிவேகப் பாடங்களை இலவசமாக நடத்தினார். பண்டித வகுப்புக்களையும் நடத்தியவர்.

செந்தமிழ் இலக்கணவிளக்கம் –04 பாகங்கள் செய்யுளியலும் அணியியலும், அகத்திணையியலும் புறத்திணையியலும், மெய்ப்பாட்டியலும் மரபியலும், நிருவாக உரை முதலான நூல்களை வெளியிட்டுள்ளார்.

பண்டிதமணி, இலக்கணவித்தகர், கலைச்சுடர் முதலான பட்டங்களும் இவரைக் கௌரவப்படுத்துகின்றன.

இவருடைய இறுதிக் காலத்தில் "என்ன சொல்ல விரும்புகிறீர்கள்? எனக் கேட்டபோது" என்னாலான பணிகளை எல்லாம் செய்து விட்டேன். இனிநான் விட்ட பணிகளைத் தொடருங்கள் என்று கூறினார். அவர் வழியில் தமிழை வளர்த்துச் செல்லவேண்டிய அரும் பெரும் பணி நமெக்கெல்லாம் காத்திருக்கின்றது.

– பண்டித மாணவக் கழகத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரைப் பற்றிய ஒரு புதிய ஆராய்ச்சி முடிவு

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

"தமிழர்", "தமிழ்" எனுஞ் சொற்கள் எவ்வாறு எழுந்தன என்பதையிட்டு அறிஞர்கள் பலர் பலவாறாகக் கூறிப் போயினர். தமிழ் என்பது "தம் உள்", அல்லது "தம் மொழி", அதாவது ஒரு கூட்டத்தார் தமக்குட் பேசிய மொழியாம் என்பர் ஒரு சாரார். தமிழ் எனும் சொல் "இனிமை" எனும் பொருளில் பிற்கால நூல்களுள் வழங்கியிருக்கின்றமையால், இனிமையான ஒரு மொழியைப் பேசுவோரே தமிழர் என்பர் ஒருசாரார் "சூரியன்" எனப் பொருள்படுகின்ற "தாமம்" எனுஞ்சொல்லே தமிழ் என மருவி வந்ததென்பர் ஒருசாரார். சூரியன் பெயர் இம்மொழிக்கு உண்டானமை எவ்வாறெள அன்னோரை வினாவுங்கால், அநுமான் சூரியனிடத்து இலக்கணங் கற்றமையாலும் கலைமகள் கீழ்திசை நோக்கி வீற்றிருக்கின்றமை யாலும் சூரியனே வித்தியாபதி என்பர். சிலர் தமிழ் எனுஞ் சொல்லை "த, அ, ம், இ, ழ்" என ஐந்து உறுப்புக்களாகப் பிரித்துப் பஞ்சாட்சரத்தையுடையதாகிய சைவசித்தாந்தத்தைக் கூறும் மொழியே தமிழ் என்பர். "தமி" என்றது தனித்தது; இணையில்லாதது எனும் அடியாற் பிறந்து "இமிழ்", "உமிழ்" முதலிய சொற்கள்போல "ழ்" விகுதிபெற்று வந்ததே தமிழ் என முடிப்பர் ஒருசிலர். இன்னுஞ் சிலர் வட நாட்டாருடைய பாஷை "வடமொழி" எனப்பட்டது போல தென்னாட்டாருடையது "தென்மொழி" எனப்பட்டுத் "தெம்மொழி", "தெமிழ்", "தமிழ்" என மருவியிருக்கலாம் என ஊகிப்பர்.

இவையெல்லாம் ஊகமாத்திரையைச் சொல்லிய உற்பத்திகளே. மொழிப் பெயர்கள் ஒவ்வோர் இடத்தில் நின்று அல்லது இடத்திலுள்ளோரில் நின்று வருவதே சகசம். ஆதலால் தம்முட் பேசியது தமிழ் என்று வந்தது எனல் அசம்பாவிதம் ஆகும். இவ்வாறே தமிழ் என்றுசொல்லிற்கு இனிமை என்ற பொருள் பின்வந்ததேயன்றி "இனிமையானது எது; அது தமிழ்" எனக் கூறஅமையாது.அது இனிமை யென்ற கருத்துள்ள யாதோர் அடியினின்றும் பிறந்ததாகத் தோன்றவில்லை. தமிழ்மொழி செவிக்கினிமையானது எனப்பட்டமையால், தமிழ் எனுஞ் சொல்லும் இனிமைப் பொருள் பெற்றது போலும் ! எவ்எம் மொழியாளரும் தத்தம் மொழியின் மேலுள்ள பேரன்பினால் அதுவது இனிமையானது எனல் சகசம். தெலுங்கரும் தம்மொழியைத் "தெலுகுதேனு" என்பர். தேன் போலினிப்பது என்பது கருத்து. தாமத்தையும் ஐந்துறுப்புள்ளமையையும் உற்பத்தியாகக் கூறுவோர் சொற்கலைக்குப் புறத்திப்பட்ட தத்துவப்பொருளையே விரிப்பர். தமித்தது தனக்கிணையில்லாதது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தமிழுக்கு உற்பத்தியாயின் பிறமொழிகள் யாவற்றையும் ஆராய்ந்த பின்பே தமிழுக்கு அப்பெயர் வரலாம். தென்மொழி என்ற பெயரும் வடமொழியோடு வைத்து ஒப்பிட்ட பின்னே எழத்தக்கது.

இவ்வாறே அவரவர் மதிநுட்பத்தாற் கற்பித்த உற்பத்தி எல்லாம் ஒவ்வொரு விதத்திற் பங்கிடப்பட்டுப் பொருந்தாமற் போகின்றன. மொழி ஆராய்ச்சி நன்றாக நிலைநாட்டப்பட வேண்டுமாயின் அதற்குச் சரித்திர ஆராய்ச்சியின் துணை இன்றியமையாதது. பழஞ் சரித்திரங்களை நாம் ஆராயுங்கால் தெர்மிலே திரமிலே (திரமேலிர்) என்ற பெயரும் பண்டைத் தமிழருடைய பழக்கவழக்கங்களும் கொண்ட ஒரு குலத்தவர்களைப் பற்றிய ஒரு வரலாறு கேட்கப்படுகின்றது. கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அதாவது இற்றைக்கு 2500 வருடங்களுக்கு முற்பட்ட கிரேக்க இதிகாச நூலாசிரியரான எறொடோத்துஸ் என்பவருடைய நூலில் அதனைக் காண்கின்றோம். எகிப்து பபிலோனியா முதலான தேசங்களில் விஸ்தாரப் பிரயாணஞ் செய்து அவ்விடத்துப் பழங்கால ஐதிகங்களை எழுதி வைத்தவரான இவர், கிரேகக தேசத்திலுள்ள லீசியா எனும் பிரிவின் பண்டைக் குடிகளைப பற்றிச்சொல்லுமிடத்து; லீசியர் முன்னாளில் தெர்மிலே (அல்லது எக்காற்றேஸ் என்பவர் எழுதுகின்றபடி திரெமிலே)என்ற பெயர் உடையோராய் இருந்தனரெனவும், தம்காலத்தில் அன்னோர் தங்களை லீசியர் என்று சொல்லிக் கொண்ட போதிலும் பிறர் அவர்களை தொமிலே என்றே அழைத்து வந்தனரெனவும் கூறுகின்றார். இன்றும், அவர் கூற்றுப்படி, இத் தெர்மிலே அல்லது திரெமிலெ முன் கிறேத்தா எனும் தீவில் வசித்தவர்கள்;அத்தீவில் இருந்தோரெல்லாம் இவர்களைப் போன்ற மிலேச்சர்களே; அங்கு மீனொஸ் சர்பேடொன் எனும் இருவர் சகோதர்களுக்கிடையில் அரசுரிமைபற்றிய போர் மூண்டபோது, மீனொஸ் சர்பேடொனை வென்றதினால் இச் சர்பேடொனும் இவனைச் சார்ந்து போராடிய திரெமிலரும் அந்நாளில் மீலியஸ் என்று சொல்லப்பட்ட நாட்டில் வநது குடியேறினர். மீலியஸ் நாடே பின் லீசியாவாயிற்று; திரெமிலரே லீசியராயினர். இவர்களுடைய பழக்கவழக்கங்களுள் ஒன்று வேறு எந்தச் சாதி சனங்களுள்ளும் காணப்படாதது; அது யாதெனில், இவர்கள் தங்கள் வழிமுறையைத் தந்தையில் நின்றன்று, தாயில் நின்று எடுத்துச் சொல்லுகின்றவர்கள்; ஒருவனிடம் அவன் குலவழியைக் கேட்டபின் அவன்.தகப்பனின் வமிசாவழியை அல்ல, தாய்வழி வமிசாவழியையே எடுத்துக் கூறுவான்; ஒரு குலமகள் அடிமை மகனை விவாகஞ் செய்து கொள்ளின் இருவர்க்கும் பிறந்தபிள்ளை மேற்குலத்ததாக எண்ணப்படும்; அடிமைக் குலமகளை மணந்தாலோ சந்ததி அடிமையாக மதிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறொடோத்துஸ் சொல்லிய குணங்குறியுள்ள அக்காலத்து மக்கள் தமிழரே. இச் சாதியாருள் இன்றைக்கும் பெண் தலையிடம் பெற்றிருத்தலைக் காணலாம். பிளினி எனும் உரோம நூலாசிரியர் பாண்டியர்களுள் மட்டும் பெண்கள் அரசாளும் வழக்கம் இருந்ததெனக் கூறியதும் இங்கு நோக்கத்தக்கது. இன்றைக்கும் மலையாளத்தில் பெண்களுக்கே ஆண்களிலும் கூடிய உரிமைகள் உள. அரசனின் உடன் பிறந்தாள் அரசி எனும் பட்டத்திற்கு உரியளாவள். அரசன் மகனல்ல அவன் மகனும் மகளுமே இளைய இராசா, இளைய இராணி எனும் நாம கரணத்திற்கு இலக்கானவர்கள். அதன் ஒரு பாகத்தில் மாமன் பெயரைத் தந்தை பெயராகக் கொள்ளும் மருமக்கட்டாயம் வழங்கியதால் அது நாரீசேரம் எனப் பெயரடைந்ததையும் நோக்குக. தாயம் என்ற சொல்லும் தாய் ஆட்சியைக் காட்டுவது போலும். யாழ்ப்பாணத்தில் மூக்காற்பங்கு நிலம் பெண்களுடையது. பெண்ணரசு தமிழகத்தில் விளங்கிய காலங்களும் உள. பெற்றோரைக் குறிக்குமிடத்துத் தந்தை தாய் என்றன்றித் தாய்தந்தை, அன்னையும் பிதாவும் எனக் கூறும் வழக்கத்தையும் காண்க. கடவுளை ஆதித்தமிழர் பெண்ணுருவாகச் சொல்லியதும் ஒன்று. ஆகவே எறொடோத்துசுடைய திரெமிலே பெண்வழியைப் போற்றிய வழக்கம் இக்காலத் தமிழருடையதை ஒத்திருக்கக் கணலாம். கிறேத்தா தீவைத் திரெமிலருடைய வாஸத்தானமாகப் பழைய சரித்திராசிரியர்கள் காட்டியதற்கு இணங்க, அத் தீவின் பழைய பெயரும் த்ரிமிலே என்றிருந்ததையும், லீசியர் தங்கள் பிரேதக் குழிக் கல்வெட்டுக்களில் தங்களுக்கு த்ரமிலே என்ற பெயர் பொறித்து வந்ததையும் நோக்குக. அத்தீவின்பழைய நாகரிகமும் தமிழ் நாகரிகமும் ஒன்று என்பது இன்றைக்கு நன்றாய் நிலை நாட்டப்பட்ட ஒரு உண்மை. அதற்கு இலிங்க ஆராதனம், தாய்த்தெய்வ வழிபாடு ஏறு தழுவுதல் பிணங்களைத் தாழியிலிட்டுப் புதைத்தல் ஆகிய பல மறுக்கொணாத ஒப்புமைச் சாட்சிகள் உள.

எறொடோத்துஸ் கண்ட இடங்களில் திரெமிலே (அல்லது திரமேலீர்) எனப்பட்ட தமிழர் பரதக்கண்டத்திலேயும் முற்காலத்தில் திரெமிளர் என அழைக்கப்பட்டமையை இனி நோக்குவோம். தமிழ் நூலாசிரியர்களுள் முதன் முதல் இதற்குச் சாட்சியானவர் இற்றைக்கு முந்நூறு வருசங்களின் முன் "பிரயோகவிவேகம்" எனும் நூலை இயற்றிய சுப்பிரமணிய தீட்ஷிதர் ஆவார். இவர் "த்ரமிள" எனும் வடமொழிப் பெயர்தான் "தமிழ்" எனச் சிதைந்து வந்தது எனச் செப்பினர். இப்பெயர் வடமொழி நூல்களுள் திரவிடம், திராவிடம் எனச் சிறிது திரிந்து வழங்கப்பட்டதை மனுஸ்மிருதியிலும், பிற்பட்ட வடமொழிப் புராணங்களிலும் காண்கின்றோம். சில இடங்களில் தென்னாட்டார் அனைவரையும் பொதுவாய்க் குறித்த இப் பெயரீடு தமிழருக்கே சிறப்பாய்ப் பொருந்துவது என்றதைக் கி.பி 7 அல்லது 8-ம் நூற்றாண்டைச் சேர்ந்த குமாரிலப்பட்டர் "ஆந்திர த்ராவிட பாஷா" என்று வகுத்துக் கூறியதனால் விளங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தார். ஆந்திரம் என்றது தெலுங்கு. கன்னடத்தை இவர் தெலுங்கோடு சேர்த்தார் போலும். அக்காலம் மலையாளம் தமிழிலிருந்து முற்றாகப்பிரிபடாது நின்றமையால் அது தமிழுள் அடங்கும் உள்ளபடி தமிழர், கன்னடர், தெலுங்கர், மலையாளர் எல்லாம் ஆதித்திரமிளருள் அடங்கியவர்களே. பிற்காலம் மட்டும் தமிழர் எனச் சிறப்பித்துக் கூறப்பட்ட தென்னாட்டாருக்குத் "திரெமிளர்" எனும் பெயர் வேறுகூறப்பட்து. இவர்களுடைய மொழிதான் "திரெமிளம்" எனச் சிறப்புப் பெயர் அடைந்தது. தமிழ் வடநாட்டாரால் திராவிடம் என வழங்கப்பட்டதற்குக் குமாரிலப்பட்டர் கூற்று ஒரு நற் சான்று.

திரெமிலே (திரமேலீர்) எனும் பெயர் தென்னாட்டில் தமிழர் என மருவி வழங்க, வடமொழி நாடகங்களிலும் சமணர் நூல்களிலும் அது தவிர, தமிள என மாறுவதாயிற்று. ஆயினும், கிபி 6-ஆம் நூற்றாண்டிலேதான் வராகமிகிரரின் நூலின் பழங் கையெழுத்துப் பிரதிகளில் "த்ரமிட" எனும் உருவம் காணப்பட்டது. அந் நூற்றாண்டிலேயே மங்கலேச அரசன் சாசனங்களில் 'திரமில' என வருகின்றது. தென்னிந்தியத் தமிழரை அறிந்த கிரேக்க ஆசிரியர்கள் தங்கள் நூல்களில் தமிழர் என்ற பிற்கால உருவத்தைத்தான் தமேராய் ஆகிய வெவ்வேறு வகையாய்த் திரித்து எழுதினர்.

இவ்வாறாயின் தெர்மிலே அல்லது திரெமிலே என்னுஞ் சொல்லின் பொருள் யாது? பழஞ்சொல் ஆராய்ச்சி முடிபுகளின்படி, தெர்மிலே என்பது திரெமிலே எனும் உருவத்தின் ஒலி மாற்று வடிவம். திரெமிலே என்பது திரமேலீர் எனும் பழந் தமிழின் கிரேக்க வடிவம். திர என்பது திரை எனுஞ் சொல்லின் பழைய வடிவம். கடல் என்பது அதன் பொருள். திரைமேலீர் என்பதில்–இர் என்பது வேளிர் மகளிர் என்பவற்றின் போல உயர்திணைப் பன்மையை உணர்த்தும் பழைய கடைநிலை–இர் இன்றைக்கு பெரும்பாலும் – அர் என நிற்கின்றது. ஆகவே திரமேலீரை இன்றைய வழக்கின்படி திரைமேலர் என வேண்டும். திரைமேலரையே கிரேக்கர் திரெமிலே என்றும் தெர்மிலே என்றும் திரித்துச் சொல்வோராயினர் என்க. கடல் மேல் செல்வோர் கடலோடு சம்பந்தம் கண்டோர் என்பதுதான் திரைமேலர் என்பதின் கருத்து. பிரயாணம் பயணம் என்று வந்தது போல, திரமேலர், தமிலர் என வந்தது. தமிழர் பேசிய மொழி தமிழ் என்றாயிற்று. தமிழர் ஆதியிலே கடல்மேல் வலிபடைத்தோராய் இருந்தனர் என்றமை பல ஏதுக்களாலும் பெறப்படும். இதனாலேதான் போலும் அவர்களுள் பிற்காலத்திலும் பரவர், திரையர், திமிலர், மீனர் எனும் முக்கிய பிரிவினர் இருக்கக் காண்கிறோம்.

பரவர் பாவையின் மீது செல்லுவோர். இவர்கள் சிந்துவெளியில் மிக்கிருந்ததை அவ்விடத்துக் கண்டெடுத்த சித்திர லிபிச் சாசனங்கள் காட்டும் என்பர். திரையர் எனுஞ் சொல் திரமிலர் என்பதைப்போலத் திர எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியாய்ப் பிறந்து, நெய்தல் நிலத்தலைவரைக் குறிப்பது. திமிலரும் நெய்தல் நில மக்களே. திமில் என்பது திரைமேற் செல்வது; கட்டுமரம், மீன்படகு. இது கடற்றொழிலாளரையே குறிக்கும். திமில் என்ற சொல்லிற்குத் "திரைமேல்" என்பதே சப்த உற்பத்தி ஆயின், தமிழரும் திமிலரும் எனும் இரு சொற்களும் ஒரே அடியாற் பிறந்துள்ளமை நோக்கி மகிழத்தக்கது. பாண்டியன் மீன் கொடியுயர்த்தியதும் அவன் மீனவர் தலைவன் என்றமையினாற் போலும். கிறேத்தாத் தீவின் மீனொஸ் எனும் தலைவனையும் இங்கு நினைக்கத் தகும். அவன் பெயர் மீனன் போலும். அத்தீவில் கடலோடு சம்பந்தம் பூண்டிருந்த சாதியார் திரமிலர் என்று வழங்கப்பட்டமை மிகப் பொருத்தமுள்ளதே ஆகின்றது. தமிழர் பண்டுதொட்டுத் கடற் செலவிற் சிறந்தவர்கள் என்பதற்கு அன்னாருடைய மொழியிற் கடல், பரவை, புணரி, ஆர்கலி, முந்நீர் எனச் சமுத்திரத்தையும், கலம், தோணி, மிதவை என மரக்கலத்தையும் குறிக்கும் பழந்தமிழ்ச்சொற்கள் பல இருத்தலும் சான்று. திரமிலர் எனும் சொல்லுற்பத்தி இவ்வாறாயிருக்க வடமொழியில் அதற்கு வேறொரு பொருள் கொள்ளலானது எப்படி? பின்னாளில் வடஇந்தியாவில் வந்திறங்கிய ஆரியர் தம்மொடு போர் முனைந்து முதுகு கொடுத்து தென்னாட்டை அடைந்திருந்தோரின் பழைய பெயரையே திரமிளர் என்றும், அப்பாற் திரவிடர், திராவிடர் என்றும் படிப்படியாய் மாற்றி வைத்துக்கொண்டு, அன்னோர் தோற்று ஓடியதை அவர்களது பெயரோடு பொருத்திற்று (துரத்து) எனும் அடியாய்ப் பிறந்ததே "திராவிடம்" எனும் சொல் என்றனர் போலும். இது பின்னெண்ணத்தால் எழுந்த சொற் பிறப்பே என்பதே வெளிப்படை. ஸமஸ்கிருதத்திலே தமிழிலின்றும் சென்றடைந்த வேறு பல சொற்களுக்கும் இவ்வாறே அம் மொழியாளர் பொருந்தாத சப்தோற்பத்தி செய்திருத்தல் பிரசித்தம் என்பதை எமது சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியில் ஆங்காங்குக் கண்டுகொள்க.

திரமிளம் எனும் உருவம் தமிழ் என்பதற்கு முந்தியது எனக் காட்டும் சான்றுகள் பல உள. தமிழ் நூல்கட்கு முற்பட்ட சமஸ்கிருத நூல்களில் திரமிளம், திராவிடர் எனும் உருவமே வழங்குகின்றது. பஞ்ச திராவிடம் எனும் தேசப் பெயரையும் நோக்குக. தமிழ் பாகதங்களுள் ஒன்றாகிய மலையாளத்திலுள்ள பழைய நூல்களிலும் திரமிளர் (Diramila) எனும் பெயரன்றி தமிழர் என வருவதில்லை. ஆதிகாலந்தொட்டுத் தமிழரோடு அடுத்து வசித்திருக்கின்ற சிங்களரும் அன்னோரை "ந்தமிழ" என அழைத்து வருகின்றமையும் ஒன்று. இன்னன பல ஏதுக்களைக் கொண்டு போலும் ஈசானதேசிகர் ஆகியோர் தமிழ்ச் சொல்லுக்குத் திரமிளச் சொல்லுற்பத்தியைக் கூறிப்போந்தனர். அவ்வுற்பத்தியே

சாத்திர ஆராய்ச்சியால் வலியுறுகின்றமை இதுகாறும் சொல்லியவற்றால் விளங்கும்.

(*கலாநிதி 1949*)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய இன்பம்

வித்துவான் பண்டிதர் கா.பொ. இரத்தினம்

ஒருமொழியைப் பேசும் மக்களின் உயிர்ப்பைக் காட்டும் பளிங்கு அம்மொழியின் இலக்கியமேயென்று மேனாட்டறிஞர் கூறுகின்றனர். ஒரு மொழியின் பெருமையும் அம் மொழியைப் பேசும் மக்களின் சீரும் சிறப்பும் அம் மொழியிலுள்ள இலகியத்தையே பொறுத்துள்ளன. மொழியின் உயிர்நிலை இலக்கியம் என்றும் கூறல் சாலும். கார்லைல் எனும் ஆங்கில அறிஞர் கூறுய "இந்திய சாம்பிராச்சியத்தை இழக்க விரும்பினும், ஷேக்ஸ்பியருடைய நாடகங்களை இழக்க ஆங்கில மக்களில் ஒருவரேனும் விரும்பார்" என்னும் கூற்று இலக்கியத்தின் எல்லையற்ற பெருமையை நன்கு புலப்படுத்துகின்றது.

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலை வனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை"

என நெடுஞ்செழியன் எனும் பண்டைத் தமிழ் வேந்தன் கூறிய வஞ்சினமும் புலவர்களின் படைப்பை- இலக்கியத்தை- அவன் எவ்வாறு மதித்துள்ளான் என்பதைக் காட்டுகின்றது. அலெக்சாந்தர் என்னும் கிரேக்க மன்னரும் நாம் பல திசைகளிலும் படையெடுத்துச் சென்றபோது வேறொரு நூலையும் எடுத்துச் செல்லாது, ஹோமர் என்னும் புலவர் பெருந்தகை இயற்றிய 'இலியட்' என்னும் நூலை மாத்திரமே கொண்டு சென்றார் என்பர்.

இவ்வாறு இகல் வேந்தராலும் போற்றப்படும் இலக்கியம் என்புது யாது? அதனாற் பெறப்படும் இன்பம் யாது?என்பவற்றை ஈண்டு ஆராய்வோம்.

இலக்கியம் எனும் சொல் லக்ஷ்யம் எனும் வடமொழிச் சொல்லின் திரிபென்றும், 'லக்ஷ்மி' எனுஞ் சொல் இலக்குமி என்றாயது போல 'லக்ஷ்யம்' என்பது இலக்கியம் என்று ஆகியது என்றும், அது நோக்கம் குறிக்கோள் முதலிய பொருள்கள் உடையதென்றும் சிலர் கூறுவர். வேறு சிலர், இலக்கணையாற் பொருள் கொள்ளக் கிடப்பது இலக்கியம் என்றும் இலக்கணை என்பது குறிப்பென்றும் உரைப்பர். இலக்கியம், இலக்கணம் என்பதை தமிழ்ச் சொற்களே என்றும் 'இலக்கு' எனும் பகுதியிலிருந்து தோன்றின என்றும், இலக்கு எனும் பகுதி முதலில் இலையை உணர்த்திப் பின் எழுத்தைக் குறித்தது என்றும் அஃதே ஆகுபெயராக நூலையும் நூற்றொகுதியையும் குறிக்கிறது என்றும் கருதுபவரும் உளர். இவர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இவ்வுரு நெஞ்சென்னுங் கிழியின் மேலிருந்து இலக்கித்து...."

எனுஞ் சிந்தாமணியடியில் இலக்கித்து என்பது எழுதி என்னும் பொருளில் வந்துள்ளதென்பதையும், ஆங்கிலத்தில் இலக்கியத்தைக் குறிக்கும் 'லிற்றரேச்சர்' எனும் பதமும் எழுத்து என்னும் பொருளைத் தரும் அடியிலிருந்தே பிறந்ததென்பதையும் எடுததுக் காட்டித் தம் கூற்றை நிலை நாட்டுகின்றனர்.

'ஆரணங் காணென்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமகன் நூலிதென்பா
ஏரணங் காணென்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே" எனும் செய்யுளில் எழுத்தென்பது இயற்றமிழிலக்கியத்தைக் குறிப்பதும் காண்க

அளவை நூலார் இலக்கணத்தாற் காரியப்படுவது இலக்கியம் என்றனர். சைனப்புலவர்கள் சீவகசிந்தாமணி, சிலப்திகாரம் முதலிய காவியங்களை இலக்கியம் என வழங்கினர். பாரதம், இராமாயணம் போன்றவற்றை இலக்கியம் என்றார் நச்சினார்க்கினியர். தமிழ் நூலார் "இலக்கியங் கண்டதற் கிலக்கணமியம்பலின்" என்பர். அந்தாதி, கலம்பகம், கோவை முதலியவற்றை இலக்கியம் என்பது உலக வழக்கு. சங்க இலக்கியம், இதிகாச இலக்கியம், காவிய இலக்கியம், திருமுறை இலக்கியம், புராண இலக்கியம், பலவகைப் பிரபந்த இலக்கியம் எனத் தமிழிலக்கியத்தைப் பல வகையாகப் பிரித்தனர் சபாபதி நாவலர். இக் காலத்திற் பாட்டுக்களானியன்ற நூல்கலை மாத்திரமின்றி உரையால் ஆக்கப்பட்ட நாடகம் சிறுகதை முதலிய பலவற்றையும் இலக்கியம். என வழங்குகின்றோம். ஆரிய மொழியிலும் பாட்டானியன்றவை பத்தியமென்றும், உரையாற் செய்யப்பட்டவை கத்தியமென்றும் பாட்டும் உரையும் என்னும் இரணடாலும் ஆக்கப்பட்டவை சம்பு என்றும், இம் முத்திறத்தன யாவும் இலக்கியமென்றும் கொள்ளப்படுகின்றன. ஆங்கிலம் முதலிய மேனாட்டு மொழிகளிலும் பாட்டு உரை ஆகிய இரண்டினாலும் ஆக்கப்பட்டவற்றையே இலக்கியமென்கின்றனர்.

இனிஇலக்கியம் எத்தகையது என்பதுபற்றி ஆராய்ந்துரைத்த மேனாட்டறிஞர் பலர் பல்வேறு கருத்துக்களையுடையவர்களாகக் காணப்படுகின்றனர். "மக்கள் யாவருக்கும் பொதுவாகப் பயனளிக்கும் நூல்கள் மாத்திரமே இலக்கியம்." என்று கூறினார் ஹட்சன் எனும் ஆசிரியர். இவருடைய கருத்துக்கு மாறாக ஒரு சிலருக்கு மாத்திரம் பயன்படும் சட்டநூல், தத்துவ நூல், சரித்திரநூல் முதலிய பல நூல்களுங் கூட இலக்கியத்தின் பாற்படும் என உரைத்தார் ஹாலம் என்பார். மோர்லி, எமர்சன், நியூமன், கார்லைல் முதலிய ஆசிரியர்களுடைய கூற்றுக்கள் மேலே கூறப்பட்ட இருவர் கூற்றுக்களுக்கும் இடையில் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்ட பல்வேறு கருத்துக்கள் காணப்படினும் இலக்கியம், இத்தகையதென்பதை மொழிகளின் வரலாற்றினையும் புலவர்களின் கூற்றுக்களையும் பிறவற்றையும் ஆதாரமாகக் கொண்டு நாம் அறிந்து கொள்ளலாம்.

உலகத்திலுள்ள மொழிகளிலெல்லாம் தொடக்கத்தில் பாட்டுருவத்திலேயே சிறந்த இலக்கியங்களை இயற்றினர். காலம் செல்லச் செல்ல உரைநடையிலும் இலக்கியங்கள் எழுதப்பட்டன. தமிழ்மொழியிற் பல்வகைப் பாவினங்கள் இருக்கின்றவாகையால் தமிழ்ப் புலவர்கள் இலக்கியங்களை எழுதுவதற்கு வடமொழியிற் போல் உரைநடையை அதிகம் பயன்படுத்தவில்லை என்பது பெறப்படும். எனினும் உரையும் செய்யுள் வகைகளில் ஒன்றே என்றும், பாட்டுடன் விரவி நூல்களில் முன்பும் பயின்றுள்ளதெனவும் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், பெருந்தேவனார் பாரதம் முதலிய நூல்களால் அறிகிறோம். ஆகவே, தமிழ் மக்களும் பாட்டையும் உரையையும் இலக்கியத்திற்குரிய வடிவங்களாகக் கொண்டுளர் என்பது பெறப்படுகிறது. இவ்வாறாயின் இவ்விரு வடிவங்களிலுமுள்ள நூல்கள் யாவும் இலக்கியமாகுமா? என்ற வினா எழும்புவது இயல்பே. இவ்வினாவிற்கு விடை காண்போம்.

இலக்கியம் ஒரு படைப்பு; பிரமனுடைய ஆக்கற்றொழிலை ஒத்தது! பிரமன் படைக்கின்ற உடம்புகள் அழிந்து போகின்றன. அறிஞர்கள் படைக்கின்ற இலக்கியங்களோ என்றும் அழியாத உடம்பும் உயிரும் உடையன. இந்த உண்மையை குமரகுருபர் மிக விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்.

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன் செய்
வெற்றுடம்பு மாய்வதுபோல் மாயா புகழ் கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு – என்பது அவர்கூற்று.

'உண்மையான படைப்புக்களைச் செய்பவன் புலவனே' எனக் கதே எனும் பேராசிரியரும் கூறா நிற்பர்.

இலக்கியங்களுக்கு உயிர் பொருளும், உடம்பு சொற்களுமாம். இதனையே "இழுமின் மொழியான் விழுமிய நுவலின்" எனத் தொல்காப்பியரும் கூறியுள்ளார். சிறு குழந்தைகள் மண்ணினாற் சிற்றிலமைத்து விளையாடுவது போல் விநோதார்த்தமாகச் சிலவற்றை ஆக்கிவிட்டு அவற்றைச் சிறந்த இலக்கியமென்று கூறிவிட முடியாது. .'

'பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நன்னூலாசிரியர் கூறிய செய்யுளிலக்கணம் இலக்கியத்திற்கும் மிக மிகப் பொருத்தமானது. என்னை? அழகுபெறப் படைக்கும் ஆற்றலுடையவர்களாற் செய்யப்படுவதுதான் இலக்கியமாதலின், உணச்சிப்பெருக்கிலே–கற்பனைச் செறிவிலே– கவிதை வெறியிலே திளைத்துத் தாம் பெற்ற அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு தம் நுண்மாணுழை புலத்தால் உலகத்தவர்கள் அழகையும் உண்மையையும் கண்டு இன்பமடையத்தக்கதாக இலக்கியங்களை ஆக்கும் ஆற்றலுள்ளவர்கள் மிகச் சிலரே. இவர்களையே மெய்ப்புலவர்கள் என யாவரும் போற்றுகின்றனர். இவர்கள் ஒரு காட்சியையோ கதையையோ கருத்தையோ கூறும்பொழுது அதற்குப் பொருத்தமான உடம்பினைப் படைத்து உயிர்கொடுத்து அதனைப் படிப்போரும் கேட்போரும் தெவிட்டாத இன்பம் பெறத்தக்கதாகச் செய்யும் புலமை கைவரப் பெற்றவர்கள். இத்தகையோர் இயற்றிய சிறந்த இலக்கியங்களாகிய சிலப்பதிகாரம், திருக்குறள், இராமாயணம் முதலியவற்றில் உடம்பையும், உயிரையும் கண்டு யாவரும் இன்புறுகின்றனர்.

உயிர் உடல் ஆகிய இவ்விரண்டிலுமுள்ள குறைகளாலேயே பல்வேறு மொழிகளிலும் இயற்றப்படும் நூல்களிற் பல அழிந்தொழிகின்றன. தமிழிலும் நம் கண் முன்னே அழிந்தொழியும் நூல்கள் பலவன்றோ?

இப்பொழுது உலகமெங்கும் எல்லா மொழிகளிலும் இலக்கியம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டு வருகின்றது. அதே போல, குறைபாடுடைய படைப்புக்களும் விரைந்து மறைந்து கொண்டே வருகின்றன. 'ரஸ்கின்' எனும் ஆங்கிலப் பெரியார் நூல்களை நிலையானவை நிலையற்றவை என இரண்டாகப் பிரித்து இவ்விரு பிரிவிலும் நல்லனவும் தீயனவும் உண்டென்கிறார். நிலையான நல்ல நூல்களே சிறந்த இலக்கியத்தின் பாற்படுவன. ஏனையன படிக்கும் பொழுது மாத்திரம் சிறிது இன்பத்தைப் பயக்குமின்றி, அவைபோல நிலைபேறான இன்பத்தையும் அரும் பயனையும் அளிக்கமாட்டா. நிலையான சிறந்த நூல்களைக் கற்றல் அரசர்களுடனும், அரசிகளுடனும் உரையாடுதலைப் போன்றதெனவும் ஏனையவற்றைக் கற்றல் பணியாட்களுடன் பேசுவதைப் போன்றதெனவும் ரஸ்கின் கூறியுள்ளார்.

"என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையது"

தெய்வக் கற்பகமலர் எனப் புலவர்கள் கூறுவர். இந்த அற்புதமான கற்பகமலரைப் போல் என்றும் வாடாது நிலைத்து நின்று யாவர்க்கும் எப்பொழுதும் இன்பத்தை அளித்து விளங்குவனவே சிறந்த இலக்கிய நூல்களாகும். இவை படிக்கப் படிக்கப் புதிய புதிய இன்பத்தையும் உள்ளக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளர்ச்சியையும் அளித்துப் படிப்பவர்களைத் தம்முடைய இணைபிரியா நண்பர்களாக ஆக்கிக்கொள்ளும் தன்மையுடையன. இதனை "நவில்தொறும் நூனயம் போலும்" எனத் திருவள்ளுவர் சுருக்கமாகக் குறிப்பிட்டார்.

புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறுத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்

எனும் இச் செய்யுளிலே கம்பர் மெய்ப்புலவர்களுடைய பாட்டுக்களின் பண்புகளை எடுத்துக்காட்டியிருக்கிறார். இப் பண்புகளைக் கொண்டனவே சிறந்த இலக்கிய நூல்கள் எனக் கூறுதல் சாலப் பொருத்தமானதே. மேலும், இப்பண்புகள் இலக்கியத்திற்குரியவனவாக மேனாட்டறிஞர்கள் ஆராய்ந்துரைத்த சிறந்த பண்புகள் யாவற்றையும் அடக்கி மிளிர்கின்றன என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். 'புவியினுக்கணியாய்' எனும் தொடர் 'அழகையும் ஆன்ற பொருள் தந்து புலத்திற்றாகி என்பது உண்மை நன்மைகளையும் குறிக்கின்றன. இவற்றையே "இலக்கியம் சிறந்த கருத்துக்களைக் கொண்டது"என எமர்சனும் "இலக்கியம் உள்ளதை உள்ளவாறே உரைக்க வேண்டும்" எனப் பிளேற்றோ, ஹடசன் முதலிய ஆசிரியர்களும் உரைத்துள்ளனர். 'அவியகத்துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவி" என்பது இயற்கையையும் மக்களின் வாழ்க்கையினையும் பற்றியது. இவற்றையே 'ஹட்சன்' எனும் ஆசிரியர் கூறிய "மொழியின் வாயிலாக மக்கள் வாழ்க்கையை எடுத்துக் காட்டுவது இலக்கியம்" என்பதும், கார்லைல் கூறிய "இயற்கையின் எழிலை எடுத்துக் காட்டுவது இலக்கியம்" என்பதும் தழுவியுள்ளன.

இதுகாறும் கூறியவற்றால் சிறந்த உடலும் உயிரும் –சொல்லும் பொருளும் – உடையனவாகவும் மக்கள் யாவர்க்கும் பயன்படத்தக்க அழகு உண்மை நன்மை எனும் பண்புகள் நிறைந்தனவாகவும், கற்பக மலர் போல என்றும் வாடாது எப்பொழுதும் இன்பம் அளிக்கத்தக்கனவாகவும், சிருட்டிக்கும் ஆற்றல் வாய்ந்த மெய்ப்புலவர்களால் உரைவடிவத்திலேனும் செய்யுள் வடிவத்திலேனும் இயற்றப்படுவனவே இலக்கியங்கள் என்பது பெறப்படுகின்றது. இவை காப்பியங்களாக, கதைகளாக, நாடகங்களாக, தனிப்பாடல்களாக,விருந்துகளாக அவைபல பிறவாக அமைந்து விளங்கலாம்.

உரை, பாட்டு எனும் இரு வடிவங்களிலும் பாட்டு வடிவமே இலக்கிய சிருட்டிக்கு மிக வாய்ப்பானது என்பதற்கு இக்காலத்தில் உலகத்திலே யாவராலும் போற்றப்படும் இலக்கிய நூல்களே சான்று பகருகின்றன. இவ்விடத்திற் செய்யுள் , பாட்டு எனும் இரு சொற்களையும் பற்றிச் சிலர் கூறுதல் இன்றியமையாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுள் எனுஞ் சொல்லை இக்காலத்தில் பாட்டு என்பதைக் குறிக்க வழங்குகிறோம். கவி, பாட்டு, கவிதை செய்யுள் என்பன இக்காலத்தில் ஒருபொருட் சொற்களாக வழங்குகின்றன. ஆனால், முற்காலத்தில் செய்யுள் சொல்லாற் பொருட்கிடனாகச் செய்யப்பட்டன யாவற்றையும் குறித்தது. பாட்டு மாத்திரமன்றி உரை முதலியனவும் செய்யுளாகும். தொல்காப்பியர் செய்யுள்களில் ஏழு வகை உண்டென்று உரைத்துளர்.

'பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முது சொல்லோடு அவ்வேழ் நிலத்தும்"

என்பது தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரம். இவற்றுள் பாட்டுச் செய்யுள் மாத்திரம் அடிவரையறையுள்ளதெனவும், ஏனைய ஆறும் வரையறை அற்றன எனவும் அவர் கூறியுளர். இந்த அடிவரையறை உடைய பாட்டுச் செய்யுளை இக்காலத்தில் "செய்யுள்" எனவும், அடிவரையறையற்ற உரைச் செய்யுளை, 'உரை' எனவும், வழங்குகிறோம். உரை மக்களின் அறிவை நன்குவிருத்தி செய்யுமன்றி பாட்டைப்போல் உணர்ச்சியை நன்கு எழச் செய்து இன்பத்தை ஊட்டாது "கருத்துக்களின் சேர்க்கையை வெளிப்படுத்துவது உரை; கருத்துக்களின் படைப்பை வெளிப்படுத்துவது பாட்டு" என றீட் எனும் ஆசிரியர் கூறியது பொருத்தமானது. சுருங்கக் கூறின் சொற் பெருக்கமும் நெகிழ்ச்சியுமுடைய உரை அறிவுநிலைக்குரியது. சொற்சுருக்கமும் செறிவுமுடைய பாட்டு உணர்வுநிலைக்குரியது.

சிறந்த இலக்கியத்திற்கு அடிப்படையாயுள்ளது உணர்ச்சிப் பெருக்கேயாகும். மக்கள் பொறிகளாற் காணும் காட்சிகள் உள்ளத்திலே பல உணர்ச்சிகளை எழுப்புகின்றன. பலரிடத்தில் இந்த உணர்ச்சிகள் உருப்பெறாமலும் உரைக்க முடியாமலும் அழிந்து போகின்றன. சிலரிடத்து அரைகுறையாக உருப்பட்டாலும் போதிய உறைப்பு இன்மையால் அவற்றைத் தெளிவாகப் பிறருக்கு எடுத்துக் கூறமுடிவதில்லை. ஆனால் மெய்ப்புலவனோ இந்த உணர்ச்சிகளை ஊருப்படுத்திச் சொல் வடிவத்தில் வெளிப்படுத்துகிறான். சாதாரண மக்களிலும் பார்க்க மெய்ப்புலவன் நுண்ணிய உணர்ச்சி, பரந்தஅறிவு, உண்மை முதலியன மிக உடையனவனாகவும் 'தன்னுயிர் தானறப் பெற்றானாகவும்' இருக்கின்றான். 'நுண்ணுணர்வினாரோடு கூடி நுகர்வுடைமை', 'தவலருந்தொல் கேள்வித் தன்மையுடையார்', 'புலனழுக்கற்ற அந்தணாளர்' முதலிய கூற்றுக்கள் புலவர்களின் விசேட இயல்புகளைப் புலப்படுத்துகின்றன. இவ்வியல்பு களையே டாக்டர் லீவிஸ் எனும் மேனாட்டறிஞரும் விதந்தெடுத்தோதினார். மெய்புலவனுடைய உள்ளத்திலே உணர்ச்சிகள் நுண்ணியதாகவும் தெளிவானவையாகவும் வேகமுடையனவாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகுகின்றன. இத்தகைய உணர்ச்சிப்பெருக்கே பாட்டைப் பிறப்பிக்கின்றது. இதனைத் தான் பாரதியார் 'கவிதைவெறி' எனப் பாடினார். இது கலைமகள் அருளினால் உண்டாவதென இந்து சமயத்தவர் கூறுவர். பிளேற்றோ ஒரு தெய்வப்பெண்ணின் அருளால் உண்டாவது என்றனர். இந்த உணர்ச்சிப் பெருக்கையுடைய புலவர்களையே கீற்ஸ் என்னும் ஆங்கிலப் புலவர் உணர்ச்சி வேகப்பாணர்கள் எனக் குறிப்பிட்டார் உணர்ச்சிப்பெருக்கு மிகும்பொழுது சாதாரண மக்கள் மாத்திரமன்றி கட்குடியர் பித்தர் முதலியவர்கள் கூட ஒருவகை இசையுடன் பாடுவதை நாம் காண்கின்றோம். ஒருவனுடைய உணர்ச்சியின் உறைப்பைக் காட்டுவதற்கும் அதனைப் பிறரிடத்து உண்டாக்குவதற்கும் இசை பெரிதும் உதவி செய்கின்றது. இதனாலேயே புலவனும் உணர்ச்சிப் பெருக்கில் திளைத்திருக்கும் பொழுது இசை தழுவிய பாட்டுருவத்தில் தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றான். பாட்டுச் சோறாகவும் இசை கறியாகவும் அமைந்து விளங்குகின்றன எனக் கம்பர் கூறியுள்ளார்.

"கவிப்பா அமுதம் இசையின் கறியொடு

கண்ணன் உண்ணக் குவிப்பான்"

என்பதவர் கூற்று. பாட்டுக்கும் இசைக்குமுள்ள இந்த பிரிக்க முடியாத தொடர்பை ஆங்கிலப் புலவர்கள் சிலரும் நன்கு கூறியுள்ளனர். "கருத்துக்களை இசையோடு எடுத்துரைப்பது பாட்டு" என்றார் கார்லைல். எட்கார் அலன்போ என்பார் "அழகின் இசைமயமான படைப்பே பாட்டு" என்றியம்பினார்.

மேலும் தமிழ்மொழியிலே பாட்டைக் குறிக்கும் பா எனுஞ் சொல்லின் பொருள் இசைக்கும் பாட்டுக்குமுள்ள தொடர்பை நன்கு காட்டுகிறது. பா என்பது பரந்துபட்டுச் செல்லும் ஓசை என்னும் பொருளது. ஒருவன் தூரத்திலிருந்து ஒரு பாட்டுப்பாட அதனைக் கேட்போர்க்கு அதன் சொற்பொருள் இவையென்று புலப்படாது இருப்பினும் அவன் பாடும் ஓசையினை உய்த்துணர்ந்து பார்ப்பின் இஃதின்ன செய்யுட்குரியதென அறியலாம் எனப் பேராசிரியர் தொல்காப்பியச் செய்யுளியலுரையிலே எடுத்துக் காட்டியுள்ளார். இதனால் பாட்டு இசைமயமானதென்பதும் இசை இன்றேல் பாட்டு இல்லையென்பதும் அறியக்கிடக்கின்றன.

இனி இலக்கியம் நல்கும் இன்பத்தினை ஆராய்வோம். உலகத்திலுள்ள கலைகள் அறுபத்துநான்கென்றும் அவற்றிலும் கூடவென்றும் கூறுகின்றனர். இக் கலைகள் யாவும் மனத்தின் செயல்கள் என அகநூலார் கூறும் அறிதல், உணர்தல், செய்தல் என்பவற்றைப் பற்றி நின்று முறையே அறிவு இன்பம் ஆற்றல் என்பவற்றைக் கொடுக்கும் தன்மைய எனினும் கலைகளில் இம்மூன்றில் ஒன்று மற்ற இரண்டிலும் பார்க்கக் கூடவே காணப்படுகின்றது. இதனூற் கலைகளை அறிவுக்கலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பக்கலை, தொழிற்கலை என மூன்றாகப் பிரிக்கலாம். அறிவுக் கலையில் அறிவும், இன்பக்கலையில் இன்பமும், தொழிற்கலையில் ஆற்றலும் தலையிடம் பெற்று விளங்குகின்றன.

அழகியல் உணர்ச்சியை உண்டாக்கி இன்பத்தை ஊட்டுவனவே இன்பக்கலைகளாகும். இவற்றை நுண்கலைகள் அல்லது வியன் கலைகள் எனவும் கூறுவர். இவற்றில் இலக்கியம் இசை, நாடகம் சிற்பம், ஓவியம் முதலியன அடங்கும். இசை கொடுக்கும் ஓசை இன்பத்தையும், சிற்பம் ஓவியம் முதலியன தரும் காட்சி இன்பத்தையும், இலக்கியம் ஒருங்கே அளிப்பதோடு சிந்தைக்கும் சிறந்த இன்பத்தை அவற்றினும் பார்க்க அதிகமாக அளிக்கிறது. இதனுள் இன்பக்கலைகளுள் சிறந்தது இலக்கியமே என அறிஞர் கூறுகின்றனர். "ஓவியம், சிற்பம், இசைமுதலியன காலத்தாலும் இடத்தாலும் கட்டுப்படுவன. ஆனால் இலக்கியமோ இத்தகைய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதன்று; தன் உரிமையுடையது; ஏனைய ஓவியம் சிற்பம் இசை முதலியன காட்சியாலும் கேள்வியாலும் உணரப்படுவன; இந்த இலக்கியமே கேள்வி இன்பத்தால் துய்க்கப்படுவது. அன்றியும் இலக்கிய உட்கருத்தும் அதனை உரைக்கும் சொல்லும் பருந்தும் நிழலும் போல் ஒன்றைவிட்டொன்று பிரியாது சேர்ந்து செல்வதால் அவற்றின் பொருளையும் நன்குணர்ந்து இன்புற்று இலக்கியத்தில் காணப்படும் பல தொடர்ந்த நிகழ்ச்சிகளையும் மனக்கண்ணுள் காணலாம்" என்றார். இலக்கியத்தை நுணுகி ஆராய்ந்து பல உண்மைகளை வெளியிட்ட ஹட்சன் என்னும் ஆசிரியர்.

உலகத்துயிர்களால் விரும்பப்படுவது இன்பமே. மக்களின் உள்ளம் இன்பமடைவதற்கு ஏதுவாக உள்ள பொருட்களெல்லாம் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐம்புல வடிவமாக உள்ளன. இவ்வைந்தும் முறையே வாய், கண்,மெய்,செவி, மூக்கு என்னும் ஐம்பொறிகளின் வழியாக கொள்ளப்படுவன. இந்த ஐம்பொறிகளின் வாயிலாக மனம் சென்று அப்புலன்களை நுகர்ந்து இன்புறும்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும்..."

என்னும் தேவாரத்தில் ஐம்பொறிகள் வாயிலாக இன்பமளிக்கும் பொருட்கள் ஒருங்கே கூறப்பட்டுள்ளன. வேறுவேறு காலங்களில் வேறுவேறு பொருட்களால் அனுபவிக்கப்படுபவனாகிய கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலன் நுகர்ச்சிகளையும், ஒரு காலத்தில் ஒருங்கே பெறுவதற்கு இடனாக உள்ளது காதல் இன்பம் ஒன்றேயாகும். இக் காதல் இன்பத்திற்கு எவ்வாற்றானும் குறையாத இன்பம் இலக்கியத்தைச் சுவைத்தலால் உண்டாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை மாணிக்கவாசகர் திருக்கோவையார் செய்யுள் ஒன்றிலே புலப்படுத்துகிறார்.

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர் மதிற் கூடலி னாய்ந்த வொண் தீந் தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல் புக்கோ
இறைவா தடவரைத் தோற்கென்கொ லாம்புகுந் தெய்தியதே"

என்பதே அச் செய்யுள்.

தலைவியோடு கூடி இன்பம் அனுபவித்துவிட்டு வந்த தலைமகனை நோக்கி அதனுடைய தோழன் இவ்வாறு வினாவுகிறான். "ஒண் தீந் தமிழின்துறை" என்பது இலக்கியத்தைக் குறிக்கிறது. இலக்கியம் இத்தகைய சிறந்த இன்பத்தின் ஊற்று என்பதற்குப் புலவர்கள் பலருடைய கூற்றுக்கள் சான்று பகருகின்றன.

பொன்னில் ஒளியும், மலரின் மணமும், தேனில் இனிமையும் இயல்பாக அமைந்து விளங்குவது போல் செஞ்சொற்கவியில் இன்பம் நிறைந்திருக்கிறதென கம்பர் கூறுகின்றார்.

"பொன்னின் சோதி போதினின் நாற்றம் பொலிவே போற்
தென்னுன் தேனிற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்"

என்பது அவர் கூற்று இநத கருத்தை இன்னும் வலியுறுத்திக் கொள்ள "கொள்ளை இன்பம் குலவு கவிதை" எனப்பாடினார் பாரதியார்

இந்தக் கொள்ளை யின்பத்தை அனுபவித்த புலவர் ஒருவர் வானோர் அமிழ்தத்தையும் வெறுத்தொதுக்கினார். அவர் தன் காதலை,

"இருந் தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"

என்று கூறிப் புலப்படுத்தினார். சங்க இலக்கியங்களுட் சிறந்ததொன்றாகிய கலித்தொகையைப் படித்து உள்ளத்தைப் பறிகொடுத்த புலவர் ஒருவர் வேறொரு நூலும் வேண்டாம் "நனியார்வோம் பொங்கு கலி இன்பம்" என நவின்றார். மில்றன் எனும் ஆங்கிலப் புலவரும் "பாட்டென்பது மக்கள் மன அறிவினின்று வடித்தெடுக்கப்பட்ட தூய அமிழ்தமாகும்" எனக்கூறுமுகத்தான் பாட்டால் பெறப்படும் இன்பத்தை நன்கு புலப்படுத்தினார். வான்மீக முனிவருடைய இராமாயணத்திலுள்ள செய்யுள்களின் இன்பத்தைப் பற்றி கூறும்பொழுது கம்பர் அவ் இன்பத்தை மனிதர் மாத்திரமன்றி அமிர்தத்தை அருந்தும் தேவர்களும் "செவிகளார பருகுகின்றனர்" எனப்பாடினார். சேர்பிலிப் சிட்னி எனும் அறிஞரும் "சிறுவர்களை விளையாட்டிலிருந்தும், முனிவர்களை தீக் காய்வதிலிருந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கிக் கவரும் சக்தியுடையது இலக்கியம்" என்றுரைத்தார். தமிழிலக்கியம் "ஆயுந்தொறும் இன்பம் தரும்" என்று கண்டார் ஒரு புலவர். இலக்கியத்தைப் படிக்கப்படிக்க மேலும் மேலும் இன்பம் பெருகும் என்பதை "நவில்தொறும் நூனயம் போலும், பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு" எனுங் குறளில் வள்ளுவர் புலப்படுத்தினார். கம்பர், இளங்கோவடிகள், சேக்கிழார் முதலிய புலவர்களோடு கூடி நுகர்ந்தலால் வானவர் நாட்டின்பத்தை அடையலாமென்பது அறிஞர் பலர் அனுபவ வாயிலாகக் கண்ட உண்மையாகும்.

"நுண்ணுனர்வி னாரோடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே ஒக்கும் விழைவிற்றால்"
என்பதையுங் காண்க.
"தவலருந் தொல்கேள்வித் தன்மை உடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ,
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி"

எனும் நாலடியார் செய்யுள் புலவர்களொடு கூடி மகிழ்தல் விண்ணுலக இன்பத்திலும் சிறந்ததெனக் கூறுகிறது. புலவர்கள் இயற்றிய நூல்களிலேயே நாம் இன்றும் அவர்களைக் காண்கிறோம். ஆகவே அவர்களுடைய இலக்கியங்களை படிப்பதாற்றான் அவர்களோடு சேர்ந்து பழகிப் பேரின்பத்தை அநுபவிக்கலாம்.

"இம்பர் காட்டிற் செல்வமெல்லாம்
எய்தி அரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
ஓங்கு நீளல் இருந்தாலும்
செம்பொன் மேரு அனைய புயத்
திறல் சேர் இராமன் திருக்கதையில்
கம்ப நாடன் கவிதையிற்போல்
கற்றோர்க் கிதயம் களியாதே"

என்பது கம்பனுடைய காவியத்தைச் சுவைத்த அறிஞர் ஒருவருடைய கருத்தாகும்.

இவ்வாறு காதலின்பம், விண்ணுலக இன்பம் முதலியவற்றிலும் பார்க்க சிறந்தது என அறிஞர் யாவரும் போற்றும் இலக்கிய இன்பத்தைச் சுவைத்தாலே இலக்கியம் கற்பதின் நோக்கமாகும் இந்த இன்பத்தை அனுபவித்தல் இல்லது சுவைத்தல் எவ்வாறு? "பாட்டு அழகாக இருக்கிறது" என்று வியப்பது சுவைத்தலாகாது. இலக்கியத்தை சுவைத்தற்குக் கற்பனை மிக இன்றியமையாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டின் ஓசை நயம், சொற்கள் கருத்துக்கள் முதலியவற்றில் ஈடுபட்டு கற்பனையின் உதவியால் புலவனுடைய பாட்டையே நாம் மனத்தில் ஆக்கிக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்தாற்றான் அப்பாட்டைப் பாடும் பொழுது புலவன் கண்ட காட்சிகளை – கொண்ட கருத்துக்களை – அடைந்த உணர்ச்சிகளை – புலப்படுத்திய மெய்ப்பாடுகளை – நாமும் பெறலாம். இந்த நிலையை அடையும் பொழுது அப்பாட்டு நம்முடன் கலந்து ஒன்றாகி நம்மை பரவசப்படுத்தி இன்பமளிக்கும். இந்நிலையில் நின்று மாணிக்கவாசகர் சுவாமிகளுடைய திருவாசகத்தேனையுண்ட இராமலிங்க சுவாமிகள் தாம் பெற்ற இன்பத்தைப் பின்வரும் செய்யுளிலே சிறப்பாகப் புலப்படுத்துகிறார்.

"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனித்ததுவே"

"தாம் படிக்கும் பாட்டைத் திரும்பப் படைப்பவர்களாக மாணவர்களை ஆக்குதலே உண்மையான பாட்டை சுவைக்க செய்யும் முறை" என சேர்போர்சிநன் என்னும் அறிஞருங் கூறி நிற்பார். இவ்வாறு ஒரு பாட்டை உள்ளத்திலே திரும்ப கிருஷ்டிப்பதற்குப் புலவனுடைய கருத்துக்கள் முழுவதையும், தொனிப் பொருட்களையும் கூட பாட்டின் சொற்களிலே காணும் ஆற்றல் மிக இன்றியமையாததாகும் என்பர் கறே என்னும் பேராசிரியர். இந்த ஆற்றலைப் பெற்று சிறந்த முறையிலே செய்யுளை சுவைப்பதற்குப் பல்காற் பயிற்சி வேண்டும்.

உளமானது சான்றோருக்குரிய அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை முதலிய நல்லியல்புகளின் கொள்கலமாக ஆகிறது. சுருங்கக் கூறின் "பண்புடைமை" ஏற்படுகிறது. "நவில் தொறும் நூனயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு" எனுங் குறள் இலக்கிய இன்பத்தைப் பண்புடையாளர் தொடர்புக்கு உவமையாகக் கூறுகின்றது. பண்புடைமை என்பதற்கு பரிமேலகர் "பெருமை சான்றோர்மைகளிற்றும் வழுவாது நின்றே எல்லார் இயல்புகளும் அறிந்தொழுகல்" என்றார்.

"பண்பெனப் படுவது பாடறிந்தொழுகல்" என்பது கலித்தொகை.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"
"அரம் போலுங் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்"

எனுந் திருக்குறள்கள் பண்புடைமையை நன்கு விளக்குகின்றன.

"இலக்கியம் மனத்தை விரித்துத் திருத்தித் தூய்மை செய்கிறது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவைக் கூர்மையடையச் செய்து ஞானத்தையும் அளிக்கிறது" எனக் காடினர் நியூமன் எனும் அறிஞர் கூறியதையும் நோக்குக.

துன்பத்தினின்று நீங்குதலும் இன்பத்தைப் பெருக்குதலுமே மக்கள் தம் வாழ்வில் அடைய விரும்புவன. துன்பமில்லாத இன்பமயமான வாழ்வையே தெய்வ வாழ்வு – அமரவாழ்வு எனப் போற்றுகின்றோம். இந்த அமர வாழ்வை உலகில் வாழ வேண்டின் "வையத்தில் வாழ்வாங்கு வாழ வேண்டும்" என வள்ளுவர் கூறுகிறார். இவ்வாறு வாழ்வதற்கு இலக்கிய பயிற்சியால் ஏற்படும் பரந்த அறிவும் பண்புடமையும் இன்றியமையாதன. இவற்றின் உதவியாற்றான் நன்மை தீமை, இன்பம் துன்பம், செல்வம் வறுமை, வெற்றி, தோல்வி, பிறப்பு வீடு முதலியன இருமைகளின் வகையை நன்கு அறியலாம். வாழ்க்கையில் ஏற்படும் துயரங்களினால் மனமுடைந்து சோர்ந்து துன்புறாமல் துன்பத்திலும் இன்பத்தைக் காணலாம். இன்பமே எந் நாளும் துன்பமில்லை என வாழலாம்.

ஆகவே வையகத்தில் வானக வாழ்வை அடைவதற்கு இலக்கியம் தான் உதவி செய்கிறது; வழிகாட்டுகின்றது எனலாம். "இலக்கியம் வாழ்க்கையின் விமர்சனமே" என்றும்,"வாழ்க்கையை நன்கு நடத்துவதற்கு அது வழிகாட்டுகிறது" என்றும், மதியு ஆர்னலட் எனும் ஆங்கிலப் புலவருங் கூறியுள்ளார். இதனாலேயே பாடசாலைகளில் கற்பிக்கும் பாடங்களுள் இலக்கியத்திற்கு தனியிடம் கொடுக்கிறார்கள். இலக்கியத்தைக் கற்காமல் வாழ்பவர்களை விலங்குகள் என்றும் இவர்களால் உலகத்திற்கொரு பயனுமில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

"செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும்"

எனுங் குறளில் உடலை வளர்த்ததற்கு உணவு இன்றியமையாதது போல, உள்ளத்தைப் பண்படுத்தி வளம்பெறச் செய்வதற்கு இலக்கியம் இன்றியமையாததென்பதையும் புலப்படுத்தினார். இலக்கியத்தின் இப்பெரும் பயனை உணர்ந்தே டாக்டர் லிவீஸ் எனும் பேராசிரியர் "தனது சொந்த இலக்கியத்தைப் படிக்காதவன் பிறவற்றை எவ்வளவு கஸ்ரப்பட்டுக் கற்றாலும் படித்தவனாகிவிட முடியாது" என்று கூறியுளர்.

இவ்வாறு இலக்கியம் அளிக்கும் இன்பத்தைச் சுவைத்தலால் உள்ளத்தில் என்றும் நீங்காத நிறைவும், மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன; மக்களின் தனித்தன்மை விருத்தியடைகிறது; கற்பனா சக்தி வளம் பெறுகிறது; அழகை அகத்திலும் புறத்திலுங் காணும் ஆற்றல் உண்டாகிறது. அழகே உண்மை, உண்மையே அழகு எனும் பேருண்மை நன்கு புலனாகிறது; நல்லனவற்றையே என்றும் நாடிச் சென்று சான்றோர்களாக வாழமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணத் தமிழ்த் தினவிழாவில் பண்டிதரின் வேண்டுகோள்

வடமாகாணக்கல்வித் திணைக்களத்தின் தமிழ் மொழித் தினவிழா யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை பிரதான மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை 26.06.2011 அன்று நடைபெற்றது. அவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பேராளர்களில் ஒருவரான முதுகலைமாணி, பண்டிதர் ம.நகடம்பேசுவரன் (விரிவுரையாளர், கீழைத்தேயக் கல்விக்கல்லூரி, வளவாளர்- கல்வித் திணைக்களம், வருகை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து தரப்படுகின்றது.

பாடசாலைகளில் தமிழ்த்தினங்கள் கொண்டாடப்படுகின்றன. அதற்காக அவ்வப் பாடசாலைகளின் தமிழ்ப் பொறுப்பாசிரியர்களின் நிலைமையை நன்கறிந்தவன் எனினும் என் கருத்துக்களைத் தொட்டுக் காட்டலாமே தவிர பேசுவதற்கு அவகாசம் போதாது. விழாக்களில் கலைகள் காட்சிப்படுத்தல் நிகழும். காட்சிகள் காட்சிப்படுத்தும் போது விழாக்கள், ஊக்கும் சாதனமாகும். அவ் விழாக்கள், ஊக்கியே தவிர அதனால் கிடைக்கும் பயனை நுண்மையாக ஆராய்வோமானால் பயன் மிகமிகக் குறைவு. எனினும் விழாக்கள் கலைகளுக்கான காட்சியே யாகும். எனவே அக்காட்சியின் விளக்கத்தையும் என் வேண்டுகோள் ஒன்றையும் கூறி மிகக் குறைந்த நேரத்தில் என் கருத்தை நிறைவு செய்வேன்.

கலைகள் காட்சிப்படுத்தும் போது அவை புலன்வழிச் சென்று சபையோர் மனதை ஈர்க்கின்றன. ஈர்க்கப்படும்போது புலன்கள் சிதறடிக்கப்படாமல் ஒருமுகப்பட்டு ஒன்றி அந்நிகழ்ச்சியல்லாத பிறிதொன்றை நோக்கவிடாது தன்னையே நோக்கும்படி செய்து நிற்கும் அதுவே கலை. அழகு என்பதும் ஈர்ப்புத்தான். திரு என்பதும் ஈர்ப்பே. அதனால்தான் உரையாசிரியர்களில் ஒருவரான பேராசிரியர் திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்றார். காட்சியும் கண்டாரால் விரும்பப்படும் தன்மையுடையது. வெறுக்கப்படும் தன்மை நோக்கங் கொண்ட காட்சியுமுண்டு எனினும் அதனை மனம் இறுகப்பற்றிக் கொள்ள விரும்புவதில்லை. நோக்கானது ஓரநோக்கு, பலநோக்கு என்றெல்லாம் அமைவதோடு அம்மை, அழகு, தொன்மை என்றெல்லாம் தொல்காப்பியம் எடுத்துரைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குகளில் நிறைந்தனவாகக் கொள்ளப்படுபவை நான்கு. ஒன்று உள்ளத்தை அலையவிடாது ஒன்றாக்கிக் காட்டும் காட்சி. அடுத்து புலன் அனைத்தையும் வெல்வதே வீரம். ஒன்றாலும் சாகாது அதாவது அழிக்கமுடியாமற் கற்பது வித்தை. நான்காவது தன்னைப் பிறர் ஏவாமல் மெய்வருந்தி உண்பதே ஊண்.

ஒன்றாகக் காண்பதே காட்சி புலனைந்தும்
வென்றான்தன் வீரமே தாம்வீரம் –ஒன்றாலும்
சாகாமல் கற்பதே வித்தை தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்.

ஒன்றாலும் சாகாது கற்பது வித்தை. வித்தைகள் இங்கு காட்சிப் படுத்தப்பெற்றன. கல்வியும் கலையும், ஓசையும் ஒலியும் போன்றனவற்றின் துணையோடு காட்சியாகும் போது பலர் கண்ணீர் விடுகின்றனர். சோகமுடிவு காவியத்தில் மேடையில் நன்றாயிருக்கலாம். வாழ்வியலில் விரும்பமுடியாதவை. போட்டிகளில் நடுவர்கள் சரியாக இல்லாவிடில் இறுக்கமான போட்டிகளில் இடம் கிடையாதோர் கலங்கிக் கண்ணீர் விடுவர். தனக்குக் கிடைக்கவேண்டியது கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் கண்ணீராக உருவெடுக்கும். எனவே போட்டிகளை மையப்படுத்தி எடுக்கப்படும் விழாக்கள் கண்ணீர் பெருக ஏதுவாகலாம். காட்சிப்படுத்தப்படும்போது மகிழ்ச்சி, வளர்ச்சி, பயனுள்ள வெளிப்பாடு எனச் சிலர் கருதலாம். கூர்ந்து நுணுகியாராய்வார்க்கு அவை மாயைத் தோற்றம் என்பது புலனாகும். ஒரு சொல்லுக்கு நுண்மையான ஒத்தபதம், எதிர்ப்பதம் ஏன் பொருள் கூட மாயை தான். இவற்றையெல்லாம் மனங்கொள்ள விளங்கிக் கொள்வதற்குத் தனியான கருத்தரங்கு தேவை.

உடல் தளர்ந்தவனுக்கு "ரொனிக்" தேவைப்படுவது போல போட்டிகளும் விழாக்களும் தேவைதான். நான் இல்லையென்று கூறவில்லை. ஒன்றாலும் சாகாத–அழிக்கமுடியாத கல்வியை வித்தைகளை கலைகளைப் பேணவேண்டுமானால் விழாக்களைக் காட்டிலும் திட்டமிட்ட பயிற்சிகளும் கருத்தரங்குகளும் தேவை. இதுவே யான் இங்குமுன் வைக்கவிரும்பும் வேண்டுகோள்.

வயதுபோனவர்களை வைத்தியசாலைகளிற் சேர்த்தால் வைத்தியர் கூட ஏனோ தானோ என்றிருக்கநேரலாம் அல்லதுதான் பயிற்சி பெறலாம். ஏன் உறவுகள் கூட அவ்வாறுதான். நோயாளர் பயிற்சிக்குப் பலியாகலாம். இதே போன்றே நமது ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் நிலையும். இச்சங்கமும் வயது வந்ததே. மனித உடலல்ல. அழித்துவிடுவதற்கு மொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலம் வாழவேண்டியது. அந்தவகையில் இச்சங்கமும் நீண்டகாலம் வாழவேண்டியதே.

மிக நீண்டகாலமாக இயங்கிவரும் பழமைமிக்க இரு அமைப்புக்களும் கல்வித் திணைக்களத்தினாலே தோற்றம் பெற்றவை. அதனால் கல்வியையும் கலையையும் வளர்த்து வந்தது. தமக்கு பக்கத்துணையாக பயன்படுத்தியது. பயன்படுத்தவேண்டிய தேவையும் உள்ளது. அந்த இருகண்களும் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், வட இலங்கைச் சங்கீத சபை இவை இரண்டுமே அவை கல்வித்திணைக்களப் பணியாளரைப் பதவிவழித் தலைவராகக் கொண்டது. அவற்றை வளம் செய்து வளம் பெறநிருவாக ரீதியிலும் தார்மீக ரீதியிலும் கல்வித் திணைக்களம் தம் பங்கிற்கு எவ்வளவோ செய்தது. இன்று இரண்டும் தனித்துத் தம் வளத்திலேயே நிலைபெற்றுள்ளது. மாணவர்களாலும் தக்காராலும் வளர்ந்த ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் தனக்கெனக் கீழைத்தேயக் கல்விக் கல்லூரியைக் கட்டியது. அதன் இருப்பு இனி இல்லாததாகி விடுமோ என்ற பயம் தமிழ் உணர்வு மிக்காரிடம் தோன்றியுள்ளது. எனவே, பண்டிதர்களைக் கல்விமான்களை வளவாளர்களாகக் கல்வித்திணைக்களம் எடுக்கவேண்டும். கீழைத்தேயக் கல்விக் கல்லூரி தொடர்ந்து இயங்க உதவ வேண்டும் என்பதே தமிழ் உணர்வாளர்களது வேண்டுகோளாகும். இதனை யான், இச் சந்தர்ப்பத்தை வாய்ப்பாகக் கருதி முன்வைக்கின்றேன்.

மேலும் தமிழ்த்தினமானது முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் நினைவாக அந்த நாளைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்டது. அவரும் சேர்ந்து வளர்த்த நிறுவனம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம். இனம், மதம், மொழி வேறுபாடுகளைக் கடந்தது. சங்கம். 1921 ஆம் ஆண்டு வைகாசித்திங்கள் 17ஆம் நாளில் ஆரம்பிக்கப்பட்டுது. அவர் கூறிய தன்னிகரில்லாத் தமிழை வளர்க்கத் திணைக்களம் உதவவேண்டும், துணையாக இருக்கவேண்டும். இதுவே என் நயமான வேண்டுகோள்.

விபுலாநந்தர் நேசித்த தன்னிகரில்லாத் தமிழ்ப்பாடல் இதோ–

ஓங்கல் இடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் வெற்பில்
தன்நிக ரில்லாத் தமிழ்

தமிழை முன்னிட்டு இச்சந்தர்ப்பத்தைத் தந்த திணைக்கள மேலதிகாரிகளுக்கு நன்றியும் வணக்கமும் உரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரும் விழுமியப் பண்புகளும்

- ச. தியாகலிங்கம்

கல்வி என்பது ஒரு சமுதாய நிகழ்ச்சியாகும். இதன் வழியே மாணவர்கள் ஒவ்வொருவரும் அறிவு, திறன்கள், பழக்க வழக்கங்கள், மதிப்புகள், மனப்பான்மைகள் ஆகியவற்றைப் பெறுகின்றனர். இத்தகைய கல்விப் பணிகளை வழங்குவதில் முனைப்புப் பெறுபவர்கள் ஆசிரியர்கள். இவர்கள் கற்பித்தலோடு மட்டுமன்றி அறிவுரை வழங்குபவராக பாடத்திட்டம் தயாரிப்பவராக மதீப்பாட்டாளராக, வழிகாட்டிகளாக பல நிலைகளில் செயற்படுகின்றனர். இத்தகைய செயற்பாடுகளின் நோக்கம் நலம்மிக்க சமுதாயத்தை உருவாக்குவதே ஆகும்.

எனவே நல்ல விழுமியங்கள் ஒருவரின் நடத்தையை நிர்ணயிக்கின்றன. ஒருவர் எத்தகையவர் என்பதை அவருடைய நடத்தையே காட்டி நிற்கின்றது. நல்ல நடத்தையைப் பேணி வளர்ப்பன நல்ல விழுமியங்கள் மட்டுமே. நம்மிடம் பிறர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறோமோ, அவ்வாறே நாமும் பிறரிடம் நடந்து கொள்வதே நடத்தைக் கோலங்கள். அவற்றால் விழுமியங்கள் எட்டப்படுகின்றன.

கல்விச் சிந்தனையாளர் " 'டூயின்' கருத்துப்படி, குழந்தைகள் தங்கள் சமூக அநுபவங்களின் தர மேம்பாட்டிலிருந்தே விழுமியங்களைக் கற்றுக்கொள்கின்றனர்" என்கிறார். பாடசாலை ஒரு சிறிய சமூகமாகும். இச் சமூகத்தில் கற்றுக் கொள்ளப்படும் நற்பண்புகளே பின்னர் சமூகத்தில் பெருமளவான நல்ல குடிமக்களை உருவாக்க வல்லன. இன்று வெறுப்பு, பகை, ஒப்பிடல், போட்டி, அச்சம், பதட்டம், தன்னம்பிக்கையின்மை என்பன பெரும்பாலான மாணவர்களிடையே காணப்படுகின்றன. இன்றைய அநுபவங்களெல்லாம் மனத்தின் வக்கிரங்களே காரணங்களாகும். இதனைப் போக்குவதற்கு அல்லது தணிப்பதற்கு கல்வி உதவ வேண்டும்.

எனவே மனித நேய விழுமியங்களைப் பாடசாலைகளில் பேணி வளர்த்தல் மனித சமுதாயத்திற்குச் செய்யும் சேவைகளில் மகத்தானதாகும். மனித நேய விழுமியங்களானது ஒருவரை மனித நேயஞ் சார்ந்தவராக ஆக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவ் விழுமியங்களில் குறிப்பிடத்தக்கதாகவும் ஏனைய விழுமியங்களை உள்வாங்கிக்கொண்டு விளங்குபவனவாகவும் காணப்படுபவை. தவிர்த்தல் வேறுபாடு பாராட்டாத மனப்பாங்கு இயற்கை மற்றும் பிற உயிரினங்களுடன் சமச்சீர் உறவு கொள்ளுதல் என்பன முதன்மை பெற வேண்டும். இவை மாணவர்களிடம் முதன்மை பெறுவதற்கு ஆசிரியர்கள் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டியவர்களாக காணப்படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. அச்சம் தவிர்த்தல்

I) ஆசிரியரிடம் மாணவருக்கு அச்சம் இருத்தல் கூடாது.

II) பாடசாலைச் சூழல், இல்லச் சூழல் போன்ற உணர்வுடன் திகழ்தல் வேண்டும்.

III) ஆசிரியர் மாணவர் உறவு நேயமும் நம்பிக்கையும் கொண்டதாக அமைய வேண்டும்.

IV) ஆசிரியருக்கு மாணவர் பால் அக்கறை இருத்தல் வேண்டும்.

V) அச்சத்தின் மூலக்கூறுகள் தெளிவாக்கப்பட வேண்டும்.

VI) ஆசிரியர் பொருளற்ற அச்சங்களிலிருந்து விடுபட்டிருத்தல் அவசியம்.

VII) மாணவரிடம் திறந்த மனத்துடன் விவாதித்தல் அவசியம்.

VIII) வினாக் கேட்கும் பழக்கத்தை பேணி வளர்த்தல் வேண்டும்.

02) வேறுபாடு காட்டாத மனப்பாங்கு

அன்றாட நிகழ்வுகளில் வேற்றுமை உணர்ச்சிகள் மனிதரிடையே ஓங்கி நிற்பதைக் காண முடிகிறது. இதனை மாணவர்கள் அறிய ஊக்குவித்தல்.

I) செய்திகள் படித்தல்

II) தொலைக்காட்சி பார்த்தல்

III) வானொலி கேட்டல்

IV) ஊர் நிகழ்வுகள்

V) பாட நூல்வழி அறிதல் (சமூக இயல், மொழிப் பாடங்கள்)

இவற்றை விட மனித உரிமைகள், குழந்தைகள் நல உரிமைகளை மாணவர்களுக்கு உணர்த்தல்.

03) இயற்கைச் சமச்சீர் உறவு

இயற்கையுடன் சமச்சீர் உறவு கொள்வதற்கு, ஆசிரியர், பாட நூல்கள் மற்றும் அன்றாட நிகழ்வுகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல். இயற்கையின் பால் ஆழ்ந்த அக்கறையுடனான ஈடுபாடு, நாம் இந் நாட்டின் குடிமக்கள் என்ற உணர்வைப் பேணி வளர்த்தல், சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு.

- காற்று, நீர், மண் மாசுபடுதல்
- காடுகள் வெட்டப்படுதல்

தீர்வு

- மரக்கன்றுகள் நடுதல்
- செடிகளைச் சிதைக்காமை
- பிற உயிர்களுக்கு இன்னா செய்யாமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மாணவரிடம் பொதிந்து கிடக்கும் நற்பண்புகள் பேணி வளர்க்கப்படல் வேண்டும். இந்த வகையில் மனித நேயத்தைப் பேணி வளர்க்க உதவும் விழுமியங்களை அக்கறையுடன் மாணவர்களிடையே வளர்க்க வேண்டியது ஆசிரியரின் தலையாய பணியாகும்.

இதற்கமைவாக எமது கல்விச் செயற்பாடுகள் வடிவமைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதாவது இன்றைய கல்விச் சீர்திருத்தத்தில், தேர்ச்சி அடிப்படையிலான பிள்ளை நேய, பிள்ளை மைய கற்றல் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. தேர்ச்சி அடிப்படையில் அறிவு, மனப்பாங்கு, திறன், விழுமியங்கள் என்பன முக்கியம் பெறுகின்றன. கற்றல் மூலமாக மாணவர்களிடம் இவற்றை அனைத்துப் பாடங்கள் ஊடாகவும் அடையச் செய்தல் வேண்டும். விழுமியப் பண்புகள் என்பது, தனியே சமய பாடம், சூழல் போன்ற குறிப்பிட்ட பாடங்கள் மூலமாக மட்டுமன்றி அனைத்துப் பாடங்கள் மூலமாகவும் கற்றல் சந்தர்ப்பங்களின் ஊடாக இவற்றை வளர்க்க வேண்டும். உதாரணமாக சேர்ந்து செயற்படல், ஒற்றுமை, விட்டுக் கொடுத்தல், உதவுதல், சகோதரத்துவம், தியாகம், அன்பு என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை மாணவர்களிடம் ஏற்படுத்துவதில் ஆசிரியரின் பணிகள் மேற்கண்டவாறு அமைதல் அவசியமாகின்றது.

சிலந்தி வலையில் குளவி

- [illegible]

சின்னச் சிலந்தி உணவுக்காய்
தேர்ந்து வலையைச் செய்யுமே
தன்னிற் பெரிய பூச்சியும்
தடக்கி விழுந்து சிக்கவே!

எச்சில் தன்னைச் சுரந்துமே
எடுத்த நூலைக் கொண்டுமே
மெச்சும் வகையில் வலையாக
முயன்று விரித்து வைத்ததே!

வஞ்சகர் விரித்த வலையிலே
வீழுஞ் செயலை ஒத்ததாய்
வெஞ்சமர் புரியும் குளவியர்
வீழ்ந்து கிடந்து துடிக்கிறார்

துடித்தல் அடங்கும் வரையிலே
தூர இருப்பார் சிலந்தியார்
துடித்துக் களைத்த பின்னரே
துணிந்து அதனைச் சீண்டுவார்

சீண்டிச் சீண்டிக் கொன்றுமே
சிறிய வயிற்றை நிரப்புவார்
சண்டித் தனத்தால் வெல்வோரும்
சறுக்கி விழவும் காணலாம்

சிலந்தி விரித்த வலையிலே
சிக்கித் தவிக்கும் குளவிபோல்
விலகிச் செல்ல முடியாமல்
வீழ்வார் உலகில் உண்டன்றோ!

பென்னம் பெரியார் ஆனாலும்
பெரிதும் வருந்த நேரலாம்
கன்னக் கோலதனை வைப்பாரின்
கபடம் உணரா திருந்தாலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மொழி பேணாத தமிழர்கள்

கவிஞர் சோ. பத்மநாதன்

தமிழைப் பிழையறப் பேசுவதிலும் எழுவதிலும் கவனஞ்செலுத்தாத போக்கு தமிழர்களிடையே காணப்படுகிறது. கற்றவர்கள் கூட இது குறித்துக் கவலைப்படக் காணோம். ஊடகங்கள் தமிழ்க் கொலையில் முக்கியபங்கு வகிக்கின்றன. அவை இளம்பிள்ளைகளிடையே செல்வாக்குப் பெற்றிருப்பதால், அவை பயன்படுத்தும் மொழி சரியானதென்ற மாயையைத் தோற்றுவித்துள்ளன. தமிழுணர்ச்சி மிகுந்துள்ள அளவுக்குத் தமிழை வழுவின்றி எழுதுவதில் ஆர்வம் இல்லாதிருப்பது வருத்தந்தருகிறது.

ஊடகங்கள் பயன்படுத்தும் மொழியை அவ்வப்போது படித்தும் கேட்டும் வருகிறவன் என்ற முறையில் என் அவதானிப்புக்குள் வந்த வழுக்களை வகைப்படுத்தி ஆராய முனைகிறேன். இது பூரணமான ஆய்வன்று. தமிழ் கற்போர், கற்பிப்போர் எனும் இருதிறத்தாரும் இத்துறையில் இறங்க இது தூண்டுகோலாக அமைந்தால் என்நோக்கம் நிறைவேறியதாகக் கருதுவேன்.

சொல் :

'கர்ப்பூரம்', கருப்பூரம், ஆகிய இரு வடிவங்களும் வழங்கி வந்துள்ளன. இரண்டையும் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், 'கற்பூரம்', என்பது செய்யுள் விகாரம். உரைநடையில் கற்பூரம் என எழுதுவது பிழை.

சில மாணவர்கள் 'பரீட்சயம்' என எழுதுகிறார்கள். இது பரீட்சை என்ற சொல்லால் ஏற்பட்டகுழப்பம். பரீட்சை வேறு. 'பரிச்சயம்'வேறு. (வெண்குடையைப் பாற எறிந்த பரிசயத்தால்" – முத்தொள்ளாயிரம்)

சில காலமாகப் 'பூப்புனித நீராட்டுவிழா' அழைப்புக்கள் அச்சேறுகின்றன. ஒரு சிறுமி பூப்பெய்துகிறாள். அவளுக்குச் செய்யப்படும் சடங்கு பூப்பு நீராட்டுவிழா ஆகும். புனிதம் தவறாகச் செருகப்பட்டு விடுகிறது.

"இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுவர ஐரோப்பிய ஒன்றியம் முயற்சிக்கலாம்..." (26.05.08 தினக்குரல்). முயல் என்ற ஏவல் வினையினடியாகப் பிறந்ததே முயற்சி என்ற தொழிற்பெயர். அதை முயற்சித்தல் என நீட்டுவது தவறு. முயலுதல் என்பதே சரி.

சிலர்" அவன் சுதாகரித்துக் கொண்டான்" என எழுதுகிறார்கள். இது தவறு "சுதாகர்" என்ற ஆண்பாற்பெயர்ச்சொல்லை 'சுதாரித்துக் கொள்ளல்' என்பதோடு குழப்பியதால் ஏற்பட்டது இந்தத் தவறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முன்றல்' என்பதும் தவறானதொரு பிரயோகமே. முன்றில் என்பதே சரி. இது எப்படி வந்தது தெரியுமா? இல் + முன் என்பது வேற்றுமைத் தொகை (விரி : இல் + இன் + அது +முன்) இதுவே பின் முன்னாகத் தொக்கது என்பர் இலக்கண நூலார். (அணிலாடு முன்றிலார் என்பது சங்ககாலப் புலவர் ஒருவர் பெயர்)

கத்தோலிக்க அன்பர்கள், சிலகாலமாக "இறை ஆசீர் வேண்டுகிறோம்" என்று எழுதிவருகிறார்கள். ' ஆசீர்' என்று ஒரு சொல் இல்லை. 'ஆசி' அல்லது 'ஆசீர்வாதம்' என்பவற்றில் ஒன்றையே தெரிவு செய்யவேண்டும்.

'நாள்' என்ற சொல்லின் பன்மை வடிவம் எது? பலர் 'நாட்கள்' என்று எழுதுகிறார்கள். 'நாட்கள்' என்பது "அன்றைக்கு இறக்கியகள்" என்ற பொருளையல்லவா தரும்?

"ஒன்பதொ டொன்றோ டேழு பதினெட் டொ டாறும் உடனாய நாள்களைதாம்" *(சம்பந்தர் கோளறு பதிகம்)*

என்ற வழக்கை நோக்குக.

பன்மை பற்றிய உசாவல் ஆங்கில வழக்கின் செல்வாக்கால் இன்று பெருவழக்காகி விட்ட 'வாழ்த்துக்கள்', 'அநுதாபங்கள்' என்ற பிரயோகங்களை மறுபரிசீலனை செய்வதன் அவசியத்தை நினைவூட்டுகிறது. தமிழ் மரபில் வாழ்த்துத்தான். அநுதாபந்தான். Congratulations, condolences என்ற ஆங்கிலச் சொற்களைத் தமிழ்ப்படுத்தியதன் விளைவே இந்தக் 'கள்' கள்.

Bus என்ற ஆங்கிலச் சொல்லைப் 'பேருந்து' என்று தமிழக அரசு தமிழாக்கம் செய்தது.(motor)உந்து. motorbike – உந்துருளி. motor bus – பேருந்து நல்லது. இதைச் சிலர் "பேரூந்து" எனத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். தமிழ்நாட்டில் 'பசும் பால்' என எழுதுகிறார்கள். ஈழத்தவர் 'பசுப்பால்' எனச் சரியாகவே பேசுகின்றனர், எழுதுகின்றனர். பசுமை + புல் = பசும்புல் என பண்புத்தொகையாக வரும். ஆனால் பசும்பாலுக்கு நிலைமொழி என்ன என்று சிந்தித்தால் குழப்பமிராது.

சந்திப் பிழைகள்

இவ்வகை வழுக்களுக்கு அதிக பங்களிப்புச் செய்பவை பத்திரிகைகளே. 'தமிழ்நாடு முதலமைச்சர்' என்ற தொடரை அடிக்கடி கேட்கிறோம், பார்க்கிறோம். இது தமிழை நாடும் முதலமைச்சர் என்று பொருள்படுகிறது.(தற்போதைய முதலமைச்சர் தமிழை நாடுபவராக விளங்குகிறார் என்பதுவேறு). வெளிநாட்டமைச்சர், பாண்டி நாட்டு முதன்மந்திரி, நாட்டு வளம், நாட்டுச் சிறப்பு என்றுதானே வழங்குகிறோம்! கருணாநிதியைத் தமிழ்நாட்டு முதலமைச்சர் என்றல்லவா குறிப்பிட வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டைமானாறு, மணலாறு என்ற பெயர்களோடு 'இல்' உருபு புணரும் போது தொண்டைமானாற்றில், மணலாற்றில் என்று வருவதே சரி.

'இ' என்ற சுட்டெழுத்தைப் பயன்படுத்தும் நுட்பமறியாதார் இழைக்கும் தவறுகள் வேடிக்கை யானவை.

இ + ஊர் = இவ்வூர்
இ + நகரம் = இந்நகரம்
இ + மன்றம் = இம்மன்றம்
இ + துறவி = இத்துறவி
இ + படைப்பு = இப்படைப்பு

வருமொழியின் இனமான மெய்யெழுத்தே புணர்த்தப் பயன்படுவது காணலாம். ஆனால் பலர், 'இவ் ஆலயம்', இவ்நிகழ்ச்சி', 'இவ்நீர் நிலை' என்றெல்லாம் மோசமாக எழுதுகிறார்கள்.

தமிழ் ஒட்டுநிலை (agglutinative) மொழி : சொற்கள் தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூன்று விதமாகப் புணரும். இந் நுட்பங்ளை அறியாதார் பிழைபட எழுதுவதால், பிழையான வழக்கே பெரு வழக்காகிவிடுகிறது.

(உ + ம்) போர் + தேங்காய் = போர்த்தேங்காய்
அம்மி + குழவி = அம்மிக்குழவி
ஆனால் ஓர் உள்ளூர்ப் பத்திரிகை தலைப்படுகிறது.
"புத்தூர் பகுதியில் மோதல்"
"பூநகரி கடலில் மோதல்"
" சிவத்தமிழ் செல்வியின் பெயரைச்சுட்டவும்"

28.05.2008 காலையில் சன் TV தந்த செய்தித் தலைப்பு இது. "லண்டனை கலக்கும் தமிழ் தாதாக்கள்." படு பிழையான இது போன்ற வழக்குகளை, கட்புல / செவிப்புல ஊடகமொன்று மக்களிடையே கொண்டு செல்கிறது.

இந்நாளில் தோன்றலைக் கவனிக்காத போக்குக் காணப்படுகிறது. 'அலைகடல்.' 'அலைக்கடல்' இரண்டும் வேறு. முதலாவது வினைத் தொகை அலைகின்ற கடல் என்று பொருள்படுவது. இரண்டாவது அலையை உடைய கடல். இதுபோலவே 'வளைகரம்' வேறு, வளைக்கரம் வேறு.

"உடும்பு பிடி" "உடும்புப்பிடி"

முதலாவது, உடும்பைக் கண்ட ஒருவன் மற்றொருவனைப் பிடிக்குமாறு ஏவியதாகக் கொள்ளலாம். " உடும்புப்பிடி" என்பது ஒரு மரபுத்தொடர். விடுவிக்கமுடியாத பொருள் எனப் பொருள்படும். பனிப்புகாரை நாம் 'பனிபுகார்' என்றெழுதினால் பனிக்குள் புகாதவர்கள் என்றல்லவா பொருள்படும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைவழு

"உங்களிடமிருந்து விடைபெறுவது கீதா" என்று ஜெயா TV அறிவிப்பாளர் "வாரந்தோறும் தமிழகம்" நிகழ்ச்சியை முடித்துக் கொள்ளக் கேட்டேன். "விடைபெறுவது" அஃறிணைக்குரிய வினைமுற்று அல்லவா? உங்களிடமிருந்து விடை பெறுபவர் என்றுதானே சொல்லியிருக்கவேண்டும்!

"மாணவன் தாக்கப்பட்டார்" என மகுடமிடப்பட்ட செய்தி 01.10.2008 தினக்குரலில் வெளிவந்தது. எழுவாய் – பயனிலை இயைபு நோக்கி இது "மாணவர் தாக்கப்பட்டார்" என்றோ " மாணவன் தாக்கப்பட்டான்" என்றோ வந்திருக்க வேண்டும்.

எண் வழு

ஊடகங்கள் பயன்படுத்தும் தமிழில் மிக மலிந்துள்ளவை எண் வழுக்களே என்பதற்குக் கீழ்க்காணும் உதாரணங்கள் சான்று பகரும்.

"ஆங்காங்கே மண்சரிவுகளும் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டுள்ளது — கேசரி 04.05.08 (கதிர்)

"பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீனா செய்துவரும் புனரமைப்புப் பணிகள் என்னை ஈர்த்துள்ளது — ஐ.நா.செயலர்" (சன் நியூஸ் 25.05.08 காலை)

"ஸ்ரீநிவாஸ கல்யாணத்தில் மஞ்சள், குங்குமம், கேசரி, லட்டு முதலிய பொருள்கள் பிரசாதமாக வழங்கப்பட்டது" — சன்நியூஸ், 07.04.08

"திருநெல்வேலி அல்வாக்கள் இனிப்பு வகைகளில் பிரதான இடத்தை வகிக்கிறது" (சன் நியூஸ் 26.06.08)

"(இதனால்) பெருந்தொகையான தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது" – இலங்கை வானொலி 26.05.08. காலைச் செய்தி

" பாகிஸ்தான் அணி விபரங்கள் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது" (சூரியன் FM,04.06.08 மாலைச்செய்தி (விபரம் என்பது சிறப்பு)

" எந்த அளவுக்கு வாய்ப்புக்களும் வசதிகளும் இருக்கின்றதோ . . ." Vijay TV 29.06.08 (நிகழ்ச்சியின் பெயர் (தமிழா, நீபேசுவது தமிழா?)

"தெருவுக்குத்தெரு செல்போன் கோபுரங்கள் அமைக்கப்பட்டு வருகிறது"(கலைஞர் TV 30.06.08)

" கனடாவில் சீல்கள் அளவுக்கு அதிகமாகப் பெருகியுள்ளது" ஜெயா TV .02.04.08 நிகழ்ச்சி : இந்த வார உலகம்"

ஆக, எல்லா வானொலி, தொலைக்காட்சி நிலையங்களும் தமிழைக் கொலை செய்வது என்று கங்கணங் கட்டிக்கொண்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கிய அமைப்பில் வழு

ஆரம்பப் பேச்சாளர்கள் பலர் "…..எனது முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்கிறார்கள். இதென்ன முதற்கண் வணக்கம்? அவர்கள் சொல்ல வருகிறது "… எனது வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்".

வாக்கியங்கள் மயக்கம் ஏற்படாதவாறு பொருளைப் புலப்படுத்த வேண்டும். " கூட்டுறவாளர் நடத்தும் விமானத்தாக்குதலுக்கு எதிரான மாபெரும் கண்டன ஊர்வலம்" – இது நாளிதழ்ஒன்றில் வந்த செய்தித் தலைப்பு. கூட்டுறவாளர் நடத்தும் விமானத் தாக்குதல் என்ற விபரீத பொருளையல்லவா இது தருகிறது! "விமானத் தாக்குதலுக்கு எதிராக, கூட்டுறவாளர் நடத்தும் கண்டன ஊர்வலம்" எனத் தலைப்பிட்டிருக்க வேண்டும்.

"கொழும்பில் எஞ்சினியருக்குப் படித்த பெண்தேவை" என்பது திருமண சேவையினர் செய்த விளம்பரம். இது பல ஐய வினாக்களுக்கு இடமளிக்கிறது.

எஞ்சினியருக்குப் படித்த — அதாவது "கொழும்பில் எஞ்சினியருக்குப் படித்த பெண் தேவை" என்பது திருமண சேவையினர் செய்த விளம்பரம். இது பல ஐய வினாக்களுக்கு இடமளிக்கிறது.

1. எஞ்சினியருக்குப் படித்த–அதாவது engineering படித்த பெண் வேண்டும்.
2. கொழும்பில் கடமைபுரியும் எஞ்சினியருக்குப் படித்த பெண் வேண்டும்.
3. வேறெங்குமன்றி, கொழும்பில் engineering படித்த பெண்ணை (யாரோ ஒருவர்) எதிர்பார்க்கிறார்.
4. எஞ்சினியர் ஒருவர் படித்த, கொழும்பில் வாழும் பெண்ணை விரும்புகிறார்,

"ஆண்கள் மருந்து கட்டும் இடம்" என்பது வெளிநோயாளர் பிரிவில் காணப்படும் அறிவித்தல். குறிப்பிட்ட இடத்தில் ஆண்கள் மருந்து கட்டுகிறார்களா? அல்லது ஆண்களுக்கு மருந்து கட்டப்படும் இடம் இதுவா?

பேரறிஞர் (அமரர்) சச்சிதானந்தன் பார்வையிற்பட்ட விளம்பரம் இது: "பாவித்த பெண்களின் சைக்கிள் தேவை" எவ்வளவு விபரீதமான பொருள் தருகிறது இது! தவிரவும், பாவித்த என்பது used அல்ல. தியானித்தல் அல்லது ஒன்றை மற்றொன்றாகப் பாவனை செய்தல், பாவித்தல் எனப்படும். மேலே 'பாவித்த' என்பது பயன்படுத்திய என்ற பொருளில் வந்துள்ளது.

உச்சரிப்புப் பிழை

தமிழர்கள் தங்கள் தாய்மொழியைச் சரியாக உச்சரிக்கின்றார்களா? சிறப்பு ழகரம் ஈழநாட்டில் உச்சரிக்கப்படுவதேயில்லை. தமிழ்நாட்டில் சில பிரிவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் இதைச் சரியாக உச்சரிக்கிறார்கள். பல்லின மக்கள் வாழும் நாடுகளில், மொழி எல்லைகளைக் கடந்த ஊடாட்டம் நிகழுகையில், ஒரு மொழியின் உச்சரிப்பு மற்றைய மொழியின் உச்சரிப்பைப் பாதிக்கும். மலையகத்தமிழர்களும் முஸ்லிம்களும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் சரளமாகப் பேசுவதால், அவர்களுடைய தமிழ்ப்பேச்சு சிங்களச் சாயல் பெறும். என்முஸ்லிம் நண்பரொருவர் அயலிலுள்ள பௌத்த விகாரையைச் சேர்ந்த இரு பிக்குகளை "பெரியசாமி", "சின்னசாமி" என்று குறிப்பிடுவார். முதலாவது சரி. இயல்பான தமிழ் உச்சரிப்பு சின்னச்சாமிதான். நண்பருடைய உச்சரிப்பு சிங்களமரபு.

அண்ணாமலையில் பட்டம்பெற்ற இசை வாணர் ஒருவருக்குக் குற்றியலுகரம் வராது. "மந்திரமாவது நீறு" என்பதை 'நீறு' என்பதை n±:r± எனப்பாடாமல் n±:ra என முற்றியலுகரமாகப்பாடுவார்.

தமிழ்நாட்டு அறிவிப்பாளர்கள் சிலர் லகர ளகர மயக்கத்துக்கு உள்ளாகிறார்கள். அண்மையில் கேட்ட இரண்டு செய்தித் துணுக்குகள் :

"I.P.S. சந்தித்த தொடர் தோ**ள்**வி ரசிகர்களுக்கு மனவருத்தத்தை உண்டுபண்ணியுள்ளது" – சன் நியூஸ் 14.05.08

கொழும்பு நகரில் முக்கிய பிரமுகர்களின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படும் பாதுகாப்பு வ**ளை**யப் பகுதியிலேயே இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது" – கலைஞர் ரீ.வி.16.05.08

முடிவுரை

மொழி மாற்றமடைந்துவரும் என்பது மொழியியலாளர் கோட்பாடு. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' எனத்தமிழிலக்கணம் அனுமதிதருகிறது. ஆனால் நாம் அறியாமையாற் செய்யும் தவறுகளை யெல்லாம் புதிய வழக்குகள் எனச்சாதிப்பது தமிழுக்கு நன்மை செய்யாது. மேலே சுட்டிக்காட்டப்பட்டவை ஊடகங்களில் வெளிவந்த பிழைகள். சமகாலத்தில் வரும் ஆங்கில ஊடகங்கள் ஒரு சிலவேனும் என்பார்வைக்கு கேள்விக்கு வருகின்றன. இத்தகைய மோசமான வழுக்கள் அவற்றில் வரக்காணோமே! நாவலர் மனம் நொந்து கூறியதுபோல் –

"தமிழ்க்கல்வியொன்றா பகிடிக்கிடனாயிற்று" என நாமும் சலித்துக் கொள்வதைத் தவிர ஒன்றுமே செய்யமுடியாதா?

அடிக்குறிப்புக்கள் :

❖ "கர்ப்பூரம் போலக் கடலுப்பிருந்தாலும் கர்ப்பூரமாமோ கடலுப்பு" (நீதிவெண்பா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையெனும் முதலீடு

– மதுரைப்பண்டிதர் க. சச்சிதானந்தன்

பரந்து விரிந்து காணப்படும் வான் பரப்புக்கு எல்லையே இல்லை. எல்லையற்ற ஆகாயப் பரப்பிலே எத்தனையோ சூரியன்கள்; ஒவ்வொரு சூரியனையும் சுற்றி கோள்களும் உபகோள்களும் சஞ்சரித்துக் கொண்டே இயங்குகின்றன. இவ்வியக்கத்தின் ஒரு கூட்டமே பால்வெளியாக நமக்குத் தெரிகின்றது.

நாம் காணும் பால் வெளியைப்போல் எத்தனையோ பால்வெளிகளைக் கொண்டவைதான் இப்பிரபஞ்சம். இப்பிரபஞ்ச சஞ்சாரத்தில் சுழலும் நம் பூமியில்தான் உயிரினங்கள் வாழ்கின்றன.

உயிரினம் வாழக்கூடிய வேறு கோள்கள் இப்பிரபஞ்ச வெளியில் இருக்கலாம் என விஞ்ஞானிகள் ஊகிக்கின்ற போதும்; அவ்யூகத்தை எவரேனும் இன்றுவரை உறுதிப்படுத்தவில்லை.

எமக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு இப்பூமியில் பிறந்ததுதான். பிறப்புக்களில் பல்வேறுவகைப்பட்ட பிறப்புக்கள் இருந்த போதும் அப்பிறப்புகளுக்குள்ளே நாம் மானிடராயப் பிறந்ததுதான் அருமையிலும் அருமை.

"இப்பூமியில் நாம் ஏன் பிறந்தோம்? பூமிக்குப் பாரத்துக்குப் பிறந்தோமா?, தாய் தரித்த கருவிலேயே நாம் அழிந்து இருக்கக்கூடாதா?" என தம்மையே நொந்துகொள்ளும் அளவிற்குப் பிறப்பு பலருக்கு இன்பத்தைக் கொடுப்பதில்லை. மகா துன்பத்தையே கொடுக்கின்றது. பிறப்பினால் வருகின்ற துன்பச் சுமைகளுக்கு ஆண் பெண்ணின் பாலுறவு தான் காரணமா?, ஆதித்தாய் தகப்பன் கட்டிக்கொண்ட பாவதோசந்தான் காரணமா? இவை அறிந்தவருமான கடவுள் தான் காரணமா? இவை எல்லாவற்றுக்கும் மேலாக முக்காலம் உணர்ந்தவரும் எல்லாவற்றையும் முன்கூட்டியே அறிந்தவருமான கடவுள்தான் காரணமா?

ஒன்றுமே விளங்கிக்கொள்ள முடியாத புதிராக இருக்கின்றதே! கவிஞர் கண்ணதாசன் கூறியது போல் "நான் பிறந்த காரணத்தை நானே அறியும் முன்னே நீயும் வந்து ஏன் பிறந்தாய்" என்னும் பாடலின் வரியை தாலாட்டுக் கீதமாக நாம் ஒவ்வொருவருமே பாடிக்கொண்டே இருப்பதுதானா?...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நவீன அறிவியல் உலகில் இப்புதிருக்கு விடைகாண முடியாதவராய் இன்று நாம் வாழ்வது போலவே அன்றும் மாமேதைகள் பலர் வாழ்ந்துள்ளனர். அதற்கு அவர்கள் சொன்ன சென்ம பாவ கன்ம பாவங்களின் தொடர்ச்சி, கருமாவினை, பூர்வஜென்ம புண்ணியம் இவையெல்லாம் ஏன்? எதற்கு? என்று காரண காரியங்களை எண்ணிப்பார்க்காத மனிதக் குழுமங்கள் மத்தியில் ஒருவித சமாதானத்தைக் கொடுத்து இருக்கலாம். ஆனாலும் அது பூரணமான தெளிவான விடையன்று. இன்றுவரை நம் ஒவ்வொருவருடைய பிறப்பு நிலைகளும் எவராலும் தெளிவுபடுத்தப்படாத நிலையில்தான் உள்ளன.

வேதங்களும், சாத்திரங்களும், மந்திரங்களும், புராணங்களும், உபநிடதங்களும், ஞானமார்க்கத்தைத் தர்க்கரீதியாகவும், வியாக்கியானங்களாவும், உபகதைகளாகவும் சொல்லிச் சொல்லி மக்களை ஆறுதல் படுத்தியதே தவிர மானிடப் பிறப்பு பற்றிய மயக்கத்தை இன்றுவரை தெளிவுபடுத்தியதாக இல்லை.

நாம் பிறந்தது எதற்காக? என்னும் வினாவை எமக்குள்ளே எழுப்பினால் நாம் பிறந்தது எனக்காகவே என்னும் பதிலே ஒலிக்கும். இப்பதில்தான் உண்மையானது.

உன்னில் நீயே நம்பிக்கை உள்ளவனாய் இருந்து உனக்காவே உன் சீவியத்தைத் திடப்படுத்தி வாழும் போதுதான் உன்னில் நீயே வெளிச்சத்தைக் காண்பாய்.

வாழ்க்கை என்னும் சதுரங்கத்தில் நீயே மையப்புள்ளி உன் புள்ளிதான் உன் வாழ்க்கை என்னும் சதுரங்கக்கோடுகளை நிர்ணயிக்கும். உன் நிர்ணயிப்பில் வரையப்படாத எந்தக்கோடுகளும் உன் வெற்றிகரமான வாழ்க்கைக்கு அரணாக நிற்கப் போவதில்லை.

உன் வெற்றிக்கு நீயே அதிபதி. அதற்கு நீ நீயாகவே இருந்து தலைமை வகித்து செயற்பட்டால்தான் பிறந்ததன் பயன் தெரியும். ஆதனால் பெறப்படும் வெளிச்சமும் தெரியும். தொடக்கம் இருந்தால் முடிவு இருப்பது போல் எல்லா செயற்பாடுகளுக்கும் தக்க பயனிலை இருக்கத்தான் செய்யும்.

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்; முயற்சி திருவினையாக்கும்; மெய்வருந்தக் கூலிதரும்; இவையெல்லாம் வாழ்க்கையின் வெற்றிக்கு எழுதப்பட்ட தாரக மந்திரம்.

வாழ்க்கை பெரும் சுமையாகி விட்டதே என்பதற்காக அதனைக் கண்டு ஓடிவிடாதே. என்னால் தேடிக்கொண்ட வாழ்க்கை உனக்காக உன் பெயரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளமாகவே இருக்கும். உன் அடையாளங்களை வரலாறாக மாற்றுவிப்பது உன் பொறுப்பே தவிர வேறு எவரேனும் அப்பொறுப்பை ஏற்கப்போவதில்லை இதற்காக வெறுமனே காத்திருக்காதே. காத்திருந்து காத்திருந்து காலங்கள் போவதுதான் மிச்சம். கண்கெட்ட பிறகு சூரிய வணக்கம் ஏன்? இளமையின் துடிப்பும், உன்னில் நம்பிக்கையும், உழைப்பும் இருக்கின்ற போதே உன் வாழ்க்கையென்னும் முதலீட்டை ஆதாயம் ஆக்கிக்கொள்! பயனுள்ளதாக்கிக் கொள்!!...

முதலும் உனதே!

பயனும் உனதே!

உன்னில் விளைந்த எச்சங்கள் உன்னில் பெறும் பயனுக்காக காத்து இருக்கின்றன. ஆலமரமாய் நீ தளைத்து நின்றால்தான் அவர்கள் உன் நிழலில் இருந்து இளைப்பாற முடியும்.

வாழ்க்கை வாழ்வதற்கே....!

வாழ்க்கை என்பது ஓர் ஒப்பற்ற உந்நதமான கலை. புழந்தமிழ் நூலோர் கலையை ஆயகலைகள் அறுபத்து நான்கென வகுத்தாலும் அதன் எண்ணிக்கை இவ்வுளவு தாம் என வரையறுத்துக்கூற முடியாது.

நாம் செய்கின்ற ஒவ்வொரு செயற்பாடும் – நடைமுறையும் ஒழுங்காக — அழகாக வடிவம் பெறும்போது அவை ஒவ்வொன்றுமே கலையாகப் போற்றப்படும். அந்நிலையில் நாம் வாழ்கின்ற ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் கலைதான்.

மானிடம் என்று தம்மையும் தம் வாழ்வியலையும் ஏனைய சீவராசிகளிடம் இருந்து பிரித்து, தமக்கென ஒரு வரையறுப்பைத் தேடிக்கொண்டதோ அன்றே மானிட வாழ்வும் கலையின் பரிணாமத்துக்குள் உட்படுத்தப்பட்டது.

தன்னந்தனியனாக வாழும் துறவு வாழ்க்கையோ, கணவன் மனைவி பிள்ளைகள் சுற்றத்தார் இவர்கள் சூழ வாழ்கின்ற குடும்ப வாழ்க்கையோ, ஒழுங்கான வரையறுப்பில் வாழப்படும்போதுதான் தனித்துவமான ஓர் அழகை அங்கு காணமுடியும். அதுவே வாழ்க்கை என்னும் கலை எனச் சொல்ல முடியும்.

நமக்கென்று அமைந்த அரிய வாழ்வுக்குரிய கலையை தூரநின்று நோக்காது நான் என்னும் தனி மனிதனாய் நின்று பார்க்காது நாம் என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்மையில் அக்கம்பக்கம் பார்த்து எல்லோரையும் அரவணைத்து வாழும் போதுதான் வாழ்வென்னும் கலை அர்த்தம் உள்ளதாய் இருக்கும்.

பொதுவாக வாழ்க்கை எதுவாக இருப்பினும் வாழ்கின்றவர் நெஞ்சங்களிலும் கரங்களிலுந்தாம் அவரவர் வாழ்க்கை அடங்கியுள்ளன. நெஞ்சம் என்பது அவரவர் உள்ளுணர்வில் எழும் எண்ணங்களையும் சிந்தனைகளையும் உள்ளடக்கியது.

கரங்கள் என்பவை அவரவர் உழைப்பையும், உழைப்பில் தளராத உறுதிப்பாட்டையும் கொண்டவை. இவை இரண்டுமே ஒன்றுக்கொன்று பற்றுக்கோடாய் நின்று செயற்படும் போதுதான் அவரவர் வாழ்வும் உயரமுடியும். வாழ்க்கையின் உயர்வு தாழ்வு இவை இரண்டுக்கும் நாமே பொறுப்பாளர். அவை பிறரால் நமக்கு வருவதில்லை. நம் வாழ்க்கையின் பங்குதாரர் நமேதாம் என்பதை புறந்தள்ளி விட்டு இறை புகழ்பாடி நம் துன்ப துயரங்கள் கழிவதற்கு அவரையே பற்றுகின்றோம்.

இன்பம் வரும்போது அவ்வின்பத்திற்கு நாமே சொந்தம் பாராட்டும் அளவு துன்பத்தை நம்மால் வந்தது என்று ஏற்றுக்கொள்ளத் தயங்குவது ஏன்?

நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் கடவுளால் நிச்சயிக்கப் படுவதாக தப்புக் கணக்குப்போட்டு நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கின்றோம். நாம் செய்யும் நிறை குறைகள் எத்தனை?.... எத்தனை?.....! அவற்றையெல்லாம் எண்ணுக்கணக்குப்போட்டு சீர்தூக்கிப் பார்ப்பது கடவுளின் வேலையில்லை.

நிலத்தைப் பண்படுத்தி விதை விதைத்து அவற்றுக்கு உரிய நீரை காலம் தவறாது பாய்ச்சி அதனால் விளையும் பயிரைப்பாதுகாத்து அறுவடை என்னும் பயனை நாமேதாம் தேடிக்கொள்கின்றோமே தவிர கடவுள் நமக்குத் தேடித் தருவதில்லை.

கடவுளுக்கு ஒன்றே ஒன்று தெரியும்...! பெரும்பாலான மனிதர் தன்னைப் புரிந்துகொள்ளாமல் ஆன்மீகம் என்னும் போர்வையில் சுகம்தேடிக் குளிர் காய்கின்றனர் என்று.

இறைஞானம் பேசி வீணாகக் காலநேரத்தை செலவுசெய்கின்ற மாந்தர் தம்முள்ள உறங்கிக்கிடக்கும் அபார சக்தியின் பெறுமதியை உணர்ந்து கொள்ளாதவராய் வாழ்கின்றனர். தம்முள் உறங்கிக் கிடக்கும் அபாரசக்திதான் என்ன?

நாளுக்கு நாள் நம்முள் மிக ஆழமாகப் படிந்துள்ள எண்ணங்கள்தாம் சக்தியாக பரிணமித்து வெளிப்படுத்துகின்றது. மாந்தர் எண்ணும் எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்களும் முனைவு பெறுவதில்லை. அவை எண்ணுவதோடே நின்று விடுகின்றன. காலத்தால் மழுங்கிவிடுகின்றன. எண்ணங்கள் முனைவு பெற்று கூர்மையடைந்து அக்கூர்மை நம்முள் நம்மையே ஆட்டுவிக்கும் போதுதான் அவ்வெண்ணத்தின் கூர்மை எம்மில் சக்தியாகப் பிறக்கின்றது.

எண்ணித் துணிந்து செயற்படும் கருமம்தான் வெற்றி அளிக்கிறது. காலம் என்பது நமக்கு நமக்கு இன்னும் கைகூடவில்லை இனிமேல் பார்ப்போம் என நல்ல காலத்துக்காக ஏங்கித்தவிப்போர் பலர் நல்ல காலம், கெட்ட காலம் என காலத்துக்கு உச்ச வரம்பு போட்டு காத்திருக்கும் சம்பிரதாயமான வாழ்க்கை நமக்கோ, பிறர்க்கோ உதவப் போவதில்லை.

இளமையில் பெறும் இன்பத்தை முதுமையில் பெற முடியாது. கார்காலத்தில் விதைப்பதை கோடை காலத்தில் விதைக்க முடியாது. அறுவடையும் அப்படித்தான். இறந்த காலம் நம்மை விட்டு நீங்கிவிட்ட காலம். எதிர் காலம் நமக்கு இன்னும் வராத காலம். நிகழ்காலம் ஒன்றுதான் நமக்கு உரிய காலம். நம் கண் எதிரே நிற்கும் நிகழ்காலம்தான் நமக்குச் சொந்தமான காலம். நிகழ்காலத்தை கைநெகிழவிடாமல் இறுகப்பற்றி தான் எண்ணிய எண்ணங்களைச் செயற்படுத்திக் கொள்ளவேண்டும். நிகழ்காலத்தை வீணடித்த எவனும் தன் வாழ்க்கை வரலாற்றில் பசுமையைத்தோற்றுவிக்க முடியாது.

இறையருளைப்போற்றி அதிலே முழுமை கண்ட மாணிக்கவாசகர் கூட "இன்றெனக்கு அருளி!"என்று இறையை இறுகப்பற்றி நிற்கின்றார். நமக்கென வையகத்தில் உள்ள வாழ்க்கை பொய்யானது அன்று; மாயை நிறைந்ததுமன்று வாழ்க்கை உண்மையானது!

மறு உலக பேரின்ப வாழ்க்கையை நம்பி இவ்வுலக வாழ்க்கையின் தேடல்களை கைவிட்டு விடாதே.

இவ்வுலக சீவியந்தான் உன் கண்முன் இருக்கும் உண்மையான சீவியம். இதுதான் உனக்கென அமைந்த உண்மையான வாழ்க்கை! உன் கண்முன் இருக்கும் இந்த வாழ்கையே நிச்சயமான வாழ்கை உனக்கென்று அமைத்துள்ள இன்பமான வாழ்க்கை!.

இந்த வாழ்க்கைக்கு நீயே கதாநாயகனாக — கதாநாயகியாக இருந்து "வாழ்க்கை வாழ்வதற்கே" என்பதற்கு களம் அமைத்து வெற்றியைக் காண்பாய். அவ்வெற்றியே, உனக்கும் இன்பம்! பிறருக்கும் இன்பம்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சி

- உதயலதா நவதீசன்

"உந்நத எண்ணம், உயர்ந்த உணர்ச்சி எழுப்பிக்காட்டும் இனியசங்கீதம் அதுவேகவிதை" என்கிறார் வால்டோர் எனும் கவிஞர். ஈழத்தின் தமிழ்க்கவிதை வளர்ச்சிபற்றிநோக்கும் பொருட்டு ஈழத்தின் இலக்கியபாரம்பரியத்தையும் சொல்லவேண்டியதேவை உள்ளது. ஈழம் தனக்கென்று ஒருதனித்துவமான இலக்கியபாரம்பரியத்தினை உடையது. கவிதை, சிறுகதை, நாவல் முதலான பல்வேறு இலக்கியத்துறைகளில் வளர்ச்சிகண்டு வந்துள்ளது. அதிலும் ஈழத்துக்கவிதைத்துறையில் தமிழ்க்கவிதைக்குச் சிறப்பானதோர் இடமுண்டு.

ஈழத்துத் தமிழ்ப் புலவர்களால் ஆக்கப்பட்ட செய்யுளிலிக்கியங்களுந் தனிப்பாடல்களும் ஈழத்தின் இயற்கைச் சூழலினடிப்படையிற் அதன்வழியிற் தோன்றியவை. மக்கள் தம் பண்பாட்டினையும் வாழ்க்கை முறைகளையும் தமிழ்மரபுபிறழாது கூறுபவை. சமூகயதார்த்தச் சூழலைப் பிரதிபலிப்பவை, ஈழத்துக்கு சிறப்பாகவுரிய நல்லை, நயினை, மாவை, கோணாமலை, கதிர்காமம் முதலிய நூற்றுக்கு மேற்பட்டதலங்களின் பெருமையைப் பக்திரசம் ததும்ப உணர்த்துபவை. இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ தமிழ் மக்களது பண்பாட்டின் பெருமையையும் சிறப்பியல்புகளையும் சொல்லோவியங்களில் வடித்துக்காட்டுபவை.

தமிழிலுள்ள பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகையின் ஈழத்துப் புலவர்களால் பாடப்பட்ட பிரபந்தங்கள் முப்பதுக்கு மேற்பட்டவகையின; அவை அகவல், அந்தாதி, அம்மானை, இரட்டை மணிமாலை, இருபாவிருபஃது, உலா, ஊஞ்சல், ஒருபா ஒருபஃது, கலம்பகம், கலித்துறை, கலிப்பா, கலிவெண்பா, காதல், காவியம், கீர்த்தனை, கும்மி, குறவஞ்சி, கோவை, சதகம், சிந்து, தூது, நான்மணிமாலை, பள்ளு, பிள்ளைத்தமிழ், புராணம், மடல், மான்மியம், மும்மணிமாலை, மும்மணிக்கோவை, விருத்தம், வெண்பா முதலியன.

ஒருதுறைசார்ந்த வளர்ச்சிப் போக்கை அறிந்துகொள்ளவேண்டின் வளர்ச்சிப் போக்கிற்கு ஏற்றதாகவும் அறிவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் இலகுவாகும் அந்தவளர்ச்சியினைக் காலப்பகுப்புகளின் அடிப்படையில் கண்டுகொள்வது வழக்காறு. இந்தவகையில் ஈழத்துதமிழ்க் கவிதைவளர்ச்சியையும் நாம் நோக்குவதற்கு இந்த இலக்கியக் காலகட்டங்களை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககாலம்

யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர்காலம் 1216 — 1621

போர்த்துக்கேயர்காலம் 1621 — 1658

ஒல்லாந்தர்காலம் 1658 — 1796

ஆங்கிலேயர்காலம் 1976 — 1947

தேசியஎழுச்சிக் காலம் 1948 எனும் அறுவையாகப் பகுத்துநோக்கலாம்.

யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர்காலம்தான் ஈழத்துக்குரியது என்று எண்ணத் தோன்றினும், தமிழிலக்கியவரலாற்றின் சங்ககாலப் பகுதியிலேயே மதுரையில் நிலவிய கடைச் சங்ககாலப் பகுதியில் சேர, சோழ, பாண்டிய நாடுகளிலிருந்து மதுரை சென்று செய்யுள்பாடி அரங்கேற்றுவதுபோல ஈழத்திலிருந்தும் மதுரைக்குச் சென்று செய்யுள் இயற்றி அரங்கேற்றிய தமிழ்ப் புலவராக நாம் பூதந்தேவனாரைக் காண்கிறோம். இவர் ஈழத்துப் பூதந்தேவனார் என்றே அழைக்கப்படுகிறார். இவரதுகாலம் கி.பி 130 வரையாகும். இதுபற்றி வித்துவான் கணேசையர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"திருவளர்மதுரைத் தென்றமிழ்ச் சங்கப்
புலவருளொருவராய்ப் புவியிசை நாட்டிய
பூதந்தேவனார் முதலிய சான்றோர்
தோன்றுதற் கிடமாந் தொன்றுகொள் சீர்த்தித்
திரைவளையீழத்துவடபால"

இலங்கை ஈழம் என்ற பெயரில் அழைக்கப்பட்டமைக்கு பட்டினப்பாலையின் "ஈழத்துணவும் காளகத்தாக்கமும்" எனும் வரிகள் சான்றாகிறது. ஈழத்துப் பூதந்தேவனாரின் பாடல்களாக, அகம் 83, 231, 307; குறுந்தொகை 189, 360,343; நற்றிணை 366 முதலானவை காணப்படுகின்றன. ஈழத்துப் பூதந்தேவனாரின் பாடலுக்கு உதாரணமாக குறுந்தொகை 360வது பாடலை நோக்குவோம். இது பொருளிலும் அமைப்பிலும் எதிலுமே சளைத்ததாகத் தோன்றவில்லை. இச்செய்யுள் தலைமகன் சிறைப்புறத்தானாக வெறியஞ்சிய தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைவிசொல்லியது:

"வெறியெனஉணர்ந்தவேலன் நோய்மருந்து
அறியானாகுதல் அன்னைகாணிய
அரும்படரெல்வம் இன்றநாம்உழப்பினும்
வாரற்கதில்லதோழிசாரற்
பிடிக்கையன்னபெருங்குரல் ஏனல்
உன்கிளிகடியுங் கொடிச்சிகைக் குளிரே
சிலம்பிற்சிலம்புஞ் சோலை
இலங்குமலைநாடன் இரவினானே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சியை அறிதற் பொருட்டு யாழ்ப்பாணத் தமிழ்வேந்தர் காலத்தை நோக்குவோம்.

யாழ்ப்பாணத் தமிழ்வேந்தரின் ஆட்சிக்காலத்தின் தொடக்கத்தில் எழுந்த தமிழ்நூல்கள் வடமொழி மொழிபெயர்ப்புக்களாகக் காணப்படுகின்றன. ஆயினும் இந்நூலின் சிறப்புயாதெனில் இவற்றில் வடமொழிச் சொற்கள் மிகஅருகிக் காணப்பட்டமையாகும்.

1310ல் போசராசபண்டிதரால் இயற்றப்பட்ட சரசோதிமாலை பாயிரம், அவையடக்கம் முதலானவற்றைக்கொண்டு விருத்தப்பாவில் அமைக்கப்பட்டது. சிங்கைச் செகரராசசேகரனால் செகராசசேகரம் எனும் வைத்திய நூல் செய்யுள் வடிவில் செய்யப்பட்டது. சோமசன்னாவால் செகராசசேகரமாலை எனும் சோதிட நூல் செய்யப்பட்டது.

திருகோணமலை பண்டிதராசரால் பாடப்பட்ட தட்சணகைலாசபுராணம், தலபுராணவரிசையில் சிறப்பிடம் பெறுகிறது. கலிவிருத்தத்தில் அமைந்த இது, பாயிரம் ஈழமண்டலச் சுருக்கம், திருமலைச் சுருக்கம், திருநகரச்சுருக்கம் முதலானவற்றைக் கொண்டமைந்துள்ளது. திருகோணமலைத் தலவரலாற்றைக் கூறுவதாகக் கவிராசரால் பாடப்பெற்ற கோணேசர் கல்வெட்டு காணப்படுகிறது. சகவீரனால் பாடப்பட்ட கண்ணகி வழக்குரை 2219 பாடல்களைக்கொண்டு அகவல், வெண்பா, சிந்து முதலான யாப்புகளில் ஆக்கப்பட்டது. இது வரம்பெறுகாணித, கப்பல் வைத்தான்காதை கடலோடுகாதை, கலியாணகாதை, மாதவி அரங்கேற்றம், இரங்கியகாதல், வயந்தமாலை தூது, வழிநடைக்காதை, வழக்குரைகாதை, குளிர்ச்சிக்காதை முதலியவற்றைக்கொண்டு அமைந்தது.

ஈழத்துக்கவிதை மூலம் அவற்றின் வளர்ச்சியை அறிவதோடு ஈழத்தின் பெருமைகளையும் சிறப்புகளையும் அறிந்துகொள்ளமுடிகிறது. ஈழத்தின் பெருமையையும், மகாவலிகங்கைச் சிறப்பையும் திருக்கரசைப் புராணத்தில் கண்டுகொள்ளலாம்.

சிற்றிலக்கியவரிசையில் பள்ளுப் பிரபந்தமும் குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குகின்றது. ஈழத்துதமிழ்க்கவிதை வளர்ச்சியின் ஒருபடிநிலையாகக் கதிரைமலைப் பள்ளுவிளங்குகின்றது. ஈழத்தெழுந்த பள்ளுப் பிரபந்தங்களுள் காலத்தால் முந்தியது இதுவாகும். இக்கதிரைமலைப் பள்ளினைப் பின்பற்றியே தமிழகத்திற் பள்ளுப் பிரபந்தங்கள் எழுந்தன எனலாம். இந்நூல் 130 செய்யுட்களைக் கொண்டது.

யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்துகாவியமாக அரசகேசரியின் இரகுவம்சம் விளங்குகின்றது. இது 2444 செய்யுள்களைக் கொண்டுள்ளது. இது காப்பிய இலக்கத்துக்குரிய நாட்டுநகர வர்ணனைகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டமைந்துள்ளது. வைத்தியநாதமுனிவரால் பாடப்பட்ட புராணமாக வியாக்கிரபாதபுராணம் விளங்குகின்றது. அத்துடன் 310 கண்ணிகளைக்கொண்டு கலிவெண்பாவாலான கைலாயமாலையும் இக்காலத்துக்குரியதாக விளங்ககின்றது.

அடுத்து வரலாற்றுக் காலப்பகுப்பில் 1621 – 1658 வரையான போர்த்துக்கேயர் காலத்தின் ஈழத்துக்கவிதை வளர்ச்சியை நோக்கலாம்.

இக்காலத்துக்குரிய முக்கிய இலக்கியங்களாக ஞானப்பள்ளு, அர்ச்யாகப்பர் அம்மானை, ஞானாந்தபுராணம் முதலியன விளங்குகின்றன. போர்த்துக்கேயர்காலத் தமிழிலக்கியங்களில் வடசொற்கள் கலந்துள்ளன. பேச்சுவழக்குச் சொற்களும் கலந்துள்ளன. செந்தமிழ் வேறுபாடுமக்களால்

உணரப்பட்டிருப்பதை அக்கால நூல்கள் சுட்டுகின்றன. "செந்தமிழாற் பள்ளினிசை தேனுலகிற் பாடுவதற்கு" என ஞானப்பள்ளிலும், "செந்தமிழைப் புன்றமிழாற் செப்பத்துணிந்து செப்பணிந்து கொண்டு" என யாகப்பர் அம்மானையும் வரும் அடிகளை நோக்கும் போது செந்தமிழ்ற் கவிபுனைய வேண்டுமெனும் ஆசை புலவர்களுக்கிருந்தது தெரிகிறது. அர்ச்யாகப்பர் அம்மானை இனிய ஓசையும், விழுமிய நடைமுறை உடைதான பெரும்காப்பிய இலக்கணங்கள் பல பொருந்திய ஒரு காவியமாக விளங்குகின்றது. இக்காலத்துக்குரிய ஞானானந்த புராணம் 1104 விருத்தப்பாவால் இயற்றப்பட்டது.

அடுத்து 1658– 1796 காலப் பகுதியான ஒல்லாந்தர் காலப்பகுதி குறிப்பிடத்தக்க ஒரு காலப்பகுதியாகும். இக்காலத் தழிழ்ப் புலவர்களுட் தலைசிறந்தோர் வரதபண்டிதர், சின்னத்தம்பிப் புலவர், மாதகல் மயில் வாகனப்புலவர் ஆகிய மூவருமாம். இவர்களியற்றிய இலக்கியங்கள் தமிழ் நாட்டிலிருந்த இலக்கியங்கள் போன்று மிக உயர்ந்த தரத்தவை. செந்தமிழில் யாக்கப்பட்டவை.

வரத பண்டிதர் இயற்றிய சிவராத்திரி புராணம், பிள்ளையார் கதை, குருநாதர் சுவாமி கிள்ளை விடுதூது அகிய மூன்றும் 17ம் நூற்றாண்டுச் சூழ்நிலையின் பெறுபேறாய்த் தோன்றியவை. சின்னத்தம்பி புலவர் இயற்றய மறைசை அந்தாதி, கல்வளை அந்தாதி என்பவும், மயில் வாகனப் புலவர் இயற்றிய புலியூர் யமக அந்தாதியும் ஈழநாட்டுப் புலவர்கள், அந்தாதி பாடுவதிற் கைதேர்ந்தவர் என்பதை உலகுக்குக் காட்டுகின்றன. இக்காலத்துக்குரிய பறாளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளுடன் போர்த்துக்கேயர் காலத்துக்குரிய கதிரைமலைப்பள்ளு, ஞானப் பள்ளு ஆகிய நான்கும் ஈழத்துக் கவிதை வரிசையை அழகு செய்து நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் வடமொழியின் செல்வாக்கு மிகக் குறைந்திருந்த காலம் ஒல்லாந்தர் காலமாகும். இக்காலத் தமிழ்ப் புலவர்கள் பலர்தம் சொந்தக் கற்பனை ஆற்றிலின் உதவிகொண்டு இலக்கியங்களைப் படைக்க விரும்பினரேயன்றி, மொழி பெயர்த்துக் காவியங்களைப் பாட விரும்பினரல்லர். இக் காரணத்தாற் பழைய செந்தமிழ்ச் சொற்கள் சின்னத்தம்பிப் புலவர் முதலியோர் பாடல்களில் வாழ்வு பெறலாயின. தமிழகத்துப் புலவர்கள் வடமொழி ஆதிக்கத்தின் தீமையை உணருமுன் ஈழத்துப் புலவர்கள் உணர்ந்து விட்டார்களெனக் கருதத்தக்கதாக 17ம், 18ம் நூற்றாண்டைய ஈழத்துச் செய்யுளிலக்கியங்கள் காட்சி தருகின்றன.

இன்று வரைக்கும் மக்களாற் போற்றிப் படிக்கப்பட்டு வரும் சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், அமுதகரம், கிள்ளை விடுதூது, பிள்ளையார் கதை முதலியன வரத பண்டிதரால் இயற்றப்பட்டவை. தூதுப் பிரபந்தங்களுட் சிறப்பான ஒன்றாக இவரது கிள்ளை விடுதூது அமைந்திருக்கிறது. அதன் காப்புச் செய்யுள் வருமாறு.

"கொற்றமிகுந் தெய்வக் குருநாத சாமிதன்மேற்
சொற்றதமிழ்க் கிள்ளைவிடு தூதுரைக்க – குற்றுணர்ந்தோன்
நான்முகத்தோன் போற்றுமுக ணக்கனுருள் பாலன்
றோன்முகத்தோன் றாளே துணை"

காவிய வரிசையிலே பூலோகசிங்க முதலியார் இயற்றிய திருச்செல்வர் காவியமும் உள்ளடங்குகின்றது. இந்நூர் 24 படலங்களையும் 1946 விருத்தச் செய்யுட்களையும் கொண்டுள்ளது. இவற்றைவிட வீரக்கோன் முதலியாரது சித்திரவேலாயுதர் காதல், இராமலிங்க முனிவரது சந்தான தீபிகை, கணபதி ஐயரின் வாளபிமன் நாடகம், கூழக்கைத் தம்பிரானின் யோசேப்பு புராணம்,சித்தி விநாயகர் திருவிரட்டை மணிமாலை, அச்சுவேலி நமச்சிவாயப் புலவரின் வரணி தல்வளை விநாயகர் வெண்பா, இணுவை சிவகாமசுந்தரியம்மை பதிகம், பிராஞ்சுப் பிள்ளையின் பிள்ளைக்கவி முதலானவை ஒல்லாந்தர் காலத்தவையாக அமைந்து ஈழத்துக் கவிதை வளர்ச்சிக்கு அணி செய்து நிற்கின்றன. ஆங்கிலேயர் காலம் 1796 – 1947 வரையான காலப்பகுதியாகும். இக்காலத்தின் ஈழத்துக் கவிதை வளர்ச்சியை இனி நோக்குவோம்.

ஆங்கிலேயரது அட்சிக் காலத்திலெழுந்த செய்யுளிலிலக்கி யங்களுட் பெரும்பாலான மதச் சார்பு பற்றியவை. சைவசமயத்தின் உட்பொருட்கள் துலங்கத் துலங்கப் பாடிய பாடல்கள் பல ஈழத்துத் தமிழலக்கியத்தை அழகு செய்து நின்கின்றன. தென் கதிரை, நல்லை, மாவை, நயினை, கோணை முதலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலங்களில் வீற்றிருக்குங் கடவுளர் மீது அந்தாதி, வெண்பா, ஊஞ்சல், அகவல், மான்மியம் முதலிய பிரபந்தங்கள் பல எழுந்தன. இவற்றுள் அந்தாதி, ஊஞ்சல் ஆகிய இருவகைப் பிரபந்தங்கள் ஈழநாட்டுப் புலவர்களாற் பெரிதும் விரும்பப்பட்டன. ஈழத்திலே சைவசமய வளர்ச்சியின் நிமித்தம் நூற்றுக் கணக்கான பக்தியிலக்கியங்களைப் பொழிந்த புலமை மேகங்கள் தோற்றுவதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்கியவர் நல்லைநகர் ஆறுமுக நாவலரெனலாம். அவர் தோற்றுவித்த புலவர் பரம்பரை இன்றும் சுடர்விட்டெரிந்து கொண்டிருக்கின்றது. இவரது பெருமை நாம் அனைவரும் அறிந்ததே."நல்லைநகர் நாவலர் பிறந்திரரேல் சொல்லுதமிழ் அங்கே சுருதி எங்கே" என்று கூறுமளவிற்கு அவரின் புகழ் உயர்ந்து நிற்கிறது. இவர் பல தனிப்பாடல்களையும் பாடியுள்ளார்.

ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர்களுட் சொல்லலங்காரக் கவிதைகள் புனைவதிற் புகழ் பெற்றவர் க.மயில்வாகனப் புலவர் ஆவார். மாலைமாற்று, கோமூந்திரி, காகபாத பந்தம், நாகபந்தம் முதலிய செய்யுள் வகைகள் பலவற்றை அவர் சிறப்பாகப் பாடியுள்ளார். சிலேடை, யமகம், திரிபு, மடக்கு, சித்திரக் முடிகின்றது. வித்துவத்திறனை வெளிப்படுத்தும் வகையிலே சிலேடைக் கவிதைகளைப் பாடுவதில் இக்காலப் புலவர்கள் ஒருவகைத் திருப்தியைக் கண்டவர் போலும். சிலேடைக்கு உதாரணமாக சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயரின் பாடலைக் கூறலாம்.

"முடிவிலா துறைச் சுன்னாகத் தான்வழி
முந்திக் தாவடிக் கொக்குவின் மீதுவந்து
அடைய ஓர் பெண் கொடிகாமத்தாள்
ஆனைக்கோட்டை புவளிக்கட்டுடைவிட்டாள்
உடுவிலான்வரப் பன்னாலை யான்மிக
உடுத்தனங் கடம்பற்ற மல்லாகத்தில்
தடைவிடாதனை என்று பலாலிகன்
சாற்றிவந்தனள் ஓரிளவாலையே"

நாயக்கர்கால இலக்கியங்களின் தாக்கம் இங்கு நிலவியமையை இச்சிலேடைக் கவிகள் காட்டுகின்றன. "நெட்டையிலை வைத்திருக்குங் செவ்வேளல்ல..." எனத் தொடரும் முருகேச பண்டிதரது விரோதச் சிலேடையும் சிறப்பானது.

இச் சிலேடையுடன் மயிலணிச் சிலேடை, வெண்பா, மயிலணி ஊஞ்சல், மயிலணிப் பதிகம், சந்திரசேகர விநாயகரூஞ்சல், குடந்தை வெண்பா, நீதிநூறு, பதார்த்த தீபிகை முதலியனவும், இவரால் பாடப்பட்டவையே. இக்காலத்திலே கும்மி இலக்கிய வடிவத்தை சமய கண்டனங்களுக்குப் பயன்படுத்தும் பண்பையும் காணமுடிகின்றது. தத்தைவிடுதூது மரபுவழிப் பிரபந்த வடிவிலே அமைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும் உள்ளடக்கத்திற் புதுமை தழுவியதாக விளங்குகிறது. அக்காலச் சமூகத்திலே பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை, அடக்கு முறைகளை மரபுக் கவிதையூடாக சரவணமுத்துப் பிள்ளை சிறப்பாகச் சுட்டிக் காட்டியுள்ளார். ஏறத்தாழ பாரதி குறிப்பிட்ட பெண் விடுதலைக் கருப்பொருளைச் சற்று அவருக்கு முன்பதாகவே இவர் சுட்டிக் காட்டியதும் குறிப்பிடத்தக்கது. பாரதியின் சிந்தனையை இவரும் கொண்டிருந்தார் என்பதைக் கண்டு கொள்ள முடிகிறது. வகை மாதிரிக்கு தந்தை விடு தூதில் இடம்பெறும் ஒரு பாடலைப் பார்க்கலாம்.

"கூட்டின் பசுங் கிளி போற்
கோதையாரை எப்பொழுதும்
வீட்டில் அடைந்து வைக்கும்
விரகிலருக் கிரைதுரைப்போம்
பூட்டித் திறந் தெடுக்கும்
பொருளாகக் கருதினரோ
கேட்டிலரோ பைங்கிளியே
கிஞ்சுகவாய்ப் பைந்தொடிபாற்
கிளத்தாய் பசுங்கிளியே"

இக்காலத்தவரான, சேனாதிராச முதலியார் நல்லை வெண்பா, நல்லையந்தாதி, நல்லைக் குறவஞ்சி, நிராவிக் கலிவெண்பா முதலியவற்றைப் பாடியுள்ளார். 1785ல் நல்லூர்க் கந்தசுவாமி கிள்ளைவிடுதூது சந்திரசேகர பண்டிதரால் இயற்றப்பட்டது. 1806ல் க.ஆறுமுகம் என்பவரால் திருகோண மலை அந்தாதி பாடப்பட்டது. 1819ல் பீதாம்பரப் புலவரால் மறைசைக் கலம்பகம், மறைசைத் திருப்புகழ், நீர்வை வெண்பா, வல்லிபுரநாதர் பதிகம் ஆகிய பிரபந்தங்கள் பாடப்பட்டன. 1839ல் விசுவாத சாத்திரியாரால் வண்ணைக் குறவஞ்சி நகுல மலைக் குறவஞ்சி என்பன பாடப்பட்டன. வைத்தியநாதச் செட்டியாரால் பிள்ளைக் கவிப் பிரபந்தம் ஒன்று பாடப்பட்டது. அது நெல்லிய வோடை, அம்பாள் பிள்ளைக்கவி என்பதாகும். திருவாக்குப் புராணம், சீட்டுக்கவி, புலவராற் படை முதலியன கனகசபைப் புலவரால் பாடப்பட்டன. குமாரசுவாமி முதலியாரால் அருளம்பலக் கோவை, தீருவிற் சுப்ரமணியர் பதிகம், மூளாயச் சித்தி விநாயகர் ஊஞ்சல் இந்திரகுமார நாடகம் முதலியன. இக்காலப் புலவர்களுள் சி.வை.தாமோதரம்பிள்ளை, அம்பிகைபாகர், திருஞானசம்பந்த உபாத்தியாயர், சிவசம்புப் புலவர், அகிலேசபிள்ளை, வேன்மயில்வாகனப் புலவர், வேலணைக் கந்தபிள்ளை, ஏரம்பையர், சரவணமுத்துப் பிள்ளை, கயிலாச பிள்ளை, சிவப்பிரகாசச பண்டிதர் அருள்வாக்கி அப்துல் காதுறுப் புலவர், அப்துல் ரகுமான் என அடுக்கிக் கொண்டே போகலாம்..

(மறு இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைமையும் புதுமையும்

பழைமை கழிதல் புதுமையுடன் சேரல்
வழுமைதான் என்றிடிலுந் தீதே – பழுதில்லா
நல்லனவாம் என்ப நிலைப்ப தொழித்தலொடு
பொல்லாதன புகுத லும்.

ஓரெழுத் தேனும் உகந்தவிடம் மாறிடுங்கால்
சீர்மை தவறிடுமே செந்தமிழில் – ஓராதேன்
வேரறுக்க மாற்றார்தம் வேற்று மொழிவழக்கைச்
சேர்த்தான் தமிழழிக்கத் தான்.

தன்கா லுறுதி தனைநோக்கான் மாற்றார்கால்
போன்ஆம் எனவெண்ணிப் பற்றிடுவான்– தன்கால்
நடையிழந்த தாம்காக்கை நாடியுவந் ததன்ன
நடைபயிலப் போனகதி போல்.

ஒன்றோடொன் றொன்றின் இரண்டாம் அசைச் சீர்கள்
ஒன்றோடொன் றென்றிமிகு ஓசைதரும் – அன்றேல்
கணக்குத் தவறுவபோல றான்கவியும் சொல்சேர்
பிணத்துக் குவமை பெறும்.

தாயைப் பிழைத்தோன் தமிழைப் பிழைத்தழிப்போன்
சேயாவா ரோர்சூலில் ஈரென்றே–தாயேபோல்
தாய்மொழியை நெஞ்சத்துள் தாங்கு பிழைநேரா
தாய்தாய் வளருந் தமிழ்.

- புலவர்மணி ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம. பார்வதிநாதசிவம்

(10.09.2012 அன்று
'புலவர்மணி' பட்டம் வழங்கப்பட்டது)

தம்பி ஐயா மனோஜ்குமார்
(பண்டித வகுப்பு மாணவன்)

சிறந்த மரபு வழிக் கவிஞராக பத்திரிகை ஆசிரியராக கட்டுரை எழுத்தாளராக, ஆசிரியராக இலக்கியப் பேச்சாளராக ஈழத்தவர்களால், பன்முகத்தளங்களில் அறியப்பட்டவர் புலவர் ம. பார்வதிநாதசிவம் . இவர் 14.02.1936 இல் குருகவி மகாலிங்கசிவம் – அருளமுத்து தம்பதிகளின் நான்காவது புத்திரனாக மாவிட்டபுரத்திற் பிறந்தார்.

இவர் பிறந்த குடும்பமோ மிகநீண்ட இலக்கியப் பாரம்பரியம் மிக்க குடும்பமாகும். இவரது தந்தையார் குருகவி.ம.வே.மகாலிங்க சிவம் பரீட்சை எடாத பண்டிதர் என்று போற்றப்பட்டவர். 10 ஆவது வயதிலேயே பழனிப்பதிகம் பாடிக் குருகவி என்ற பட்டம் பெற்ற சிறந்த கவிஞர் . இவரது பேரனார் உரையாசிரியர் என்றும் பிள்ளைப் புலவர் என்றும் போற்றப்பட்ட ம.க.வேற்பிள்ளை திருவாதவூரடிகள் புராணம், புலியூரந்தாதி , அபிராமி அந்தாதி, என்பவற்றுக்கு உரை எழுதியதுடன் ஈழத்தின் வரலாறு கூறும் ஈழமண்டல சதகத்தையும் இயற்றியவர். மட்டுவில் சந்திரமௌளீச வித்தியாலயத்தின் ஸ்தாபகராகவும் சிதம்பரம் நாவலர் பாடசாலையின் தலைமை ஆசிரியராகவும் இருந்தவர்.

புலவர் தனது ஆரம்பக் கல்வியை வீமன்காமம் மகாவித்தியா லயத்திற் கற்றார். இங்கு இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகரிடம் கல்வி கற்கக் கிடைத்த வாய்ப்பு இவருக்குத் தமிழார்வத்தை ஊட்டியது. பின்னர் மகாஜனாக் கல்லூரியில் இவர் இடை நிலைக்கல்வியைப் பெற்றுக் கொண்டார். இங்கு கவிஞர் செ. கதிரேசர்பிள்ளையின் கற்பித்தல் புலவருக்குள் இருந்த இலக்கிய ஆர்வத்தையும் கவிதை எழுதும் திறனையும் வளர்த்து விட்டது. புலவர் S.S.C வகுப்புக்களிற் கற்கும் போதே கவிதைகள் வீரகேசரி சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கி விட்டன.

பிரசுரமான இவரது முதற் கவிதையான வெய்யோன் என்ற கவிதையிலுள்ள

"வானத்தைப் பொன்னாக்கி
விடுவோ மென்று
வானவர்கள் செய்த ஒளி
மருந்தோ அன்றி
வானத்தின் திலகமோ
மரங்கள் தந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்கட்கு வண்ணமிடும்
கலைஞனோ நீ
வானத்தே நின்று
பொன் அம்பினாலே
வையத்தின் இருள்
கடியும் வீரன் தானோ?
நானிலத்தே ஏழைகட்கும்
செல்வந்தர்க்கும்
நடுநிலைமை வகிக்க வைத்து
பொன் விளக்கோ?"

என்னும் பாடல் புலவரின் இளமைப் பருவக் கவித்துவத்துக்குச் சான்றாகின்றது.

1957 இல் இவர் புலவர் பட்டம் பெறுவதற்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்குச் சென்றார். நான்கு வருடக்கல்வியின் பின்னர் புலவர் பட்டத்தைப் பெற்றுக் கொண்டு நாடு திரும்பி மருதனார்மடம் இரமநாதன் கல்லூரியில் இயங்கிய இராமநாதன் அக்கடமியிலும் பின்னர் கண்டி புனித அந்தோனியார் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணி புரிந்தார்.

1977 இல் இடம் பெற்ற இனக்கலவரத்துடன் ஆசிரியப் பணியை விட்டு யாழ்ப்பாணம் திரும்பிய புலவர் அதன் பின் பத்திரிகைத் துறையுடன் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டார். ஏற்கனவே கலைக்கண் சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளிற் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டிருந்த புலவர் 1979 இல் ஈழநாடு பத்திரிகையிற் சேர்ந்து உதவி ஆசிரியராகவும் பதவி உயர்வு பெற்றார். ஈழநாட்டின் செய்தி ஆசிரியராக இருந்த எஸ்.எம். கோபாலரத்தினத்தின் தொடர்பு புலவருக்கு பத்திரிகைத் துறையில் முழுமையான அறிவையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியது.

ஈழநாடு வன்முறையாளரால் நிறுத்தப்பட்ட பின்னர் 1989 இல் முரசொலியில் இணைந்து சிறிது காலம் உதவி ஆசிரியராகவும் பின்னர் வாரமலர் ஆசிரியராகவும் பணியாற்றினார்.1992 இல் இருந்து 2002 வரை உதயன் பத்திரிகையில் பணியாற்றிய பின் ஓய்வு பெற்றார். பத்திரிகைத்துறையில் இவரது பணிகள் பண்டைய இலக்கியங்களை இன்றைய தலைமுறைக்கு அறிமுகம் செய்தமை. போட்டிகள் மூலம் ஈழத்துத் தமிழ் அறிஞர்களைச் சாதாரண வாசகர்களுக்கு அறிமுகம் செய்தமை. இளம் எழுத்தாளரை ஊக்குவித்தமை என மூவகைகளில் அமைந்தன.

மகாகவியால், து.உருத்திர மூர்த்தி, கவிதைத்துறையில் "எமது எதிர்பார்ப்பு" என நம்பிக்கையுடன் கூறப்பட்ட புலவர் ம.பார்வதிநாதசிவம் இதுவரை காதலும் கருணையும் (1972) இருவேறு உலகம் (1980) இன்னும் ஒரு திங்கள் (1988) இரண்டு வரம் வேண்டும் (1985) பசிப்பிணி மருத்துவன்(2001) மானங்காத்த மறக்குடி வேந்தன் என்னும் 05 கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார். இவற்றுடன் கட்டுரைத் தொகுப்பான தமிழ்ச் செல்வம் 2009 இல் வெளியிடப்பட்டது.

இவற்றுள் காதலும் கருணையும் தொகுப்பில் காதலும் கருணையும் என்னும் குறுங்காவியமும் 21 தனிக் கவிதைகளும் அடங்குகின்றன. இன்னும் ஒரு திங்கள், இரண்டு வரம் வேண்டும். இருவேறு உலகம் ஆகிய மூன்று நூல்களும் தனித்தனிக் குறுங் காவியங்கள் ஆகும்.பசிப்பிணி மருத் துவன், மானம் காத்த மறக்குடிவேந்தன் என்பவை சங்க காலத்தில் வாழ்ந்த மன்னர் பெருமை கூறும் புறப்பொருள் சார்ந்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது தனிக் கவிதைகள் சமகால சமூகத்திற் காணப்பட்ட நல்ல விடயங்களையும், சீர்கேடுகளையும் நகைச்சுவை உணர்வுடன் கூறுபவையாக அமைந்திருந்தன. காதலும் கருணையும் தொகுப்பில் அமைந்த அபூர்வ வைத்தியர் என்னும் கவிதையில்

"நாடியைப் பார்த்தார் இல்லை.
நயனத்தைப் பார்த்தார் இல்லை
மாடியைப் பார்த்தவாறே
மருந்தினை எழுதித் தந்தார்
நாடியைப் பார்த்துத் தந்தால்
நன்றென்றேன் அருகில் நிற்கும்
லேடியைப் பார்க்க வேண்டும்.
லேட் இன்னே செல்செல் என்றார்" எனும் பாடல் மருத்துவர் சிலரிடம் காணப்படும் நோயாளியை அலட்சியம் செய்யும் குறைபாட்டை நகைச் சுவையுடன் இயல்பாகச் சித்திரிக்கிறது. இக் கவிதை ஈழத்து விமர்சகர் பலராற் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்க தாகும்.

"புலவர் ம.பார்வதி நாதசிவம் அவர்கள் வித்துவ பரம்பரையைச் சேர்ந்தவர். கவிதையும் உரையும் அவரது பரம்பரைச் சொத்து குல வித்தை கல்லாமற் பாகம்படும் என்பதற்கமையப் புலவர் அவர்களுக்கும் கவித்துவம் அடி பணிகிறது" எனப் பண்டிதர் வ. நடராஜா குறிப்பிட்டமை இங்கு நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

சிறந்த கட்டுரை ஆசிரியராகவும் விளங்கிய புலவர், தான் பணியாற்றிய வற்றுள் ஈழ நாடு, முரசொலி, உதயன் ஆகிய மூன்று பத்திரிகைகளிலும் ஐம்பதிற்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். இவற்றுள் தெரிவு செய்யப்பட்ட 22கட்டுரைகள் தமிழ்ச் செல்வம் என்னும் நூலாக வெளியிடப்பட்டுள்ளன.

பண்டைய இலக்கியங்களை யும், இலக்கிய கர்த்தாக்களையும் இன்றைய தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்துவனவாக இக் கட்டுரைகள் அமைந்திருந்தன. தேவையான இடங்களில் மேலைத்தேய இலக்கியங்களையும் ஒப்பிட்டுக் காட்டி விளக்கியுள்ளமை அவரது ஒப்பியலாய்வு மனப்பாங்கைக் காட்டுகிறது.

1966ஆம் ஆண்டில் மயிலங்கூடலைச் சேர்ந்த பரமேஸ்வரியைத் திருமணம் செய்த புலவருக்கு பாரதி, மகாலிங்க சிவம், இளங்கோ, பாலமுரளி என்னும் நான்கு பிள்ளைகள் உள்ளனர். இவர்களும் இன்று இலக்கியத் துறையில் ஈடுபட்டு வருவது அனைவரும் அறிந்ததே. இவ்வகையில் உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளையுடன் தொடங்கிய இலக்கியப்பணி ஆறாத் தொடர்ச்சியாக இன்று நான்காவது பரம்பரையினராலும் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

புலவர் பற்றி...

முழுப்பெயர் :
மகாலிங்கசிவம் பார்வதிநாதசிவம்
பிறந்த திகதி :14.01.1936
இடம் : மாவிட்டபுரம்
வயது : 76
தற்போதைய முகவரி: நந்தாவில் வீதி, கொக்குவில்.

கல்வி

ஆரம்பக்கல்வி :
வீமன்காமம் மகாவித்தியாலயம்
இடைநிலைக்கல்வி :
தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி
புலவர் பட்டக் கற்கைநெறி :
அண்ணாமலை பல்கலைக் கழகம் (1957)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தொழில்

மருதனார்மடம் இராமநாதன் அக்கடமி

கண்டி சென். அன்ரனிஸ் கல்லூரி

கவிதைப்பணி

ஈழத்து மகாகவி து.உருத்திரமூர்த்தியால் "எமது எதிர்கால எதிர்பார்ப்பு" என்று நம்பிக்கையோடு அழைக்கப்பட்ட இவர் ஐந்து கவிதைத் தொகுப்புக்களைத் தந்துள்ளார்.

1. காதலும் கருணையும் (1972)
2. இருவேறு உலகம் (1980)
3. இன்னும் ஒரு திங்கள் (1988)
4. இரண்டு வரம் வேண்டும் (1985)
5. பசிப்பிணி மருத்துவன் (2001)

புலவரின் கவித்துவம் பற்றி...

1. பேராசிரியர் க.கைலாசபதி

பார்வதிநாதசிவம் போல ஒரு வரம்பிற்குள் நிற்கும் அதே வேளை காலப் போக்கில் நின்று விலகித் தனித்து நிற்காமல் இயன்றளவில் அதை அனுசரித்தும் செய்யுள் இயற்றுவோர் பொதுவாழ்வில் பயன்படுத்தும் யாப்பு அமைதிகளைக் கொண்டு உணர்வுபூர்வமாக எளிமைத் தன்மையுடன் புலவர் பாடுபவர். எவரும் இல்லை.

2. பண்டிதர் வ.நடராஜா

புலவர் பார்வதிநாதசிவம் அவர்கள் கவித்துவ பரம்பரையைச் சேர்ந்தவர். கவிதையும் உரையும் அவரது பரம்பரைச் சொத்து. குலவித்தை கல்லாமற் பாகம்படும் என்பதற்கேற்ப புலவர் அவர்களுக்கும் கவித்தவம் அடிபணிகிறது என்கிறார்.

புலவரின் கவித்துவத்தை வளர்த்தெடுத்த தமிழக இலக்கிய வாதிகள்

1. பாவேந்தர் பாரதிதாசன் :- அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கற்றபோது புலவர் இவரை அடிக்கடி சென்று சந்திப்பார். தனது கவிதைகள் எளிமையாக அமைய இவரே காரணம் என்பார்.

2. டாக்டர் மு. வரதராசன்
3. தண்டபாணிதேசிகர்
4. சோமசுந்தர பாரதியார்

இறுதி இருவரும் புலவரின் பேரனார் ம.க வேற்பிள்ளையிடம் கல்வி கற்றவர்கள்.

பத்திரிகைத் துறை

1. கலைமகள் - உதவி ஆசிரியர்
2. ஈழநாடு உதவி ஆசிரியர் - (1977)
3. முரசொலி - (1989)
4. உதயன் - (1992 - 2002)

பத்திரிகைத் துறைசார்ந்த பணிகள்

1. கட்டுரைகள் மூலம் பழைய இலக்கியங்களை இன்றைய தலைமுறைக்கு அறிமுகம் செய்தமை. (இவற்றுள் 22 கட்டுரைகள் தமிழ்ச்செல்வம் என்னும் நூலாக வெளிவந்துள்ளன.)

2. பேட்டிகள் மூலம் ஈழத்து அறிஞர்களின் ஆளுமையை வெளிக் கொணர்ந்தமை.

3. ஆக்கங்களைப் பிரசுரித்து இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்தமை.

புலவரின் ஆளுமை உருவாக்கத் திற்குக் காரணமான புலவர் குடும்ப மூத்த அறிஞர்கள்

1. புலவரின் பேரனார் உரையாசிரியர் ம.க வேற்பிள்ளை

ஈழ மண்டல சதகம் கவிதை நூலை எழுதியதுடன் திருவாதவூரடிகள் புராணம், அபிராமி அந்தாதி, புலியூர் அந்தாதி என்பவற்றுக்கும் உரை எழுதியவர். சிதம்பரம் நாவலர் பாடசாலை அதிபராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவர். மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாசாலை ஸ்தாபகர்.

2. புலவரின் தந்தையார் குருகவி ம.வே. மகாலிங்கசிவம்
பரீட்சை எடாத பண்டிதர் என்று போற்றப்பட்டவர் பல தனிப் பாடல்களை இயற்றியவர். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிகலாசாலை விரிவுரையாளர்.

3. பண்டிதர் ம.வே திருஞானசம்பந்தப் பிள்ளை
புலவரின் பெரியப்பா
1.ஆரம்ப கால நாவலாசிரியர் (3நாவல்கள்)
2.இந்து சாதனப் பத்திரிகையாசிரியர் (32 வருடங்கள்)
3. 40 ற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியும் உரை எழுதியும் பதிப்பித்தவர்.
4. சரஸ்வதி விலாசபை நாடகக் குழுவை உருவாக்கியவர். எட்டு நாடகங்களை எழுதி நடித்தவர்.

4. பண்டிதை இ. பத்மாசினி
புலவரின் பாட்டி ஈழத்தின் முதற் பெண் புலவர். இவர் புலோலி பசுபதீசுவரர் பதிற்றுப்பத்து அந்தாதியை (1922) இயற்றியவர். இவரே ஈழத்தின் முதற் பெண் மொழி பெயர்ப்பாளரும் முதற்பெண் பதிப்பாசிரியரும் ஆவார்.

5.செல்வி. பிரபாவதி மகாலிங்கசிவம்
புலவரின் சகோதரி அண்ணாமலைப் பல்கலைக்கழக M.A பட்டதாரி.

புலவரின் தமிழ் பற்றிய கவிதையொன்று...

வாழ்க தமிழ்

கனிமொழியே தனிமொழியே
கவின்மொழியே வாழ்க!
கற்பனையே அற்புதமே
பொற்புருவே வாழ்க!
பனிமலரே எனதுயிரே
தனிச்சுவையே வாழ்க!
பாலிலவே வானமுதே
தேனனையாய் வாழ்க!
இயலென்றே நீவளர்ந்தாய்

இவ்வுலகோர் மகிழ்ந்தார்
இசையென்றே நீ செழித்தாய்
இவ்வுலகோர் நெகிழ்ந்தார்
நயமெல்லாம் மிகக்கொண்ட
நாடகமாய் எழுந்தாய்
நாட்டினரும் உலகினரும்
நாமதிகம் உயர்ந்தார்.
அகப்பொருளாய் புறப்பொருளாய்
அரும்பொருளாய் வாழ்க!

அகத்தியனால் காப்பியனால்
வளர்ந்தனைநீ வாழ்க!
மிகப்பலவாய் இகப்புகழாய்
விளங்கிடுவாய் வாழ்க!
மென்மொழியே செந்தமிழே
என்னுயிரே வாழ்க!
பாட்டாக முன்நடந்தாய்
உலகநிலை கண்டாய்
பாரினிலே உரை நடையாம்
புதுநடையும் கொண்டாய்
காட்டாறு போல்நீயோ
காலமெல்லாம் விரைந்தாய்
கட்டழகு குன்றாத
மேனியினாய் வாழ்க!
கவிதைஎனப் புலவோர்கள்
உனைவியந்தே நிற்பார்
கதையென்றும் நாவலென்றும்
பலர்கூடி நயப்பார்
புவிபோற்றும் புகழ்படைத்தாய்
பூங்கொடியே வாழ்க!
புதுமொழியே மதுமொழியே
பழமொழியே வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

(10.09.2012 அன்று
"புலவர்மணி" பட்டம் வழங்கப்பட்டது)

முழுப்பெயர் :
அகமது ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

முகவரி : 16. School Avenue, Off Station Road, Dehiwala, Sri lanka.

பிறப்பிடம் : மருதமுனை, கிழக்கு மாகாணம், இலங்கை.

பிறந்த திகதி : 01.09.1943.

தொழில் : தனியார் மருத்துவம்.

தந்தையார் :
புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன்.

தாயார் : ஆயிஷா உம்மா

மனைவி : ஹம்ஸியா பரீதா

ஞானத்தந்தை : பத்திரிகைத்துறை ஜாம்பவான், அறிஞர் எஸ்.டி.சிவநாயகம்

இலக்கியப் பிரவேசம் : 1965

இலக்கிய வெளிப்பாடு :

காவியம், கவிதை, சிறுகதை, புதினம், சிறுவர் இலக்கியம், கட்டுரை மொழிமாற்றம் (கவிதை)

வெளியிடப்பெற்ற நூல்கள் :

1. முத்துநகை 1989

2. பாலையில் வசந்தம் 1989

3. மஹ்ஜபீன் காவியம் 1992

(600 பாடல்கள்) இக் காவியம் தென் இந்தியா புதுக் கோட்டையில் நடைபெற்ற அகில உலக இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கிய முதலாம் மாநாட்டில் வெளியிடப் பெற்றது. சென்னையில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் விமர்சனத்துடன் அறிமுகம் செய்யப்பெற்றது.

4. புனித பூமியிலே காவியம் 1998 (1000 பாடல்கள்) (சென்னை மறைமலை அடிகள் நூலகத்தில் கவிஞர் மேத்தா அவர்களின் விமர்சனத்துடன் வெளியிடப்பெற்றது)

5. பனிமலையின் பூபாளம் 1995 (மலையகக் கவிதைத் தொகுப்பு)

6. கருகாத பசுமை (புதினம்) 2000 தேசிய நூலக ஆவணவாக்கல் சபையின் அநுசரணையுடன் வெளியிடப் பெற்றது இரண்டு பதிப்புக்கள்)

7. ஜின்னாஹ்வின் இரு குறுங் காவியங்கள் 2001 (பிரளயம் கண்ட பிதா, தாய்க்கென வாழ்ந்த தனயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தேசியநூலக ஆவணவாக்கல் சபையின அநுசரணையுடன் வெளியிடப் பெற்றது இரண்டு பதிப்புக்கள்)

8. கடலில் மிதக்கும் மாடிவீடு 2002 (சிறுவர் பாடல்) (தேசிய நூல் அபிவிருத்தி சபையின் அநுசரணையுடன் வெளியிடப் பெற்றது)

9. அகப்பட்ட கள்வன் 2003 (சிறுவர் படக்கதை) (பிரித்தானிய யுனிசெப் நிறுவனத்தால் வெளியிடப் பெற்றது)

10. பெற்றமனம் 2003 (சிறுகதைத் தொகுப்பு) (கலாசார அலுவல்கள் அமைச்சினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அங்கீகாரம் பெற்றது)

11. எங்கள் உலகம் –2003 (சிறுவர் பாடல்கள்) (தேசிய நூல்அபிவிருத்தி சபையின் அநுசரணையுடன் வெளியிடப் பெற்றது)

12. பண்டார வன்னியன் காவியம் 2005 (1500 பாடல்கள்) (தேசிய நூலக ஆவணவாக்கல் சபையின் அநுசரணையுடன் வெளியிடப் பெற்றது)

13.திருநபி காவியம் – 2006 (சென்னை பரமக்குடியில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் வெளியிடப் பெற்றது. சென்னையில் கவிக்கோ அப்துல் ரகுமானின் அவர்களின் விமர்சனத்துடன் அறிமுகம் செய்யப்பெற்றது)

14. திருமறையும் நபிவழியும் 2007

15. வேரறுந்த நாட்கள் 2008

(சிறுகதைத் தொகுப்பு) (கலாசார அலுவல்கள் அமைச்சினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அங்கீகாரம் பெற்றது)

16. ராகுலுக்கு ஒரு புது வண்டி. 2008.

17. சிறுமியும் மந்திரக் கோலும் அமரிக்க ("ஹோம் ரு றீட்" ஸ்தாபனத்தால் வெளியிடப் பெற்றது).

18. தீரன் திப்புசுல்தான் காவியம் 2010 (1600 பாடல்கள்) சென்னை தேவநேயப் பாவாணர் அரங்கில் சமநிலைச் சமதாயம் சஞ்சிகை சார்பில் கவிமாமணி அப்துல் காதர் அவர்களின் விமர்சனத்துடன் வெளியிடப் பெற்றது)

19. அன்பின் கருணையின் பேரூற்று – 2010

மொழிமாற்றக் கவிதைகள்.

20. வாத்தியார் மாப்பிள்ளை காவியம்.

21. "கேள்வியும் பதிலும்"

(மகாகவி இக்பாலின் ஷிக்வா ஜவாபே ஷிக்வா கவிதைகளின் மொழிமாற்றக் கவிதைகள்).

22. "வல்லுவம்" கவிதைத் தொகுதி. (வல்லுவம் என்பது பண்டைய பாவனையில் இருந்த சுருக்குப் பை)

அச்சிலிருப்பவை : நாயனொடு வசனித்தநந்நபி காவியம்.

வெளியிடப்படவுள்ள நூல்கள் : "ஜின்னாஹ்வின் கவியரங்கக் கவிதைகள்"

ஆய்வுகள் :

1. மஹ்ஜபீன் காவியம்,புனித பூமியிலே காவியம் என்னும் இருகாவியங்களும் கவிமாமணி அகளங்கன் (ரி.தர்மராஜா) அவர்களால் ஆய்வுசெய்யப்பட்டு 1999ல் கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு என்ற தலைப்பில் நூலாக வெளியிடப் பெற்றது.

2. 2002ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் இந்தியத் தமிழ்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் டாக்டர் மு.ஹம்ஸா அவர்களால் ஜின்னாஹ்வின் இரு குறுங் காவியங்கள் என்னும் தலைப்பில் அதே காவியங்கள் ஆய்வு செய்யப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டு, ஆய்வரங்கக் கோவையிலும் வெளியிடப் பெற்றது.

3. சென்னை எஸ்.ஐ.ரி. கல்லூரி பேராசிரியை செல்வி கருகாத பசுமை நாவலை ஆய்வு செய்து ஆறாவது உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் கட்டுரை சமர்ப்பித்தார்.

4. மஹ்ஜபீன் காவியம், புனித பூமியிலே காவியம் ஆகிய இரு காவியங்களும் இந்திய தமிழ் நாட்டின், வேலூர் மாவட்ட மேல்விசாரம் அப்துல் அக்கீம் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். முகம்மது அலி அவர்களால் ஈழக் கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு என்ற தலைப்பில் ஆய்வு செய்யப்பட்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் 2006ம் ஆண்டில் டாக்டர் பட்டம் பெற்றார்.

5) 2005ல் பேராதனைப் பல்கலைக் கழக மாணவி செல்வி எஸ்.எச். நஉமியாபேகம் அவர்கள் "ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் காவியங்கள் ஒரு மதிப்பீடு" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து தனது சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்றார்.

6) 2007ல் சப்பிரகமுவ பல்கலைக் கழக மாணவி செல்வி பர்மிலா அவர்கள் "ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் காவியங்கள் ஒரு ஆய்வு" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து தனது சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்றார்.

7) தற்பொழுது (2011) மதுரை காமராஜர் பல்கலைக் கழக மாணவர் எஸ்.சையத் அலி அவர்கள் தனது முனைவர் பட்டத்துக்கான ஆய்வினை "ஜின்னாஹ் ஷரிபுத்தீன் காவியங்கள்"என்னும் தலைப்பில் செய்து கொண்டிருக்கின்றார்.

8) தற்பொழுது (2011) யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவி செல்வி சியாமினி "ஜின்னாஹ் ஷரிபுத்தீன் காவியங்கள்"என்னும் தலைப்பில் தனது சிறப்புக் கலைமாணிப் பட்டத்திற்காக அய்வு செய்து கொண்டி ருக்கின்றார்.

9) மேலும் இருபது இந்திய ஆய்வாளர்கள் பல்வேறு தலைப்புக்களில் ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் பல்வேறு படைப்புக்களையும் ஆய்வு செய்து அவர் புற்றிய சிறப்பு மலருக்காகக் கட்டுரைகள் தந்துள்ளனர்.

அகில இலங்கை ரீதியாகப் பெற்ற பரிசில்கள்:

1)தேசிய ஹிஜ்ரி கவிதைப் போட்டி 1980 (2ஆம். பரிசில்) (கலாசார அமைச்சினால் நடத்தப் பெற்றது)

2) தேசிய மீலாத் விழா-கவிதைப் போட்டி -1986 (முதற்பரிசு)

3) மலையகக் கலை இலக்கியப் பேரவை நடத்திய மரபுக் கவிதைப் போட்டி - 1987 (1ஆம். பரிசில்)

4) கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்திய கவிதைத் தேர்வுப் பரிசு - 1988

5) கொழும்புக் கலா மன்றம் நடத்திய நமது நாடும் தமிழும் - கவிதைப் போட்டி -1989 (2ஆம்.பரிசில்)

6) புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை ஒருபா ஒருபஃது - கவிதைப் போட்டி - 1989 (3ஆம். பரிசு)

7) கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்திய அனைத்து இலங்கை கவிதை உயர்நிலைத் துறைப் போட்டி (முத்துநகை) 1991 -
(1ஆம் பரிசில்)

8) கலாசார அமைச்சினால் நடத்தப்பெற்ற சிறுகதைப் போட்டி - 1991 - (4ஆம் பரிசு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடத்திய நாவற்குழியூர் நடராசன் கவிதைப் போட்டி - 1996 - (1ம். பரிசல்)

10) வடகிழக்கு மாகாண சாகித்ய மண்டலப் பரிசில் (புனித பூமியிலே காவியம்)-1998.

11) யாழ் இலக்கிய வட்டப் பேரவைப் பரசில் - 1998 - (புனித பூமியிலே காவியம்)

12) தினகரன் பத்திரிகை, மலையக இலக்கியப் பேரவை இணைந்து நடத்திய அகஸ்த்தியர் நினைவுச் சிறுகதைப் போட்டி - 2000

(இரண்டாம் பரிசு)

13) கலாசார அமைச்சு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் இணைந்து நடத்திய மீலாத் சிறுகதைப் போட்டிப் பரிசில் - 2001

(1ஆம் பரிசு)

14) யாழ் இலக்கிய வட்டப் பேரவைப் பரிசு - 2002 (ஜின்னாஹ்வின் இரு குறுங் காவியங்கள்)

15) கொழும்புத் தமிழ்ச் சங்கப் பரிசில் - 2005 (பண்டார வன்னியன் காவியம்)

16) தேசிய சாஹித்ய மண்டலப் பரிசில் - 2005 (பண்டார வன்னியன் காவியம்)

17) யாழ் இலக்கிய வட்டப் பேரவைப் பரிசில் - 2005 (பண்டார வன்னியன் காவியம்)

18) யாழ் இலக்கிய வட்டப் பேரவைப் பரிசில் - 2006 (திருநபி காவியம்)

19) தேசிய சாஹித்ய மண்டலப் பரிசில் - 2010 (தீரன் திப்பு சுல்த்தான் காவியம்)

20) எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய - 2010 தமிழியல் விருது (தீரன் திப்பு சுல்த்தான் காவியம்)

21) 2011ஆம் ஆண்டின் யாழ் இலக்கியவட்டப் பரிசு

22) கிழக்கு மாகாண இலக்கியப் பரிசு.

23) வாத்தியார் மாப்பிள்ளை காவியம்

பெற்ற கௌரவங்கள்

1) 1992ல் சென்னை தமிழ் இலக்கியப் பேரவையால் கவிஞர் வைரமுத்துவினால் மஹ்ஜபீன் காவியம் ஆய்வுரை செய்யப்பட்டு அவராலும், நாவலா சிரியர் ஹஸன் அவர்களாலும் பொன்னாடை போர்த்து கௌரவம் செய்யப் பெற்றது.

2) 1994ல் இலங்கை கலாசாரஅமைச்சு ஷம்ஸ்"ல் ஸ்"ஹாரா(கவிக்கதிரோன்) பட்டமளித்துக் கௌரவம் செய்தது.

3) 1996ல் பண்டாரவளை இந்து மாமன்றம் கவிமாமணி பட்டமளித்தது.

4) சென்னை தமிழகக் கவிஞர் கலைமன்றம் 1997ல் நடத்திய நான்காவது கவிஞர்கள் மாநாட்டில் உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் மூலம் "நற்கவிஞர்" பட்டயம் பெற்றமை.

4) 1999ல் ஆண்டு புதுச்சேரி கோட்டைக் குப்பத்தில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் தமிழ் மாமணி விருது வழங்கப் பெற்றமை.

5) 1999ல் இரத்தினபுரி சாமஸ்ரீ அமைப்பினால் "காவியத்திலகம்" பட்டம் வழங்கி கௌரவிக்கப் பட்டமை.

6) 2003ல் மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் கௌரவித்தளித்த தமிழ் முஸ்லிம் நல்லுறவு விருது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) 2005ம் ஆண்டுக்கான இலங்கைக் கலாசார அமைச்சின் "கலாபூஷணம்" விருது.

8) கலாபூஷண விருது பெற்றமைக்காய் கொழும்புத் தமிழ்ச் சங்கம் அளித்த கௌரவம்.

9) தேசிய சாகித்ய விருது பெற்றமைக்காய்க் கொழும்புத் தமிழ்ச் சங்கம் அளித்த கௌரவம்.

10) கல்முனை தடாகம் கலை இலக்கிய வட்டம் அளித்த "கலைத்தீபம்" பட்டம்.

11) ஸ்ரீ லங்கா முஸ்லிம் கலைஞர் முன்னணி வழங்கிய காப்பியக்கோ விருது - 2007.

12) நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம் தனது பவளவிழா நிறைவு விழாவில் அளித்த "காவியக் கவிமணி" வாழ்நாள் சாதனைவிருது — 2000.

13) துபாய் சங்கமம் தொலைக் காட்சி நிறுவனம் சார்பாய் அளிக்கப்பட்ட "கவிச்சக்கரவர்த்தி" விருது — 2008.

14) தமிழ்நாடு பன்னாட்டு இஸ்லாமிய இலக்கியக் கழகம் அளித்த "காப்பியக்கோ" விருது — 2010.

15) மன்னார் தமிழ்ச் சங்கம் அளித்த "தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளார் விருது" (வாழ்நாள் சாதனைவிருது) — 2010.

16) மேல்மாகாண தமிழ் சாகித்ய அமைப்பின் "கவியமிர்தன்" வாழ்நாள் சாதனை விருது — 2010.

17) மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் கௌரவித்தளித்த வாழ்நாள் சாதனைவிருது

இலக்கிய உலகில் வகித்த பதவிகளும் வகிக்கும் பதவிகளும்

01. சிந்தாமணி கவிதாவட்டத் தலைவர்

02. கொழும்புத் தமிழ்ச் சங்க இலக்கியச் செயலாளர்

03. தேசிய நூலக ஆவணவாக்கல் சபையின் நூண்ணாய்வுக் குழு உறுப்பினர்.

04. அரசாங்க மின்னியல் ஊடக ஆலோசனை சபை உறுப்பினர்

05. கொழும்பு கம்பன் கழக ஆட்சிக்குழு உறுப்பினர்.

06. இந்திய இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் இலங்கைப் பொறுப்பாளர்

07. திருமறைக் கலா மன்ற ஆலோசனைக் குழு உறுப்பினர்.

08. கொழும்புத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர்.

09. கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர்.

10. இலங்கை கலாசார அமைச்சின் நுண்கலைப் பிரிவு உறுப்பினர்

11. இலங்கை இஸ்லாமிய ஆய்வகத்தின் தலைவர்.

12. 2002ம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தால் நடத்தப்பட்ட உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் அமைப்புக் குழுத் தலைவர்.

13. தேசிய நூல் அபிவிருத்தி சபை உறுப்பினர்.

14. இலங்கை கல்வி அமைச்சினால் வழங்கப்பெற்ற இலங்கை ஜப்பான் சமாதான ஒன்றியப் பிரதிநிதித்துவம்.

15. திருமறைக் கலா மன்ற ஆளுநர் சபை உறுப்பினர்

16. அகில இலங்கை கவிஞர்கள் மன்ற துணைத் தலைவர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம்

பரீட்சை விதிகள்

(2010 – 2015)

1) பரீட்சைகளும் பாடங்களும்

ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்கம் (கல்வித் திணைக்களம், வடமாகாணம்) தமிழிலும் சமஸ்கிருதத்திலும் நடத்தும் பரீட்சைகள் பண்டித பிரவேச பரீட்சை, பாலபண்டித பரீட்சை, பண்டித பரீசை என மூவகைப்படும்.

இப்பரீட்சைக்குரிய பாடங்கள் பின்வருமாறு நான்கு பாட வகைகளாகப் பகுக்கப்பட்டிருக்கின்றன.

முதலாம் பாட வகை	இலக்கணம்
இரண்டாம் பாடவகை	இலக்கியம்
மூன்றாம் பாட வகை	கட்டுரையும் இலக்கிய வரலாறும்
நான்காம் பாடவகை	தெரிவுப் பாடமும் துணை மொழியும்

இப் பரீட்சைக்குத் தோற்றுவோர், முதன் மூன்று வகைப் பாடங்களுக்கும், நான்காம் பாட வகையிலுள்ள தெரிவுப் பாடங்களில் ஒன்றுக்கும், துணை மொழிகளில் ஒன்றும் தோற்றுதல் வேண்டும்.

2) வினாத்தாள்

அ) பண்டித பிரவேச பரீட்சையில் இலக்கியம், இலக்கணம், உரை நடையாக்கமும் இலக்கிய வரலாறும், தெரிவுப் பாடமும், துணைமொழியும் என்னும் நான்கு பாடங்களுக்கு ஒவ்வொன்றும் மூன்று மணிநேரம் விடையெழுதற்குரிய நான்கு வினாத்தாள்களுண்டு.

ஆ) பாலபண்டித பரீட்சையிலும் பண்டித பரீட்சையிலும் ஒவ்வொரு பாட வகைக்கும் இவ்விரண்டு வினாத்தாள்களாக எட்டு வினாத்தாள்கள் (ஒவ்வொன்றும் மூன்றுமணி நேரத்துக்குரியன) விடையெழுதப்படவேண்டும்.

3) விண்ணப்பிப்போரின் தகுதிகள்

பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் சங்கத்திலோ, சங்க முகவர்களாகப் பதிவு செய்த சங்கங்களிலோ தம்மை மாணவ அங்கத்தவராகப் பதிவு செய்திருத்தல் அவசியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) பண்டித பிரவேச பரீட்சைக்குத் தோற்றுவோர் பின்வருந் தகுதிகளில் ஒன்றையாவது பெற்றிருத்தல் வேண்டும்.

1) க.பொ.த. சாதாரண தரத்தில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியோடு தமிழ்மொழிப் பாடத்தில் சிறப்புச் சித்தியும் பெற்றிருத்தல்.

2) க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் எவையேனும் மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

ஆ) பாலபண்டித பரீட்சைக்குத் தோற்றுவோர், பின்வருந் தகுதிகளில் ஒன்றையேனும் பெற்றிருத்தல் வேண்டும்.

1) இச்சங்கத்துப் பண்டித பிரவேச பரீட்சையிற் சித்தி பெற்றிருத்தல் அல்லது சைவப்புலவர் அல்லது சைவசித்தாந்த பண்டிதராயிருத்தல்.

2) க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தமிழ்மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

3) பல்கலைக்கழகத் தேர்வில் சித்திபெற்றிருத்தல்.

4) பயிற்றப்பட்ட ஆசிரியராயிருத்தல்.

இ) பண்டித பரீட்சைக்குத் தோற்றுவோர், விண்ணப்பம் அனுப்புவதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்பே பால பண்டித பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (இப்பாடத்திட்டம் வெளிவருவதற்கு முன்பு பரீட்சைகளுக்குத் தோற்றியும் சித்தி பெறாதவர் மீண்டும் விண்ணப்பிப்பதற்கு இத்தகுதிப் பிரமாணங்கள் தடையாக இருக்கமாட்டா)

பாலபண்டிதப் பரீட்சையில் நூனசித்தி பெற்று அடுத்த ஆண்டில் நூனசித்தியை நிறைவு செய்தோர், அடுத்து வருகின்ற பண்டித பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர் **M.A.** சைவசித்தாந்தம் சித்தியடைந்தோர்க்கு, பாலபண்டித, பண்டித பரீட்சையில் சித்தாந்த பாடம் மட்டும் விலக்களிக்கப்படும்.

ஈ) தகுதிகள் உரிய ஆவணங்களினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றுவோர் செயலாளருடன் தொடர்பு கொண்டு அதற்குரிய படிவத்தினைப் பெற்று மாணவ அங்கத்தவராக பதிவு செய்தல் வேண்டும். ஆண்டு தோறும் சந்தாப்பணம் செலுத்த வேண்டும். முற்கூட்டியே மாணவ அங்கத்தவராகப் பதிவு செய்யாதிருப்பின் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாது.

4) பரீட்சைக் காலம்

இப்பரீட்சைகள் ஆண்டுதோறும் பெரும்பாலும் ஆவணி மாதத்தில் நடத்தப்படும். பரீட்சை நடப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணப்ப முடிவு தேதியும் பரீட்சைத் தேதியும் சங்கத்தினால் அவ்வப்போது அறிவிக்கப்படும்.

5) விண்ணப்பம்

அ) விண்ணப்பம் இச்சங்கத்தினால் வெளியிடப்பட்ட படிவத்தில் நிரப்பப்பட்டு உரிய கட்டணத்தோடு முடிவு தேதிக்கு முன் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். உரிய முறையில் அனுப்பப்படாத விண்ணப்பம் ஏற்கப்படமாட்டாது.

ஆ) பரீட்சைக்குத் தோற்றுவோர் மாணவ அங்கத்தவராகத் தம்மைப் பதிவு செய்தல் மிக அவசியமானது. அத்துடன் தம்மைப் பற்றிய முழு விபரங்களையும் சான்றிதழ்களையும் ஆதாரங்களையும் கோவைப்படுத்தித் தருதல் வேண்டும். (வரலாறு கட்டுரை வடிவிலும் அமையலாம்)

இ) விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி

கீழைத்தேய கல்விக் கல்லூரி , 223, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

6) பரீட்சைக் கட்டணம்

பிரவேச பரீட்சைக்கு ரூபா 500/-

பாலபண்டித பரீட்சைக்கு ரூபா 750/-

பண்டித பரீட்சைக்கு ரூபா 750/-

கட்டணங்கள் யாவும் இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் A/C 1090668 ஆம் இலக்கக் கணக்கில் வைப்பிலிட்டுப் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தோடு அனுப்புதல் வேண்டும்.

7) பரீட்சையினின்று விலகுதல்

மேற்குறித்த பரீட்சைகளுக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் பின்பு, பரீட்சைக்குத் தோற்றாதுவிட விரும்பினால் பரீட்சைத் தினத்திற்கு ஒரு மாதத்தின் முன்பே தம் விருப்பத்தைச் செயலாளருக்கு எழுதி அறிவித்தால் அடுத்த ஆண்டுப் பரீட்சைக்கு வேறு கட்டணமின்றி விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவர்.

பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

8) சித்திக்குரிய புள்ளிவிபரம்

ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் 30 சத வீதத்திற்கக் குறையாமலும், ஒவ்வொரு பாடவகைக்கும் 35 சத வீதத்திற்குக் குறையாமலும் புள்ளிகள் பெற்று, மொத்தத்தில் 75 சத வீதத்திற்குக் குறையாமற் புள்ளி பெறுவோர் முதற் பிரிவினராகவும், 60 சத வீதத்திற்கு குறையாமற் புள்ளி பெறுவோர் இரண்டாம் பிரிவினராகவும், 40 சத வீதத்திற்குக் குறையாமற் புள்ளி பெறுவோர் மூன்றாம் பிரிவினராகவும் கணிக்கப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவேச பரீட்சையில் முதன் மூன்று பாடங்களிலும் ஒவ்வொரு வினாத்தாளே உளதாகையால் பாட வகைப் புள்ளி பார்க்கப்படமாட்டாது.

9) நூனசித்தி

அ) ஏதாவது ஒரு பாடவகையிலுள்ள ஒரு வினாத்தாளில் அன்றேல் இரு வினாத்தாளில் அன்றேல் இரு வினாத்தாளிலும் சித்திக்குரிய புள்ளி பெறாதவர் அப்பாட வகையிற் சித்தி பெறாதவராகக் கருதப்படுவர். ஒரு பாடவகையிற் சித்தி பெறாமல் சித்திக்குவேண்டிய மொத்தப் புள்ளி வீதம் பெறுபவர்களும், முதன் மூன்று பாடவகையில் 40 வீதம் புள்ளி பெறுபவர்களும் நூனசித்தி பெறுவோராவார்.

ஆ) நூனசித்தி பெறுவோர் அதை நிறைவாக்க எடுக்கும் பாடங்களில் 40 சதவீதத்திற்குக் குறையாமல் புள்ளி பெறல் வேண்டும்.

இ) நூன சித்தியை நிறைவாக்க இருமுறை பரீட்சைக்குத் தோற்றலாம். இரண்டாம் முறையிலும் சித்திபெறாவிடில் பின்பு முழுப் பரீட்சைக்கும் தோற்றுதல் வேண்டும்.

ஈ) நான்காம் பாடவகையில் நூனசித்தி பெறுவோர் அப்பாட வகையில் உள்ள வேறு பாடங்களுக்குத் தோற்றியும் சித்தி பெறலாம்.

உ) நூனசித்தியை நிறைவாக்குவதற்கான விண்ணப்பம் பாதிக் கட்டணத்துடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

10. ஆய்வுக் கட்டுரை

அ) பண்டித பரீட்சையிற் சித்திபெறுவோர், மொழி, இலக்கியம், இலக்கணம், சமயம், தத்துவம், வரலாறு, நுண்கலை என்னுந் துறைகளில் ஒன்றில், தரப்படும் தலைப்பில் விரிவான ஆய்வுக் கட்டுரையொன்றை மூன்றுமாத காலத்துள் எழுதிச் சங்கத்திற் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்ற பின்பே அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

ஆ) ஆய்வுக் கட்டுரை சங்கத்தால் நியமிக்கப்படும் அறிஞரொருவரின் வழிகாட்டலில் எழுதப்படல் வேண்டும்.

இ) கட்டுரை எழுதத் தொடங்கு முன்பே பெற்றுக்கொண்ட தலைப்பினை உறுதி செய்து கட்டுரைத் தலைப்பு, அத்தியாயப் பிரிவுகள், பொருளடக்கம் என்னும் விபரங்களை எழுத்து மூலம் அறிவித்து அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். சங்கத்தால் நியமிக்கப்பெற்ற அறிஞர் தான் வழிகாட்டியாக இருந்தார் என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

11. சான்றிதழ்

சான்றிதழ்களும் பரிசுகளும் இச்சங்கத்து ஆண்டுக் கூட்டத்தில் வழங்கப்படும். அதற்கு முன் அவசர தேவைக்காகத் தற்காலிகமான சான்றிதழ் செயலாளரால் வழங்கப்படலாம். வழங்கப்பெறும் தற்காலிக சான்றிதழில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளரின் (தலைவரின்) கையெழுத்து பெறப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ஆரிய திராவிடபாஷாபிவிருத்திச் சங்கம்

நடப்பாண்டுக்கான நிருவாக அலுவலர் விபரம்

நிருவாக உறுப்பினர்

01. கல்விப் பணிப்பாளர், வடமாகாணம், பதவிவழித் தலைவர்.
02. ம.ந. கடம்பேசுவரன் பொதுச் செயலாளர், சங்கப்பண்டிதர்
03. சோ.பத்மநாதன் உபதலைவர்
    முன்னைநாள் அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை.
04. தி. பொன்னம்பலவாணர் சங்கப்பண்டிதர், பரீட்சைச்செயலாளர்
05. வ.ஆ. தங்கமயில் சங்கப்பண்டிதர், உப செயலாளர்
06. வே.ஞானகாந்தன் உப தலைவர்
    அதிபர், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி,
07. செ.சோதிப்பெருமாள் பொருளாளர்
    முன்னைநாள் அதிபர், சமாதான நீதவான்
08. வீ.பரந்தாமன் சங்கப் பண்டிதர்
09. செல்வி.இ.சியாமினி சங்கப் பண்டிதர்
10. கவிதா சங்கப் பண்டிதர்

அலுவலக உறுப்பினர்

11. சு. செல்லத்துரை கொழும்பு இணைப்பாளர், கலாபூசணம், சைவப்புலவர்.
12. த. சிவகுமாரன் வவுனியா இணைப்பாளர், ஆசிரியர் வவுனியா.
13. ந. கணேசமூர்த்தி சங்க ஊடகத் தொடர்பாளர்.
14. செ. பரஞ்சோதி மரபுவழித் தலைவர் சங்கப்பண்டிதர்.

ஆசிரியர் குறிப்புகள்.

பண்டித, பால பண்டித, பிரவேச பண்டித மாணவர்களுக்கான புதிய வகுப்புகள் ஆரம்பித்துள்ளன. வகுப்புகள் அனைத்தும் சங்கப் பண்டிதர்களால் நடாத்தப்படும். வகுப்பில் சேர விருப்புகிறவர்கள் பின்வரும் முகவரிகளுடன் தொடர்பு கொள்ளவும்.

பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன்
சங்கப் பொதுச் செயலாளர்
சிந்துபுரம், வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.
theorientalstudies@gmail.com

கலாநிதி 2015 இதழுக்கான ஆக்கங்களையும் மேற்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

எவர் ஓதுவாரையேனும், எத்துறவினரையேனும், எம்மதத் தவரையேனும், அரசினரையேனும் பற்றி இகழ்ச்சிக் குறிப்புத் தோன்ற எழுதப்படும் எந்த உரையும் கலாநிதியில் இடம்பெறாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் குறிப்புகள்.

பல பெரியோர்களது வாழ்த்துக்கும் தமிழன்பர்களாகிய சந்தாநேயர்களது அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரனாகி, 1942ஆ. சித்திரையில் உதித்த நம் 'கலாநிதி'ச் செல்வன் இளமதியென வளர்ச்சியுற்றுத் தன் கலைக் கதிர்களைப் **'கலாநிதி'** பரப்பித் தமிழகத்தில் விளக்கமுற்று நிலவினன். இடையிடையே நேர்ந்த காகிதப் பஞ்சமென்னுஞ் சிறுமுகில் மறைப்பினை நீக்கி உரிய காலத்து நான்கு முறை தோற்றஞ்செய்து ஓராண்டு நிறைவதாயினன். இரண்டாம் வயது தொடங்கவே காத்திராதவண்ணம் இராகுக் கிரக பீடை நேர்வதாயிற்று. 'காகிதக் கட்டுப்பாடு' என்னும் இராகுவின் வாயில் நம் செல்வன் அகப்பட்டான். இப் பாம்பின் வாயிலிருந்து விடுபட்டுப் பிழைப்பானோ! மாட்டானோ! என அன்பர்கள் ஐயுறும் நிலைமையும் உளதாயிற்று. எனினும், பெரியார்களது வாழ்த்தின் பயனாகவும், 'கலாநிதி' நேயர்களது அன்பென்னும் அமுதத்தின் வலிமையாலும் நம் செல்வன் பிழைத்துக்கொண்டான். இப்பத்திரிகையைத் தொடர்ந்து வெளியிடுதற்காகிய உத்தரவு வேண்டிச்—சென்ற சித்திரை (1943) யில் அனுப்பிய விண்ணப்பத்திற்குக் 'காகிதக் கட்டுப்பாட் டதிகாரி' (Controller of Paper) சென்ற ஆவணியில்தான், "வெளியிடலாம், அதுவும் 56 பக்கத்துக்கு மேற்படாமல்" என மறுமொழி யனுப்பினார்கள். அச்சிடுதற்காகிய காகிதத்திற்கு உத்தரவு அளித்தற்குப் பின்னும் ஒரு மாதம் போக்கினார்கள். ஆகவே, ஆறுமாத காலந் தாழ்த்து, 'சித்திரைக் கதிர்' இப்போது ஐப்பசியில் வெளிவரலாயிற்று. 'ஆடிக் கதிர்', 'ஐப்பசிக் கதிர்' என்பனவும் அடுத்த இரு மாதங்களிலும் வெளிவரும். இவ்வாறு நேர்ந்த தாமதத்திற்கு யாம் வருந்துவதோடு இக் குறையைப் பொறுத்தருளி, 'கலாநிதி'யைத் தளரவிடாது மேன்மேலும் ஆதரிக்கும் வண்ணம் தமிழன்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

(கலாநிதி, கலை 2 – கதிர் 1, சித்திரை – 1945)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org